
பக்கங்கள் 24

# புதுவிதி
PUTHU VITHI

அறிமுகவிலை 20/=

புதுமை : 01 | 19 நவம்பர் 2016 | விதி : 23



# மாவீரர் நாள்: கூறுபோடும் கும்பல்கள்



## ‘பீப்’ ஓதும் பிக்கு
## மட்டக்களப்பில் நடந்தது என்ன?



## நல்லூரில் கையேந்தும் விவசாயி



## இதற்காகவா போராடினோம்?
## வவுனியா கலாசார மண்டபத்தின் கதி

புதுவிதி
PUTHU VITHI

## தொடர்கதை




சயந்தன்

# ஆறாவடு

**க**ண்கள் மேலே செருகி இருந்து கொண்டு வர இவன் குப்புற விழுந்தான். இவனது குண்டியில் ஏறியிருந்து, கைகளை பின்புறமாக இழுத்துக் கட்டினார்கள். பிறகு உடல் தேயத் தேய 'ட்ரக்கிற்கு' இழுத்துக் கொண்டு போனார்கள். மூக்கால் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. தெருவின் சிறிதும், பெரிதுமான கற் குறுணிகள் தோலைக் கிழித்தபடி இருந்தன. இவன் கண்களை இறுக மூடிப் பல்லைக் கடித்து, வலியைத் தாங்க முயற்சித்தான். சாரம் இடுப்பில் இருந்து நழுவி சுருண்டு, கால்களிலிருந்தும் விலகியது. சாரம் கழன்றதைக் கண்ட சிப்பாய், இழுப்பதை நிறுத்தினான். இவனை மல்லாக்காகக் கிடத்தி, சேட்டையும் கிழித்து எறிந்தான். திரும்பவும் வெறும் 'பென்டரோடு' கொற, கொறவென்று இழுத்துக் கொண்டு போனான். அன்று இவனோடு தேவபாலுவும், இன்னும் ஏழு பேரும் பிடித்துச் செல்லப்பட்டார்கள்.

இந்திய ராணுவ முகாம்களில், மூக்கைச் சுழிக்கச் செய்யும் ஒரு வித எண்ணை மணம் பரவியிருக்கும். அது என்னவோ, சப்பாத்தி எண்ணை மணம் என்றார்கள். இவனை விசாரித்த முகாமிலும் அந்த மணம் இருந்தது. தலைப் பாகையும் தாடியும் வைத்த ஒருவன் இவர்களை விசாரணை செய்தான். அவனிலும் லேசாய் மணத்தது.இந்தியாவில் தலைப்பாகை வைத்தவர்களில், பாரதியையும், தாடி வைத்தவர்களில், திருவள்ளுவரையும் தவிர, வேறு ஆட்கள் இவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இவனது ஊரில், வேலாயுதம் பரியாரியின் வீட்டு விறாந்தைச் சுவரில் வரிசையாக இந்தியாக்காரர்களின் படங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றை நினைவில் கொண்டு வரப் பார்த்தான். ஹிப்பித்தலை வெட்டிய ஒரு அன்ரி, கண்ணாடி போட்ட மொட்டைத் தாத்தா, காவிக்கலரில் தலைப்பாகை கட்டிய மீசையில்லாத மனிதர், வெள்ளைத் தலைப்பாகை கட்டிய மீசை வைத்த ஒருவர்... ம்கூம்.. ஒருத்தர் கூட இந்த தாடிக்காரன் மாதிரி இருக்கவில்லை.

விசாரணையின் போது அவன் திரும்பத் திரும்ப ஒன்றைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

"இந்தியாவுக்கு கீழே கிடக்கிற ஐலண்டில இருந்து கொண்டு ஆட்ட மாடா? போடுறீங்க..."

அவன் விசாரணை வழிமுறைகளில் தீவிரம், மென்தீவிரம் என்று இரண்டு வகைகளிருந்தன. மென்தீவிரம் சிகரெட்டால் சுடுவதில் தொடங்கிய போது, தீவிரம் கொலையில் முடியலாம் என்று இவன் நம்பினான். அருகில் உட்கார்ந்து விசாரித்துக் கொண்டிருந்த போதே, பதறாமல் கொள்ளாமல், தனது புகையும் சிகரெட்டின் நெருப்புத்தணலை, அவன் இவர்களின் முதுகுத் தசைகளில் வைத்து அழுத்தினான். தோலின் மெல்லிய மயிர்கள் பொசுங்குகிற மணத்தை அப்பொழுது உணர முடிந்தது. தொண்டை கிழியக் கத்தாமல் அந்த வலியைத் தாங்க முடியாது.

முதல் நாள், பொழுது சாயும் முன்னதாக, மொத்த விசாரணையையும் தாடிக்காரன் முடித்து விட்டான். ஒவ்வொரு விசாரணைக்குப் பிறகும், அவன் தன் மேசைக்குப் போயிருந்து, மேசையில் தட, தடவென்று தட்டினான். அவனது கதிரைக்குப் பின்புறத்தே சுவரில் பெரியதொரு இந்திய வரைபடம் ஒட்டப்பட்டிருந்தது. கீழே தென்கிழக்கே இலங்கை ஒரு பக்கம் வீங்கிப் போய்க் கிடந்ததை இவன் கண்டான்.

ஒரு முழுநாளுக்குப் பிறகு விசாரணைக் கேள்வியை அந்த அதிகாரி மாற்றினான்.

"நீங்கள் சுடவில்லையென்றால் யார் சுட்டது?"

இந்தத் தடவை விசாரணை சந்திரனிலிருந்து ஆரம்பித்தது. அவன் "எனக்குத் தெரியாது" என்றான். தணன்று கொண்டிருந்த சிகரெட் ஒன்று அவனது நெஞ்சில் மூன்றாவது ஓட்டையைப் போட்ட போது "சேர்... சத்தியமா எனக்குத் தெரியாது சேர்.. நான் ஸ்டூடண்ற், மானிப்பாய் ஹிண்டுவில படிக்கிறன்" என்று கெஞ்சினான். இறுதியில் சந்திரனின் இடதுகைப் பெருவிரல் நகம் பிய்த்து எடுக்கப்பட்ட போது அவன் "வெற்றி தர்ன் சுட்டது" என்று வீரிட்டுக் கத்தினான்.

சந்திரனின் நகம், குறட்டுக்குள் சிக்குப் பட்டிருந்த அதே நேரத்தில், ஆனந்தியப்பு கடையில் வெற்றி, அரை றாத்தல் றோஸ் பாணும், கால் கிலோ வாழைப்பழமும் வாங்கி கொண்டு நின்றான். ஆனந்தியப்புவிற்கு பதற்றமாக இருந்தது.

"இன்னும் ஏன் இந்த ஏரியாவில திரியிறாய். இங்கை காலமை ரவுண்ட் அப். எல்லாப் பெடியங்களையும் பிடிச்சுக் கொண்டு போட்டாங்கள். இதுகளுக்க நிக்காதே. கெதியா எங்கையாவது போய்த் தப்பு..." என்று அவர் அவனை விரட்டினார். வெற்றி வாசலைத் தாண்டிய சம நேரத்தில் இராணுவ முகாமில் தாடிக்காரன் சந்திரனைக் கேட்டான் "நல்லது. மை டியர் ப்ரெண்ட், அப்படியே இங்கே யார் வெற்றியென்பதையும் சொல்லு...."

இப்பொழுது அவனது கையில், தோலில் வைத்து அழுத்தினால் வழுக்கியபடி வெட்டிச் செல்லக் கூடிய கூரான கத்தியொன்றிருந்தது.

இரவு ஏழு மணியாகியிருந்த போது, முகாமிற்கு சில தமிழ் இளைஞர்கள் வந்தார்கள். அவர்கள் விசிலடித்த படி, அங்கேயும், இங்கேயும் திரிந்தார்கள். தாடிக்காரனை அடிக்கடி 'சேர்' என்று விளித்தார்கள். மற்றைய சிப்பாய்களோடு பகிடிகள் விட்டுச் சிரிப்பது போலச் சிரித்தார்கள். இவர்களைக் கடந்து போகின்ற சமயங்களில், தங்களுக்குள் அர்த்தத்துடன் பார்த்துக் கொண்டார்கள். மாலைக்குப் பிறகு விசாரணை எதுவும் நடக்கவில்லை. இவன் முதுகைச் சற்று நிமிர்த்தி சுவரோடு சாய்ந்து கொள்ளப் பார்த்தான். இடுப்பை வளைத்த போது, நாரிக்குள் விண், விண்ணென்று வலி கண்டது. உடம்பு முழுவதும் புண்ணாகிக் கிடந்தது. தெருவில் இழுத்த போது, கல்லுகள் கிழித்த முழங்காற் புண்கள் ஓரளவு ஆறி அயர் மூடியிருந்தன. அவற்றைச் சுற்றி வட்ட மாகச் சொறியும் போது சுகமாயிருந்தது. இவன் சொறிந்தபடியிருந்தான்.

இரவு கவியத் தொடங்கிய போது, ஊர் அடங்கியிருந்தது. முகாமிலிருந்து இவர்களை நடத்தியும், இழுத்தும் வந்து, ஒவ்வொருவராக பஸ் ஒன்றினுள் ஏற்றினார்கள். சீற்றுகளில் உட்கார முடியாதிருந்தவர்களை, அவற்றுக் கிடையில் கிடத்தினார்கள். அப்படியானவர்களின் முனகல் ஒலிகள் கேட்டபடியிருந்தன. தமிழ் இளைஞர்களும், இன்னும் நாலைந்து இராணுவச் சிப்பாய்களும் ஏறிக் கொண்ட பிறகு 'ட்ரக்' வண்டி புறப்பட்ட திசையில் அராலிச் சுடலை விரிந்து கிடந்தது.

தனது இறுதி நாள் இதுவென்று, இவனுக்குத் தெளிவாக விளங்கியிருந்தது. ஒரு வெறித்த நிலைக்கு இவன் வந்து விட்டிருந்தான். அருகில் கை, கால் களைக் குறண்டிக் கொண்டு தேவபாலு அனுங்கிக் கொண்டிருப்பதைப் பார்க்க அந்தரமாயிருந்தது. அவனுக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் தான் திருமணம் முடிந்திருந்தது. சிறுவயதுக் காதலில், சாதிப் பிரச்சினையில், வீட்டார் ஒத்துக் கொள்ளாமல் பிரச்சினைப்பட, அவன் அவளை அழைத்துக் கொண்டு விசுவமடுவிற்கு ஓடியிருந்தான். நீண்ட காலத்துக்குப் பிறகு திரும்பிவந்த போது, தேவ பாலுவின் அப்பா, "தனது சாவுக்குக் கூட வீட்டு வாசற்படியை அவன் மிதிக்கக் கூடாது" என்று பிடிவாதமாக சொல்லி விட்டிருந்தார். அவனுக்கு ஒரு குழந்தை பிறந்த பிறகு, அப்பாவிற்குத் தெரியாமல் களவாக அம்மா வந்து போய்க் கொண்டிருந்தாள்....

(வலிகள் இன்னும்...)

## சூரியனை கவர்ந்து சென்ற மிருகம்

என் அன்புக்கினிய தோழர்களே
எனது காதலியிடம் சொல்லுங்கள்
ஆயிரக்கணக்கில் மனிதர்கள்
குழுமியிருந்த வனாந்தரத்திலிருந்து
ஒரு மிருகம் என்னை இழுத்துச்
சென்றுவிட்டது
கடைசியாக நான் அவளுக்கு
முத்தமிடவில்லை
அவளது கண்களின்
வழமையாயிருக்கும் ஒளியை நான்
காணவில்லை
கணங்களின் முடிவற்ற வலி
தொடர்கிறது
கடைசிவரை நட்சத்திரங்களையோ
புறாக்களையோ
எதிர்பார்த்த அவளுக்குச் சொல்லுங்கள்
எனது காலத்திலும் எனது
காலமாயிருந்த
அவளது காலத்திலும் நான்
அவற்றை காணவில்லை
என்னை ஒரு மிருகம் இழுத்துச்
சென்று விட்டது.

நான் இனிமேல்
எனது சித்திரவதைக் காலங்களை
அவளுக்கு ஞாபகப்படுத்த முடியாது
எனவே தோழர்களே
நான் திரும்ப மாட்டேன் என்றோ
அல்லது
மண்டையினுள் குருதிக்கசிவாலோ
இரத்தம் கக்கியோ
சூரியன் வெளிவர அஞ்சிய
ஒரு காலத்தில்
நான் செத்துப்போவேன் என்பது
பற்றிச் சொல்லுங்கள்.

நம்பிக்கயைற்ற இந்த வார்த்தைகள்
நான் அவளுக்கு பரிசளிப்பது
இதுவே முதற்தடவை எனினும்
அவளிடம் சொல்லுங்கள்
அவர்கள் எனது இருதயத்தை நசுக்கி
விட்டர்கள்
மூளையை நசுக்கிவிட்டார்கள்
என்னால் காற்றை
உணரமுடியவில்லலை.

-எஸ்போஸ்-



சிக்மலிங்கம் றெஜினோல்ட்



# வெற்றிலைக்கேணி: இராமன் முதல் பிரபாகரன் வரை

தரவையில் பாலூற்றிக்கொண்டிருந்தது, ஆனிப் பூரணை நிலவு. வெண்களியில் நிலவு பட்டுத்தெறிக்கும் போது, வானமும் வெண்ணிறமாகிறதைக் கவனித்தேன். வானத்துக்கும், பூமிக்குமிடையில் வெண் படிகம் நிறைந்திருப்பதைப் போலத் தோன்றியது. சைக்கிளை அருந்தவலிங்கம் உழக்கினான். நான் 'பாரில்' இருந்தேன். இது பாதித்தூரம்தான். மீதிக்கு நானே உழக்க வேணும். இப்படித்தான் ஆறு சைக்கிள்களிலும் பன்னிரண்டு பேர். ஆள் மாறி ஆள் மிதிக்கவேணும். காற்றின் திசையில் வழுக்கிச் சென்றன எல்லாம். சோளகமல்லவா. "மிதிப்பது பாதியென்றால் அழைப்பது மீதி" என்ற மாதிரி தன்னோடு கூட்டிச் சென்றது காற்று. திரும்பி வரும் போது எதிர்காற்று எலும்பை முறிக்கும். மண்டலாய்கட்டை அண்மித்திருப்போம். "அடேய், குழுவனடா.." என்றான் அப்பன். ஆறு சைக்கிள்களும் ஒரு கணத்தில் நிலை குத்தி நின்றன. கூர்ந்து பார்த்தேன். சந்தேகமேயில்லை குழுவன்தான். நெஞ்சு திக்கென்று ஒருகணம் திகைத்தது.

காட்டெருமைகள் அந்தப் பகுதியில் நிற்பது வழமை. ஆனால், எப்போதும் அங்கே வருமென்றில்லை. இன்று வந்து நிற்கின்றன. அதுவும் வழிக்குக் குறுக்கே. காட்டெருமை கலவரப்பட்டுக் கலைக்கத் தொடங்கினால், அவ்வளவுதான். கதை கந்தலாகிவிடும். காட்டில் என்றால் மரங்களில் ஏறித்தப்பலாம். இங்கே கலைத்தால்? இந்த வெட்ட வெளியில், அதிலும் இந்தக் களித்தரையில் எங்கே ஓடித்தப்புவது? நிச்சயமாக நாலுபேரையாவது ஆஸ்பத்திரிக் கட்டிலுக்கு ஏற்றாமல் விடாது. ஒன்றிரண்டு பேரை மயானத்தில் சேர்க்கும். குழுவன் என்றால் அப்படித்தான். கட்டாக் காலியல்லவா!

## சந்தேகம் தீர்ந்தது

"சிக்கினோம். சத்தம்காட்ட வேண்டாம். வேறு பாதைக்குத் திருப்பலாமா எண்டு பாருங்கோடா" என்றான் தணிந்த குரலில் யோகன். அவன் ஒரு பயந்தாங்கொள்ளி. ஒரு சிறிய அசுமாத்தம் தெரிந்தாலே பரபரப்பாகி விடுவான். "இல்லையடா.. அது புதர். மண்டலாய் கட்டைத் தெரியாதா... அதில வழி நெடுக்க ஈச்சம் புதர் இருக்குமே. அதான்டா.. நல்லாய்ப் பாருங்கோ" என்றான் சிவச்செல்வம். அவன் எதிலும் கொஞ்சம் நிதானமான பேர்வழி. எதற்கும் அவசரப்படவோ, அந்தரப்படவோ மாட்டான். கூர்ந்து கவனித்தோம். அது புதர்தான். "டேய், நல்லாய்ப் பாருங்கோடா, ஈச்சம் பத்தையோ எண்டு, குழுவனில போய் வலியப் புதைய வேண்டாம்" என்று மீண்டும் எச்சரித்தான் யோகன்.

"அப்ப நீ இஞ்ச இதிலயே இறங்கி நடந்து ஊருக்குப்போ, நாங்கள் கடற்கரைக்குப் போறம்" என்றான் மோகன். என்றாலும் எல்லோருக்குள்ளும் ஒரு மெல்லிய சந்தேகமும் உள்ளூரப் பதற்றமுமிருந்தது. புதருக்குப் பதிலாக குழுவன்தான் என்றால்...?

பாலாக நிலவு ஊற்றிக் கொண்டிருந்தாலும், தொலைவுக் காட்சியை தெளிவாகப் பார்க்க முடியாது. மெதுவாக முன்னேறினோம். சந்தேகமேயில்லை. சிவச்செல்வமே வென்றான். அவன் சொன்னதைப் போல, அது மண்டலாய்க்கட்டின் இரண்டு ஓரங்களிலுமிருக்கும் ஈச்சம் புதர்களேதான். அதைக் கடந்து, பறந்தோம். பத்து நிமிடத்தில் வெற்றிலைக்கேணிக் கடற்கரையில் சைக்கிளை நிறுத்தும்போது, இரவு ஒன்பது மணி. அந்தோனியார் கோயில் பெருநாளல்லவா. நிலவும், கடலும், மணலும் என்றிருந்த சூழலில் அந்தோனியார் அன்று அலங்கரிக்கப்பட்டு, எழுச்சியாக இருந்தார். தேவகீதம் இசைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. பின்னணியில், கடலின் மேலிருந்து எழுந்த நிலவு பனைகளின் மேலே நின்றது.

## சனக்கடலுக்குள் அந்தோனியார்

மணல் மேடுகளில், சனங்கள் கூட்டம் கூட்டமாக இருந்தனர். தேவாலயத்தின் உள்ளும் வெளியிலும் பெருங் கூட்டமே. குருநகர், நாவாந்துறை, மாதகல், யாழ்ப்பாண நகரம், தீவுப்பகுதி, பருத்தித்துறை, மயிலிட்டி, மன்னார், உடப்பு என்று நாலு திக்கிலிருந்தும் வந்திருந்த சனங்கள், அங்குமிங்குமாகத் திரிந்து கொண்டிருந்தனர். பெருநாள் முடிந்தால் மறுபடியும் அந்தப் பகுதி வெளிச்சிடும்.

பிறகு ஊரவர்கள் வந்தால்தான் உண்டு. மற்றும்படி ஞாயிற்றுக்கிழமை பூசைக்கு மட்டும் கொஞ்சம் அதிகமானவர்கள் வருவார்கள். வடக்கில் இந்து சமுத்திரமும், தேவாலயத்தின் ஓரமாகத்தெற்கில் வீதியும் இருப்பதால் சனப் புழக்கமிருப்பதுண்டு.

அன்றிரவு முழுவதும் நாங்கள் கடற்கரையிலும், அந்தோனியாரிடமும் மாறி மாறித்திரிந்தோம். இவ்வளவுக்கும் எங்களிலுள்ள பதினொரு பேரும் கிறிஸ்தவர்களில்லை. பொனிபஸ் மட்டுமே றோமன் கத்தோலிக்கன். அவனும் பெரிதாக சேர்ச், பூசை என்ற அக்கறையைக் கொண்ட ஆளில்லை. எங்களோடேயே இரவிரவாகத் திரிந்து கொண்டிருந்தான். விடிகாலை நான்கு மணிக்கு மீண்டும் ஊர் திரும்பினோம்.

வரும்வழியில்...

## அந்தோனியார் வைத்திருந்த 12 பயங்கரவாதிகள்

தரவையில் வரும்போது மேற்கே நிலவு தங்கத்தகடாக ஒளிர்ந்தது. அதற்குக் கீழே கறுப்பாக, எருமைக் கூட்டம் நிற்பதைப் போல எதுவோ கருமையாக. ஊன்றிக்கவனித்த யோகனுக்குப் புரிந்து விட்டது. அது குழுவன் கூட்டமில்லை. ஆமி ட்ரக்கும், கவசவண்டிகளும் என்று. லைற்றை அணைத்து விட்டு, தரவையில் வருகிறார்கள், கள்ள மாடு பிடிக்க வருவதைப்போல. 1983, 84 களில் கவசவாகனத்தில் இப்படி ரோந்து போவது படையினருடைய வழக்கம்.

அன்று வெற்றிலைக்கேணிக்குப் போகிறார்கள். எல்லோரும் சிதைந்தோடி அப்படியே தரையோடு படுத்துக்கொண்டோம். நிலவொளியில், சைக்கிள்கள் மினுக்கம் காட்டலாம் என்று, இரவுப் படுக்கைக்குக் கொண்டு சென்ற சாரத்தினால் மூடிவிட்டோம். எங்களைக் கடந்து சென்ற கவச வண்டிகள் அன்று வெற்றி லைக் கேணியில் 12 பேரைக் கைதுசெய்து கொண்டு சென்றன. "அந்தோனியார் 12 பயங்கரவாதிகளைத் தன்னோடு வைத்திருந்தார்" என்று அவர்கள் ஆனையிறவில், மறுநாள் விசாரணையின்போது சொன்னதாக அதில் கைதாகியிருந்த அன்ரனி மரியதாஸ் பிறகொருநாள் சொன்னான்.

## கண்ணாடி ஜீவனைக் கொன்ற இந்தியப்படை

வெற்றிலைக்கேணியில் படையினருக்கு எப்பொழுதும் ஒரு கண். புலிகளின் சில படகுகள், அங்கிருந்து அந்த நாட்களில் தமிழகத்துக்குப் போவதுண்டு. இன்னொரு காரணம், விடுதலைப் புலிகளில் கண்ணாடி ஜீவன் என்ற ஒரு போராளி இருந்தார். கைதானவர்கள் ஜீவனைப் பற்றிச் சொன்னதால், அவரைத் தேடி அடிக்கடி வந்தனர்.

ஒருநாள், வளவொன்றில் இரவு தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த எட்டுப் பேரைப் புலிகள் என்று பிடித்தனர். வன்னிக்கு வந்திருந்த நெடுமாறன் பிரபாகரனைச் சந்தித்த பிறகு, அவரை இந்தக் கண்ணாடி ஜீவனே, நெடுங்கேணி வரை கூட்டி வந்து அனுப்பி வைத்தார்.



(18 ஆம் பக்கம் பார்க்க...)



# பூதத்தீவுப் புதிர்கள் 23

செங்கை ஆழியான்



அவர்கள் புறப்பட்ட போது கானகமே அதிரும் படியான பெரும் சத்தம் ஒன்று எழுந்தது. அவ்வாறான சத்தத்தை அவர்கள் முன்னர் கோபுரந் தாங்கிப் பூதம் தங்கியிருந்த கோயில் அருகில் இருந்த போது கேட்டிருக்கிறார்கள்.

“கேப்பை மாடு கத்துவது போலவிருக்குது” என்றான் சீலன்.

“அதோ பாருங்கள்..” என்று ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினான் வேடன்.

அவன் சுட்டிக்காட்டிய பக்கத்தில் உயர்ந்த மரங்கள் செழித்து அடர்த்தியாக வளர்ந்திருந்தன. நாற்பதடிகள் வரையிலான உயர் மர உச்சிகளுக்கு மேல் உயர்ந்த நீண்ட கழுத்துடன் கூடிய ஒரு ஓணான் வடிவத் தலை தெரிந்தது. வெகு தூரத்தில் அது தெரிந்தாலும், உயர்ந்த மரங்களுக்கு மேல் தலையை உயர்த்தி நிற்கும் அம்மிருகத்தின் வடிவத்தின் பருமனை அவர்களால் அனுமானிக்க முடிந்தது.

‘ஐயோ’ என்று அரவிந்தன் அலறினான்.

“அழிந்துபோன பண்டைய மிருகங்களில் ஒன்று.. டைனோசார் எனப்படும் இராச்சத விலங்கு அது இன்றும் இருக்கிறதா?...” என்று வியந்தான் வசந்தன்.

“ஆமாம்.. இராச்சத விலங்குதான். புத்தகத்தில் நான் படித்திருக்கிறேன்” என்றாள் மாலா.

“அதன் கழுத்து மட்டுமே இரண்டு பனை உயர மிருக்கும் போல இருக்கிறது” என்றான் பயத்துடன் சீலன்.

“நான் அதை அருகில் பார்த்திருக்கிறேன். இராச்சத வடிவம். அதன் முன் இந்தக் கோபுரந்தாங்கிப் பூதம் பூனை அளவு. அப்படி ஒரேயோரு மிருகம் இத்தீவில் இருக்கின்றது. பயப்படத்தேவையில்லை. பார்த்தால் பயம் வரும். ஆனால் ஒருவருக்கும் தீங்கு செய்யாது. அது தாவர உண்ணி. மாமிச பட்சணியல்ல” என்றான் கமக்காரன்.

“அழிந்துபோன விலங்குகள் இத்தீவில் எப்படி வந்தன?” என்று சந்தேகப்பட்டான் ரகு.

“யாருக்குத் தெரியும்..?”

“இதென்ன பெரிய அதிசயம். நான் ஒற்றைக்கண் மனிதர்களை இத்தீவில் சந்தித்திருக்கிறேன். அவர்கள் வானத்தைச் சுட்டிக்காட்டித் தாங்கள் அங்கிருந்து வந்ததாகக் கூறுகிறார்கள். அவர்கள் எங்கள் மாதிரிப் பாதங்களை நிலத்தில் ஊன்றி நடப்பதில்லை. காற்றில் மெதுவாக மிதப்பார்கள். பாதங்கள் நிலத்தில் பதியா. அவர்களை மிக அருகில் நான் பார்த்தேன். அவர்களின் இமைகள் எங்களைப் போல இமைப்பதில்லை..” என்றான் சர்வசாதாரணமாக வேடன்.

அவன் கூறியவற்றை வியப்புடன் அவர்கள் கேட்டனர்.

“வேறு கிரகங்களில் இருந்து இங்கு வந்தவர்களாக இருக்குமோ?”

“அவர்களின் பாதங்கள் நிலத்தில்படாவிட்டால்... பிசாசுகளுக்குத் தான் பாதங்கள் நிலத்தில் படாதாம். பாட்டி சொல்லியிருக்கிறார்” என்றாள் கிலியுடன் சசி.

“அப்படியிருக்காது.. அவர்கள் வாழ்ந்த கிரகத்தின் ஈர்ப்பு பூமியின் ஈர்ப்பிலும் பார்க்கக் கூடுதலாக இருந்திருக்கும்.. நாங்கள் சந்திரனில் நடப்பதாயின் மிதந்து நடப்பது போல அவர்களும் இங்கு நடக்கலாம்..” என்று வசந்தன் விளக்கினான்.

“அவர்கள் கண் இமைக்க மாட்டார்களாமே? இமையவர்களோ?”

“விண்ணிலிருந்து வந்த தேவர்களாக்கும்..?”

“அவர்களிடையே யானை முகத்துடன் கூடிய ஒரு மனிதனையும் நான் கண்டேன்..” என்றான் வேடன்.

“பிள்ளையாரையா? கடவுளே. அவரை நான் பார்க்க வேண்டுமே” என சசி துடித்தாள்.

வேடன் தருகின்ற செய்திகள் உண்மையில் வியப்பினைத்தான் அனைவருக்கும் தந்தன. வசந்தன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

“புறப்படுங்கள்.. இரவு வருவதற்குள் நாங்கள் புதிர்ப் பூதத்தின் இருப்பிடத்தை அடைந்துவிட வேண்டும். இங்கு எங்காவது தங்கினால் இந்த இராச்சத விலங்கு எக்கச்சக்கமாகத் தன் பாதங்களைத் தெரியாமல் எங்கள் மீது பதித்துவிடலாம். எங்கள் பாதங்களில் எறும்புகள் அகப்பட்டு நசிவதுபோல அதன் பாதங்களில் நாங்கள் பலியாக நேர்ந்துவிடும்.. நடவுங்கள்” என்றபடி கோபுரந்தாங்கி முன்னே செல்ல அனைவரும் அதனைத் தொடர்ந்தனர்.

சூரியன் மேற்கு வானில் சரியத் தொடங்கிய வேளையில் அவர்கள் ஒரு பாலை நிலத்தினை அடைந்தனர். கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் மணல் பரந்து கிடந்தது. மணல் குன்றுகள் பெரும் தொடர்களாக ஆங்காங்கு காணப்பட்டன. மரம், செடி, கொடி எதுவும் தெரியவில்லை. வறண்ட பாலை வெளி. நீர் இருப்பதற்கான அறிகுறி எதுவும் தெரியவில்லை.

“இந்தப் பாலை நிலத்தைக் கடக்க வேண்டுமா?” என வசந்தன் கேட்டான். குரலில் சற்றுத் தயக்கம் காணப்பட்டது. மணல் கால் வைத்தால் சுட்டுவிடும் போலத் தகித்தது.

“பயணத்தை ஆரம்பித்தாகிவிட்டது. வழியில் எதிர்ப்படும் துயரங்களைக் கண்டு பயப்படக்கூடாது வாருங்கள்..” என்றபடி கோபுரந்தாங்கி அவர்களை வலிந்து இழுத்தடித்தபடி நடந்தது.

“சிறிது தூரம் சென்றால் ஒரு நீச்சல் தடாகம் குறுக்கிடும்” என்றான் கமக்காரன்.

“பாலை நிலத்தில் நீச்சல் தடாகமா?” என்று அரவிந்தன் கேட்க,

“அது புதிர்ப்பூதத்திற்குரியது” என்று வேடன் சொன்னான்.

“பாலை நிலப் பசுஞ்சோலையை அது தனது நீச்சல் தடாகமாக்கி வைத்திருக்கிறது” என்றான் கமக்காரன்.

“புதிர்ப்பூதம் எப்படியிருக்கும்?” என்று சீலன் கேட்டான்.

“என்னைப்போல இரு மடங்கு இருக்கும்” என்றது கோபுரந்தாங்கி.

சூரியன் அடிவானில் சரிகின்ற வேளையில் அவர்கள் பாலைநிலப் பசுஞ்சோலையைக் கண்டனர். அந்தப் பசுஞ்சோலையில் கரிய பெரிய தொரு உருவம் ஒன்று நாடியில் கைவைத்தபடி ஏதோ பலத்த சிந்தனை வயப்பட்டதாக இருப்பது தெரிந்தது. பார்த்தவுடனேயே அதுதான் புதிர்ப்பூதமாக இருக்கும் என எல்லோரும் கண்டு கொண்டனர்.

“அது மாமிச பட்சணியா, கோபுரந்தாங்கி?” என ரகு பயத்துடன் கேட்டான்.

“எனக்குத் தெரியாது.. ஆனால் அது நிச்சயமாக நரமாமிச பட்சணி அல்ல” என்றபடி கோபுரந்தாங்கி ‘ஹோவென’ சம்பந்தமில்லாது சிரித்தது. அதன் சிரிப்பு அப்பாலை எங்கும் ஒலித்தது. நாடியில் கைவைத்தபடி அமர்ந்திருந்த புதிர்ப்பூதம், “யாரடா அவன் சிரித்தது.. இப்படிப் பலமாகச் சிரித்து என சிந்தனையைக் கலைத்தவன் யார்?” எனக் கேட்டபடி எழுந்து நின்றது. பனை மரம் எழுந்து நின்றது மாதிரி அவர்களுக்குத் தெரிந்தது.

“அது நானடா அண்ணா கோபுரந்தாங்கி”

“அட நீயாடா தம்பி?” என்றது புதிர்ப்பூதம்.

முன்னே அவர்களை நோக்கி வந்த புதிர்ப்பூதம், பாசத்துடன் கோபுரந்தாங்கியைத் தூக்கித் தன் இடுப்பில் வைத்துக்கொண்டது.

(புதிர்கள் நீளும்)

## தகுதிக்கேற்ப ஆசை வேண்டும்

ஒரு தோப்பில் ஒரு மயில் வசித்து வந்தது. அந்த மயிலுக்கு தன் அழகை எண்ணி அதிக பெருமை. ஒரு நாள் அந்த தோப்புக்கு எங்கிருந்தோ வந்து சேர்ந்தது குரங்கு ஒன்று. அந்தக் குரங்கிடம் தன் தோகையை காட்டி பெருமைப்பட்டு கொண்டது மயில். அதற்கு குரங்கோ, “மயிலே! இந்தத் தோகையையும் அதை விரித்து நீ ஆடுவதையும் பார்க்க மனிதர்கள் உன்னைத் தேடி வர வேண்டும். ஆனால் அந்தக் குயிலைப் பார். தினமும் பறந்து மனிதர்கள் இருக்கும் பகுதிக்கு செல்கிறது. அழகாகப் பாடி மனிதர்களைச் சந்தோசப்படுத்துகிறது. மனிதர்கள் தங்கள் வீட்டுக்குள் இருந்தே அதன் அழகிய குரலைக் கேட்டு மகிழ்கின்றனர். அவர்களைச் சந்தோசப்படுத்தி விட்டு மீண்டும் மாலையில் தன் கூட்டுக்கு வந்து விடுகிறது. உன்னை விட அந்தக் குயிலே இறைவனின் அற்புத படைப்பு” என்றது.

இதை கேட்டு ஆத்திரமடைந்த மயில், தானும் குயிலைப் போல நல்லபெயர் வாங்க நினைத்தது. மறுநாள் மனிதர்கள் வாழும் பகுதிக்கு சென்று கத்த தொடங்கியது. அதன் கர்ண கடூர சத்தம் பொறுக்க முடியாமல் மனிதர்கள் அந்த மயிலை அடித்து தோப்புக்குள் விரட்டினார்கள்.



## குட்டீஸ் பரிசுப் போட்டி – 19

கடந்த 14.11.2016 அன்று வானில் தோன்றிய சுப்பர் மூன் போன்று இனி எத்தனை வருடங்களுக்குப் பிறகு நிலவு பெரிதாகத் தோன்றும்?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

குட்டீஸ் பரிசுப்போட்டி – 19

முடிவுத்திகதி: 29.11.2016

குட்டீஸ் பரிசுப் போட்டி – 17 முடிவுகள்

விடை: காந்தள்

(சரியான விடை எதுவும் அனுப்புப்படவில்லை)

புதுவிதி
PUTHU VITHI

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com
T.P: 021 493 7777

## படைகளுக்கே முன்னுரிமை

அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத்திட்டத்தின்படி, இனிமேல் ஏ.ரி.எம். (தன்னியக்க பணப்பரிமாற்றக்) கருவிகளில் பணத்தை எடுக்கும் ஒவ்வொரு தடவையும் , 10 ரூபாய் அறவிடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் இந்தச் சேவைக்காக 5 ரூபாவே அறவிடப்பட்டு வந்தது. அதையே நல்லாட்சி அரசு இரட்டிப்பாக்கியிருக்கிறது. இது தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் கேள்வியெழுப்பியபோது, "மக்களின் சேமிப்புப் பழக்கத்தை அதிகரிக்கவே இப்படி ஏ.ரி.எம் சேவைக்கான கட்டணத்தை இரு மடங்காக்கினோம்" எனத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க. சிகரெட், மதுபானங்கள் என்பவற்றின் விலையை உயர்த்தியபோதும், "மக்களிடையே மதுப்பாவனை, புகைத்தல் என்பவற்றைக் குறைக்கவே விலையை உயர்த்தினோம்" என்று சொன்னது போலவே, ஏ.ரி.எம் கட்டணத்தையும் உயர்த்திவிட்டு பொருத்தமேயில்லாத "சேமிப்பு பழக்க அதிகரிப்பு" என்னும் சாட்டினை சொல்லத் தொடங்கியுள்ளது அரசு.

மதுபாவனை,புகைத்தல் என்பவற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால்,அவற்றின் இறக்குமதிக்கு தடை விதிக்கலாம் அல்லது மது பாவிப்போருக்கு எதிராக கடுமையான தண்டனைகளை வழங்கலாம். அதை விட்டுவிட்டு அவற்றின் விலையை அதிகரிப்பது, குடிகாரர்கள் மதுவுக்கும்,. புகைத்தலுக்கும் செலவிடும் பணத்தொகையினை அதிகரித்து, குடும்பச் செலவுக்காகக் கொடுக்கும் பணத்தைத்தான் குறைக்கச் செய்யும்.மாறாக மதுபாவனையோ, புகைத்தலோ குறையாது. அதுபோலவே சேமிப்பு பழக்கத்தை அதிகரிக்க வேண்டுமாயின் வங்கிகளில் சேமிப்புக்கு வழங்கப்படும் வட்டிவீதத்தை அதிகரித்தாலே போதும். மக்கள் விழுந்தடித்துக் கொண்டு, தங்கள் சேமிப்பை உயர்த்த ஓடிவருவார்கள். அதைவிடுத்து ஏ.ரி.எம்மில் பணத்தை எடுப்பதற்கான கட்டணத்தை அதிகரித்தால் என்ன நடக்கும்? உதாரணமாகத் தற்போது ஒருதடவையில் ஆயிரம் ரூபாவை ஏ.ரி.எம்மில் எடுத்தவர்கள், எதற்கு இன்னொரு முறை எடுத்து இன்னொரு 10 ரூபாவை அநியாயமாக்க வேண்டும் என்ற நினைப்பில் தம்முடைய கணக்கில் இருந்து இரண்டாயிரத்தை எடுக்கவே நினைப்பார்கள். இப்படி ஒவ்வொருவரும் முன்னைய காலங்களில் மீளப்பெற்றதை விடவும் இனி அதிக தொகைப் பணத்தை மீளபெறுவதால், இருந்த சேமிப்பும் கரையுமே தவிர உயராது.

இப்படி ஏ.ரி.எம்மில் பணத்தை மீளப்பெறும் போது அறவிடப்படும் கட்டணத்தை இரட்டிப்பாக்கியமைக்கு இன்னொரு காரணமும் சொல்லப்படுகின்றது. மேலதிகமாக அறவிடப்படவுள்ள ஒவ்வொரு 5 ரூபாவும் படையினரின் நலனுக்காகச் செலவிடப்படவுள்ளதாம். தற்போது இலங்கையில் வங்கிக்குச் சென்று பணத்தை மீளப் பெறுபவர் களை விடவும், ஏ.ரி.எம்மில் பணமெடுப்பவர்களே அதிகம். அப்படிப்பட்ட நிலையில் அவர்கள் ஒவ்வொருவரும் பணத்தை மீளப்பெறும்போது, பெரும்தொகையான நிதி கிடைக்கும். அதனையே படையினரின் நலனோம்புக்காக பயன்படுத்த நல்லாட்சி அரசு திட்டமிட்டுள்ளது.

போர் முடிந்த ஒரு நாட்டில் அபிவிருத்திக்கே முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். அதை விடுத்து போர்க்காலத்தைப் போன்று, இப்போதும்-போர் முடிந்து 7 வருடங்கள் கடந்த பின்னும் - படையினரின் நலனுக்கே முன்னுரிமை கொடுத்து செயற்படுவது அரசு மீதான சந்தேகத்தையே அதிகரிக்கின்றது.

போர் நடந்த பகுதிகளைப் புனரமைத்தல், கல்வி, வீதி அபிவிருத்தி, மரநடுகை என்று ஏராளமான திட்டங்கள் போதிய நிதியின்றி முடங்கிக் கிடக்கின்றன. படையினருக்கு இந்த நிதியைப் பயன்படுத்தாமல் இப்படியான உருப்படியான திட்டங் களுக்கு அதனைப் பயன்படுத்தினால். ஏ.ரி.எம் இயந்திரத்தில் காசு எடுக்கும் போது - ஒவ்வொரு 10 ரூபா வெட்டப்படும் போதும் - ஏற்படும் எரிச்சல் கொஞ்சமேனும் குறையுமல்லவா.

●●●

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

வர்சி



# வாளோடிருத்தல் எதிர் வாளாதிருத்தல்

அண்மைக்காலமாக இலங்கையில் அரசியல்வாதிகள், முன்னாள், இந்நாள் இராணுவ அதிகாரிகள் மற்றும் யாழ்ப்பாண மக்கள்வரை, பேசுபொருளாக உள்ள சொல் 'ஆவா' குழு. யாழ்ப்பாணத்தில் அதிகரித்த வாள்வெட்டு சம்பவங்களை அடுத்து, கொழும்பிலிருந்து விசேடமாக வருகை தந்த ரி.ஐ.டி எனப்படும் விசேட பிரிவினரால், இருபதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்கள் கொழும்பு நாலாம் மாடிக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் சிலர் நீதிமன்றில் நிறுத்தப்பட்டு, விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளனர். எனினும் வாள்வெட்டு குறைந்தபாடாகத் தெரியவில்லை. வாள்வெட்டுக் கும்பலைச் சேர்ந்தவர்கள் என்று, யாழில் கைது நடவடிக் கைகள் நடக்கும் போதே வட்டுக்கோட்டையில் ஒரு வாள்வெட்டு சம்பவம் நடைபெற்றுள்ளது.

ஆனால் "இந்த வாள்வெட்டு குழுவினர் என கூறப்படுவோரை, கொழும்பிலிருந்து வந்த குழுவால்தானா கைதுசெய்யமுடியும்" என்ற கேள்வி எழுவது இயல்பே. "அப்படியென்றால் யாழிலுள்ள பொலிஸார் கையாலாகாதவர்களா?" என்ற இன்னொரு உபகேள்வியும் கூடவே வருவதைத் தவிர்க்கமுடியவில்லை.



இந்த நிலையிலேயே "ஆவா குழுவை முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் அவருக்கு உடந்தையாக இருந்த இராணுவ அதிகாரியுமே உருவாக்கினர். அதற்கான ஆதாரங்கள் என்னிடமுள்ளன'' என அமைச்சர் ராஜித சேனாரத்ன தான் நடத்தும் ஒவ்வொரு ஊடகவியலாளர் மாநாட்டிலும் தெரிவித்து வருகின்றார். ஆனால் இதற்கு மறுத்தான்போடுவது போல், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவும், முன்னாள் இராணுவத் தளபதி தயாரத்னாயக்கவும் தமது கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். ஆனால் மார்ஷல் சரத் பொன் சேகாவோ "ஆவா குழுவுடன் கோத்தாவிற்கு தொடர்பு" என்ற ராஜிதவின் கூற்றை வழி மொழிகிறார்.

அப்படியென்றால், இவர்களில் யார் சொல்வது சரி அல்லது யார் சொல்வது பிழை? மக்களின் பிரதிநிதிகளும், ஆட்சியாளர்களும், இராணுவ அதிகாரிகளும் தமக்குள்ளே சண்டையிட்டு கொள்வது எதைக் காட்டுகிறது? அப்படியானால் அவர்களுக்குக் கூட உண்மை நிலைவரம் எதுவென்று தெரியவில்லையா? யாழ் குடா நாட்டில் இவ்வளவு பெரிய எண்ணிக்கையான படையினர் இருந்தும், தொடர்ந்தும் வாள் வெட்டு கும்பல்கள் சுதந்திரமாக நடமாடித் திரிவதன் மூலம், இந்த வாள்வெட்டுக் குழுக்களின் பின்னணியில் ஒரு மறை கரம் செயற்படுவதை அமைச்சர் ராஜிதவின் கூற்றிலிருந்து விளங்கிக் கொள்ள முடியும். அவ்வாறெனில் அந்த மறை கரம், யாழ்ப்பாணத்தை எப்பொழுதும் கொதி நிலையில் வைத்திருக்கும் விருப்பத்திலேயே, இப்படியான சமூக ஒவ்வாமைக் குழுக்களை உற்பத்தி செய்திருக்க வேண்டும்.

முன்னொரு காலத்தில் தனது நலனுக்காக, இந்தியா, தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்து இலங்கையை ஒரு கொதி நிலைக்குள் வைத்திருந்தது. அதைப்போலவே உள்ளது தற்போதைய 'ஆவா குழு' உருவாக்கச் செயற்பாடும். உண்மையில் அமைச்சர் ராஜிதவிற்கு விபரங்கள் தெரிந்தே இந்தக் கருத்தை கூறியிருப்பின், அதனை அவர் பொலிஸாருக்கு ஆதாரங்களுடன் தெரிவிக்க வேண்டும். அல்லது பொலிஸார் அவரிடமிருந்து விபரங்களை பெறவேண்டும். இதை விடுத்து ராஜிதவின் கருத்தும் 'புலி வருகுது' கதையாகத்தான் இருக்குமென்றால் ஏனையவர்களின் கூற்றுப்படி அவர் பொய்யராகவே கருதப்படுவார்.

தமிழ் மக்கள், கடந்த முப்பது வருடங்களுக் கும் மேலாக, நேரடியாகவே யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள். இதனால் அவர்கள் பட்ட துன்ப துயரங்கள் ஏராளம்.தற்போது யுத்தம்-முடிந்த நிலையிலும், பேரினவாதிகள் அவர்களை நிம்மதியாக இருக்க விடுவதாக இல்லையென்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. யுத்தம் முடிவடைந்த பின்னர், யாழில் கிறிஸ்பூதம் என்ற ஒன்று மக்களை அச்சத்திற்குள் தள்ளியது. அதன் பின்னர் கொள்ளைச் சம்பவங்கள் மிக மோசமாக அரங்கேறின. தற்போது, களத்தில் வாள்வெட்டு கும்பல். எங்கள் கைகளை வைத்தே, எங்கள் கண்களை குத்த வைக்கும் முயற்சி மிகவும் சாமர்த்திய மாக நடைபெறுகிறது. அவ்வாறெனில், தமிழ் மக்கள், நிம்மதியாக இவ்வளவு இழப்புகளுக்குப் பின்னரும் இருக்க ஏதோ ஒரு சக்திக்கு விருப்பமில்லை என்பது தெட்டத் தெளிவாகவே விளங்குகின்றதல்லவா? எங்களைத் தொடர்ந்தும் அச்சத்தின் பிடியில் வைத்திருப்பதன் மூலம், அரசியல் ஆதாயம் தேடுவதுதான் அந்த சக்தியின் நோக்கம்.

நல்லாட்சி என்று கூறப்படும் ஆட்சியில் தான், தமிழர் நிலங்களில் புத்தர்சிலைகளும் அத்துமீறிய குடியேற்றங்களும் மிகவும் மோசமாக இடம்பெற்றுவருகின்றன. அதைப் போலவே பத்தோடு, பதினொன்றாக வாள் வெட்டுக் கும்பல்களின் உருவாக்கம் பற்றியும், அவற்றின் பின்னணி பற்றியும் இனியும் வாளாதிருப்பதே நம் வாழ்வாகிவிட்டது.




## பாடும் திமிங்கலங்கள்


திமிங்கலங்கள் பாடக்கூடியவை என்று யாராவது சொன்னால், நீங்கள் நம்பத்தயாரா? இவை இரகசியமாகப் பாடுவதன் மர்மம் இப்பொழுது ஆய்வுகள் மூலம் துலங்க ஆரம்பித்துள்ளது. தண்ணீருக்கு அடியில் இந்த இராட்சத உயிரினங்கள் நீந்தும்போது, 650 அடிகள் தூரத்தில் உள்ள தன் நண்பருடன் உரையாட அதிர்வலைகளை அனுப்பி வைக்கின்றன. அவை எப்படிப் பாடுகின்றன? ஏன் பாடுகின்றன? என்பது விஞ்ஞானிகளுக்கு புரியாத புதிராக இருந்தாலும், இந்தத் திமிங்கலங்களின் பாட்டு தண்ணீருக்கு அடியில் சிறிய அதிர்வலைகளை உண்டாக்குவதை உறுதிப்படுத்தி இருக்கின்றார்கள். இது நீண்ட தூரத்திலுள்ள சகாக்களைக் கண்டுபிடிக்க உதவுகின்றது. எனினும் மனிதனுடைய நடமாட்டம் இந்த விடயத்தில் இடையூறாக அமைந்து விடுகின்றது என்கிறார்கள்.

இந்த அதிர்வலைகள் 200 மீற்றர் (656அடி) தூரம் பயணிக்கும் என்று ஆய்வுகள் சொன்னாலும், நிஜத்தில் இந்த அதிர்வலைகள் பல மடங்கு தூரம் வரை செல்லும் என்பது தெரிய வந்துள்ளது.

ஒரு திமிங்கலத்தின் காது எலும்புகள் அமைந்திருக்கும் விதத்தைப் பார்க்கையில் அலை அதிர்வுகள் எப்படி ஒரு திமிங்கலத்தின் செவித் திறனை அதிரிக்க வைக்கின்றது என்பது புலனாகி விடும்.

நீர் யானைகளும், தண்ணீருக்கடியில் அதிர்வலைகள் மூலம் கேட்கும் திறனைக் கொண்டுள்ளன. தண்ணீர் மட்டத்திற்கு மேலே காதுகள் இருந்தாலும், இவற்றால் கிரகிக்க முடியும். யானையின் கதையோ வேறு. இவை பூமிக்கு அடியிலிருந்து கால்கள் ஊடாகக் காதுக்கு வந்து சேரும் ஒலி அலைகளைக் கிரகித்து தகவலைக் கிரகித்துக் கொள்கின்றன.

தண்ணீருக்கு அடியில் மனிதர்களால் எதையும் கேட்டறிய முடிவதில்லை. கப்பல்களின் அசைவு, தண்ணீருக்கடியிலான எண்ணெய் அகழ்வு என்று பல நிகழ்வுகள் இடம் பெற்றாலும் மனிதனுக்கு அது இடைஞ்சலாக இருப்பதில்லை.



## ஆடம்பரக் கார் உற்பத்தியில் வீழ்ச்சி...

பணம் தாராளமாகப் புழங்குபவர்கள் எப்பொழுதுமே விலை அதிகமான கார்களை வரிசையாக வாங்கி, முத்திரை சேகரிப்பது போல சேகரிப்பது வழமை.



நல்ல சொகுசுக் கார்களை உற்பத்தி செய்வதில் பிரிட்டனும், உலக நாடுகளோடு போட்டி போட்டபடி, தரமான கார்களை உற்பத்தி செய்து வருகின்றது.

இந்த வருடம் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட கார்களை அது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருந்தாலும், கடந்த மாதம் அதன் உற்பத்தி வீழ்ச்சியைக் கண்டுள்ளது. இந்த வருடம் 1.3 மில்லியன் கார்களை உற்பத்தி செய்து, 77 வீதமான தொகையைப் பிரிட்டன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. செப்டெம்பர் முடிவில் 1,000,642 பிரித்தானிய கார்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளன.

ஆனால் ஏற்றுமதிகள் அதிகரித்துள்ள அளவு, உள்நாட்டுப் பாவனை அதிகரிக்கவில்லை என்கிறது ஒரு கார் நிறுவனம். பிரித்தானிய கார்களை வாங்கும் பிரித்தானியர்கள் தொகை 10 வீத வீழ்ச்சியைக் கண்டுள்ளதாம். உள்நாட்டின் மதிப்பு அந்த நாட்ட வருக்கு நன்கு புரியவில்லைப் போலும்.

உலகின் மிக விலை மதிப்புள்ளதும், மிக வேகமானதுமான கார் எதுவாக இருக்கும்? Hennessey Venom GT என்று அழைக்கப்படும் காரின் விலை ஒரு மில்லியன் டொலர். இது மணிக்கு 270 மைல் வேகத்தில் ஓடக்கூடியது. உலகத்திலேயே இப்படியான கார்கள் மூன்றுதான் இருக்கின்றனவாம். இது ஒரு அமெரிக்க ஸ்போர்ட்ஸ் கார்.

## பாராட்டப்படும் பாதுகாப்பான நாடு


உலகிலேயே மிகவும் பாதுகாப்பான நாடு எதுவென்று சமீபத்தில் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. அந்த நாடு எதுவாக இருக்குமமென்று நம்புகிறீர்கள்? சில குறிப்புகள் தருகிறேன். கண்டுபிடியுங்கள் பார்க்கலாம். இந்த நாட்டின் பெயரும், தலைநகரின் பெயரும் ஒன்றுதான். ஒரு பிரதான தீவோடு இணைந்து மேலும் 62 குட்டித் தீவுகள் இருக்கின்றன. டொலரை உபயோகிக்கும் நாடுகளில் இதுவும் ஒன்று. குறிப்புகள் இப்போதைக்கு போதும். கண்டு பிடியுங்கள்.

இரண்டாவது இடம் எந்த நாட்டிற்கு கிடைத்தது? ஐரோப்பிய சிறு நாடான லக்ஸ்ம்பேர்க்கிற்கு இந்த இரண்டாவது இடம் கிடைத்துள்ளது. கடந்த வருட மதிப்பீட்டில் இதற்குக் கிடைத்த இடம் பத்து. மேற்கேயும், வடக்கேயும் பெல்ஜியம், கிழக்கே ஜேர்மனி, தெற்கே பிரான்ஸ் என்று மூன்று நாடுகளுக்குள் சிக்குண்டு கிடக்கும் நாடு இது.

சுவிஸ், கனடியன் கடவைச்சீட்டுக்களைப் போல விசா இல்லாமல் 172 நாடுகளுக்கு லக்ஸம்பேக் நாட்டினரால் பயணஞ் செய்ய முடியும். மூன்றாவது இடம், கடந்த வருடம் 22 ஆவது இடத்திலிருந்த ஜப்பானுக்குக் கிடைத்துள்ளது.

ஐஸ்லாந்து, டென்மார்க், நோர்வே, ஜேர்மனி, சுவிட்சிலாந்து, ஆஸ்திரியா, சுவீடன் ஆகிய நாடுகளுக்கு மற்றைய நான்கிலிருந்து பத்து வரையிலான இடங்கள் கிடைத்துள்ளன.

சரி என் ஆரம்பக் கேள்விக்கு வருவோமா? முதலாவது இடம்பிடித்த நாட்டைக் கண்டு பிடித்து விட்டீர் களா? சிங்க நகரம் என்றும் அழைக்கப்படும் சிங்கப்பூர்தான் அது.



## உயிரை மாய்க்க இப்படியொரு காரணமா?

ஒரு உயிரின் மதிப்பு என்னவாக இருக்கும்? ஒரு இலட்சம் டொலர்? ஒரு கோடி டொலர்? ஒரு பில்லியன் டொலர்? இதில் எதுவுமே இல்லையென்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும். விலைமதிப்பற்ற உயிர் இன்று பலருக்கு செல்லாக்காசாகி விட்டது. ஒரு உயிரை அநியாயமாகப் பறிப்பவர்களுக்கோ அல்லது உப்புச் சப்பிலாத காரணங்களுக்காக தம் உயிர்களை மாய்த்துக் கொள்வோருக்கோ உயிரின் மதிப்பு அடியோடு தெரியாது என்றே கொள்ளல் வேண்டும்.

வயது 33 தான். பிலிப்பைன்ஸ் நாட்டு இளம் பெண் அவள்.

ஜனநெருக்கடியில் சிக்குண்டு கிடக்கும், வானுயர்ந்த கட்டடங்களுக்கு சொந்தக்கார நகரமான நியூயோர்க்கின், மான்ஹாட்டன் ஹோட்டல் ஒன்றிலிருந்து பாய்ந்து 140 அடிக்கு கீழேயுளுள்ள தரையில் விழுந்து, அநியாயமாக தன்னை மாய்த்திருக்கிறாள் அந்தப் பெண். முதலில் தான் சாகப் போவது பற்றி இரண்டு உறவினர்களுக்கு கடிதங்கள் எழுதி வைத்து விட்டு, மனத் தைரியத்திற்காக மதுபானம் அருந்தியுள்ளாள் இவள். பின்பு ஒரு கதிரையை உபயோகித்து விளிம்பில் ஏறி நின்று பாய்ந்துள்ளாள் இவள்.


சரி ஏன் இந்த முட்டாள்தனமான முடிவு?

ஒரு ஹோட்டலில் குடித்து. உணவுண்ட பின்பு, தன் கடனட்டை மூலம் பணம் செலுத்த முயன்றுள்ளாள் இவள். ஏதோவொரு காரணத்திற்காக மறுக்கப்பட்டுள்ளது. இதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. உடன் எடுத்த முடிவுதான் தற்கொலை!

உயிரே உன் விலை என்ன? ஒரு வேளை உணவா?

வருடாவருடம் ஒரு மில்லியன் வரையிலானவர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்களாம்.

100,000 ஜனத்தொகை கொண்ட இடத்தில் 16 பேர் தம் உயிரைத் தாமே மாய்த்துக் கொள்கின்றார்கள்.




கடந்த 45 வருடங்களில் தற்கொலை வீதம் 65 வீத அதிகரிப்பைக் கண்டுள்ளது. பொதுவாக பெண்களை விட ஆண்களே அதிகம் தற்கொலை செய்பவர்களாக இருப்பினும், சீனா, கியூபா, ஈக்குவடோர், எல்சல்வடோர், இலங்கை இதற்கு விதிவிலக்கான நாடுகள். 15-19 க்கு இடைப்பட்ட வயதினரே அதிகமாக தற்கொலை செய்பவர்கள் என்கிறது உலக சுகாதார அமைப்பு...

சிறுகதை



# புயல்

**கோபி கிருஷ்ணன்**

அதிகாலையிலிருந்தே பலத்த மழை. சென்னை அருகே புயலாம்.

தொழிற்சாலை நேரம் முடிந்து, தள்ளிப்போட முடியாத ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி சக ஊழியர் குதரத் உல்லா பாட்சாவுடன் பேச, அவரது இல்லத்திற்குச் சென்று, பேசி முடித்து விட்டு, சுமார் ஒன்பது மணியளவில் தன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான் ஏக்நாத். நைந்துபோன, பித்தான்கள் என்றைக்கோ தெறித்து, அவை இல்லாத நிலையில், ஸேஃப்டி பின்களைப் போட்டு ஒருவாறாக மழைக்கோட்டை அணிந்து கொண்டு, தொப்பி தொலைந்துபோய் வெகு மாதங்கள் ஆகியிருந்தும், அதை வாங்காதிருந்த அசிரத்தையின் தண்டனையான தலைநனைதலை அனுபவித்துக் கொண்டே, வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான். தொழிற்சாலையில், ஒரு குப்பைக் கூடை அருகே கிடந்த சிறு துண்டு மழைத்தாள் ஒன்றை எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்திருந்தான். வழியில் ஒரு கடையில் புதிதாகச் சந்தையில் அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்த 'நெள' சிகரெட் ஒரு பாக்கெட்டையும், ஒரு வத்திப் பெட்டியையும் வாங்கி, மழைத்தாளில் சுற்றி வைத்துக் கொண்டான். இரண்டு மெழுகு வர்த்திகளையும் வாங்கிச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான். நல்ல நாட்களிலேயே அடிக்கடி தடைப்படும் மின்சாரம், மழையில் சீராக இயங்கும் என்று சொல்வதற்கில்லை. குழந்தைக்கு இரு தினங்களாக வெதுவெதுப்பான ஜுரம். மருந்துக்கடை ஒன்றில் மாத்திரை இரண்டை வாங்கினான்.

"ஜுரத்தால் அவதிப்படும் குழந்தையை ஏதோ ஒரு வகையில் சந்தோஷப்படுத்தி உற்சாகத்துடன் இருக்கச் செய்ய வேண்டும்" என்று தோன்றவே, ஒரு கடையில் கட்பரீஸ் மில்க் சாக்கலெட் ஒன்றை வாங்கினான். சிகரெட் ஒன்றைப் பெட்டியிலிருந்து கவனத்துடன் உருவி, மழைச் சொட்டுக்களிலிருந்து அதை அரைகுறையாக ஒருவாறு காத்து கைகளைக் குவித்துப் பற்ற வைத்துவிட்டு நடந்து கொண்டிருந்தான். வீட்டை அடைய இன்னும் ஒரு பொந்துச் சந்தையும், ஒரு நீண்ட சந்தையும், இரண்டு சிறு சந்துகளையும் கடக்க வேண்டும்.

வழியில் ஒரு மளிகைக் கடை. வீட்டில் காப்பிப் பொடி, சர்க்கரை காலையில் கொஞ்சம்தான் மீதம் இருந்தது. ப்ரூ ரீஃபில்பேக் காப்பிப் பொட்டலம் ஒன்றையும், 250 கிராம் சர்க்கரையையும் கொடுக்குமாறு கடைப் பையனிடம் சொல்லிவிட்டு சிகரெட்டை உறிஞ்சிப் புகையை வெளித்தள்ளிக் கொண்டிருந்தான். அருகில் ஒரு நடுவயது மாமி. அவள் முகம் கோணினாள். 'ஸாரி மாமி' - மன்னிப்புக் கோரி, கால்வாசிதான் புகைத்திருந்த சிகரெட்டைக் கீழே போட்டு நசுக்கினான்.

வீட்டின் மிக அருகாமையில் வந்ததும் நேற்று நடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வந்தது. அவன் வீட்டுக்கு நான்கு வீடு தள்ளி, ஒரு வீட்டின் முன் கிட்டத்தட்டத் தெருவின் முழு அகலத்தையும் அடைத்தபடி, ஒரு பெரிய கோலத்தை ஒரு பெண்மணி போட்டுக் கொண்டிருந்தாள். லயித்து. ஏகநாத் கவனமாகக் கோலக் கோடுகள், புள்ளிகள் முதலியவைகளைத் தவிர்த்து, ஏடாகூடமாகக் கால் வைத்ததில் கீழே சாயப்போய், ஒருவாறு சுதாரித்துக் கொண்டு, கோலத்தின் மேல் கால் பாவாமல் சிரத்தையுடன் தாண்டி நடந்து கடந்தான்.

> **யாரெக் கூப்பிட்றான்னு திரும்பிப் பார்த்தா, மேடம், ஓங்களெத்தான். ஒரு நிமிஷம் கிட்டெதான் வாங்களேன்ன்னது. சில நேரங்களில் சில மனிதர்கள் சினிமாவில் ஶ்ரீகாந்த் லக்ஷ்மியை காரிலெ லிஃப்ட் கொடுத்து அனுபவிச்சுட்டு எறக்கி விட்டுப் போனது ஞாபகம் வந்தது. பயந்து நடுங்கிண்டு விறுவிறுன்னு நடந்து வீட்டுக்கு வந்தேன்.**

மணி தோராயமாக 9.30. "காலைலே வீட்டெ விட்டுக் கெளம்பினா வீட்டு ஞாபகமே இருக்கறதில்லை ஓங்களுக்குக் கொஞ்சங்கூட. நான் ஒருத்தி இருக்கேங்கற நெனெப்பே ஓங்களுக்குச் சுத்தமா மறந்தாச்சுன்னுதான் தோண்றது. நீங்க சீக்கிரம் வரணும்னு நான் வேண்டாத தெய்வங்க இல்லெ, 'ஸோனா' பொரிந்து தள்ளினாள். ஆனா, இண்ணெக்கி என்ன விசேஷம்? நான் சீக்கிரம் வரணும்னு சாமிங்களை வேண்டிக்கற அளவுக்கு எனக்கு என்ன திடீர் முக்கியத்துவம்?" - இது ஏக்நாத். "ஒண்ணுமில்லெ, சொல்றேன். என்ன வீட்டுக்காரம்மா ஏதாவது கத்தினாளா? - இல்லெ. மளிகைக்காரன் பாக்கிக்காக வந்து கேட்டுக் கத்தினானா? இல்லெ. வேறென்ன சொல்லேன்" ஸோனாவின் முகத்தில் கலவரமும் பரபரப்பும் அவசரமும் குடிகொண்டிருந்ததை ஏகநாத்தால் கண்டுகொள்ள முடிந்தது. "கணவனைச் சந்தோஷத்திலாழ்த்தும் செய்தி போன்ற எதுவுமில்லை" என்று அவனால் ஊகிக்க முடிந்தது. சராசரிகளுக்குச் சந்தோஷம் என்பதே ஒரு அரிதான விஷயம். அது அவனுக்கு ஒரு அனுபவபூர்வமான நிஜம். "நீங்க மொதல்லெ கைகால் அலம்பிண்டு வாங்க. வெளியே போக வேணாம். இந்த மழைச் சனியன் வேறெ நின்னு தொலைய மாட்டேங்கறது" ஸோனா சொன்னபடி சமையற்கட்டின் முன் பகுதியில் முகம், கைகால் அலம்பிக் கொண்டு, தலையைத் துவட்டிக்கொண்டு ஏகநாத் நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

ஸோனா ஏக்நாத்தின் மனைவி. பெயரைப் போலவே தங்கமானவள். மணமான புதிதில் ஏக்நாத் அவள் பெயரை மனதில் அசைபோட்டுப் பார்த்திருந்தான். ஸோனா - தங்கம். இன்னொரு அர்த்தம் உறங்குதல். நம் மனநிலைகளின் அதீதங்களினாலோ பிறத்தியான் பிசகாக நடந்து கொள்வதினாலோ அவன்மீது ஏற்படும் கசப்புணர்வு அறவே மறந்து, அடுத்த நாள் அவன் தோள்மீது கைபோட்டு அன்னியோன்னியமாயிருக்க உதவும். தீவிர வெறுப்புகள் தொடராமல் தடைபோடக் கைகொடுக்கும் ஒரு அற்புதமான இயற்கை ஔஷதம். ஸோனாதான் எவ்வளவு ரம்மியமான ஆரோக்கியமான பெயர்!

குழந்தைக்கு ஸிந்தியா என்று பெயரிட்டிருந்தான். ஜனித்தவுடன் முதலில் தன் சிசுவைப் பார்த்ததும் உடனே அவன் நினைவில் நிழலாடியது நீல ஆகாயத்தின் மையத்தில் ஒரு முழு நிலா. சந்திர தேவதையின் பெயரையே அவளுக்கு சூட்டிவிட்டான்.

ஸிந்தியா: "டாடீ, எனக்கு இன்னா கொண்டாந்தே? ஒனக்காடா கண்ணா, ஒரு மத்திரெ, ஒனக்கு ஜொரமில்லெ? அப்பறம் ஒரு சாக்கலெட் இன்னா டாடீ எனக்கு ஸ்வீட்டு, இன்னெக்கி எனக்கு பெர்த் டேவா?" அவளுக்கு எப்பொழுதாவது அரிதாக இனிப்புச் கொண்டு கொடுக்கும் சமயமெல்லாம் அவள் கேட்கும் கேள்வி. சாக்கலெட்டை இரண்டு விள்ளல் கடித்துவிட்டு, ஸிந்தியா வாந்தி எடுத்துவிட்டாள். "இப்பொ ஸ்வீட் ஒண்ணு இல்லேன்னு இங்கெ யார் அழுதா?" ஸோனா வெடித்தாள். "என்ன நடந்திச்சு, சொல்லு. காப்பி போடு. சாப்பிட்டிட்டே கேக்கறேன்" "ஓங்களுக்குக் காப்பிதான் முக்கியம். என்னோட அவஸ்தெயெப் பத்தி ஓங்களுக்கென்ன அக்கறை?" வாந்தியை வாருகாலால் தண்ணீர்விட்டுக் கழுவிக்கொண்டே ஸோனா எரிந்து விழுந்தாள். "சரி, காப்பிகூட அப்புறம் போட்டுக்கலாம். விஷயத்தெச் சொல்லு. தேவதூதன் ஒண்ட்டே வழியிலே சந்திச்சுப் பேசி ஆசியெல்லாம் வழங்கிட்டுப் போனான்ற அற்புத நிகழ்ச்சியெலாம் நீ சொல்லப் போறதில்லெ. அல்ப விஷயம் ஏதாவது சொல்லப் போறே. அதுக்கு ஏன் இவ்வளவு எரிச்சல்? சொல்லேன்"

"என்னெ எதுக்கு வேலைலெ சேத்து விட்டீங்க?"

"புதுஸ்ஸா இதிலெ சொல்றதுக்கு என்னா இருக்கு? சமூகத்தெப் பத்தி நீ தெரிஞ்சுக்கணும். நாலு பேரோட நீ பழகணும். அப்பொதான் உலகம்ன்னா என்னான்னு ஒனக்குப் புரியும். ஒன்னோட வாழ்க்கை புருஷன், கொளந்தெ, அடுப்படி, வீட்டுச்சுவர் இதுக்குள்ளேயே முடிஞ்சுவிடக் கூடாதுன்னுதான். இப்பொ ஏன் அதெத் திரும்பக் கேக்கறே?"

"என்ன நடந்ததுன்னு தெரிஞ்சா நீங்க இந்த மாதிரிப் பேச மாட்டீங்க"

"நானென்ன யேசுநாதரா, பார்க்காமலேயே எல்லாத்தெயும் தெரிஞ்சுக்க? சொன்னாத்தானே தெரியும்?"

"இன்னெக்கி நர்ஸிங் ஹோம்லெ அந்த தியேட்டர் டெக்னீஷிய ராஸ்கல் கோவிந்தன், டியூட்டி ரூம்லெ நர்ஸுப் பொண்ணுகள்ட்டெ, அம்மணமா போஸ் கொடுத்துண்டு நிக்கிற வெள்ளெக்காரச்சி ஒருத்தி ஃபோட்டோவைக் காட்னான். அந்த நாலும் சிரிச்சி கொளெஞ்சி நெளியறதுக. வெக்கங்கெட்ட ஜன்மங்க"

"இதுக்கு ஏன் இவ்வளவு கத்தல்? கோவிந்தன் ஒண்ட்டெ ஒண்ணும் காட்டலியே?"

"ஓ, அந்தக் கண்றாவி வேறெ நடக்கணும்ன்னு ஒங்களுக்கு ஆசையோ?"

"நீ இண்ணெக்கி நல்ல மூட்லெ இல்லே. கொஞ்சம் தண்ணி சாப்பிட்டு அமைதியா இரு"

"அந்த டாக்டர் கெழம் - பேரம் பேத்தி எடுத்தாச்சு. ஹார்மோன் இன்ஜெக்ஷன் போட்டுண்டு ஹெட் ஸ்டாஃப் - அதுக்கு ஊர்லெ ரெண்டு பசங்க படிச்சிண்டிருக்கு - அதோட ராத்திரியிலே குடும்பம் நடத்தறானாம்"

என்ன பதில் சொல்வதென்று புரியாத நிலையில் ஏகநாத் சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டான்.

"ஓங்களுக்கென்ன, ஸ்மோக் பண்ணினா எல்லாம் தீந்து போச்சு. நான் இங்கெ கெடந்து குமுறிண்டிருக்கேன். நர்ஸிங் ஹோம்லேருந்து Creche-க்கு வந்து, ஸிந்தியாவெ அழச்சிண்டு, மழைலெ நனைஞ்சு வீட்டுக்கு வந்திண்டிருந்தேன். கொட்ற மழைலெ கொடெ இருந்தும் ஒண்ணுதான் இல்லாட்டியும் ஒண்ணுதான். ரோட்லெ ஆள் நடமாட்டம் இல்லெ. ஒரு ஆள் பாண்ட்ஸ், ஷர்ட் போட்டுண்டு, கையிலே ஒரு சிகரெட்டோட, காரிலே உட்கார்ந்துண்டு, ஜன்னக் கதவையெல்லாம் ஏத்தி மூடி வச்சிண்டு, சுட்டு வெரலெ வளைச்சி, மேடம், ஒரு நிமிஷம் இங்கெ வர்றீங்களா?ன்னு கூப்பிட்டது. யாரெக் கூப்பிட்றான்னு திரும்பிப் பார்த்தா, மேடம், ஓங்களெத்தான். ஒரு நிமிஷம் கிட்டெதான் வாங்களேன்ன்னது. "சில நேரங்களில் சில மனிதர்கள்" சினிமாவில் ஶ்ரீகாந்த் லக்ஷ்மியை காரிலெ லிஃப்ட் கொடுத்து அனுபவிச்சுட்டு எறக்கி விட்டுப் போனது ஞாபகம் வந்தது. பயந்து நடுங்கிண்டு விறுவிறுன்னு நடந்து வீட்டுக்கு வந்தேன்"

ஸோனா தொடர்ந்தாள். வந்து அரை மணி நேரமாகல்லெ. ஒரு வாரத்துக்கு முன்னாலெ காலி செஞ்சுண்டு போனாங்களே, அந்த பார்வதி வீட்டுக்காரன் வந்தான். எப்படீம்மா இருக்கே? கொளந்தெ சௌக்கியமா? ன்னு கேட்டுண்டே உள்ளாரெ வந்து சேர்லெ ஒக்காந்துக் கிட்டான். இங்கே இருக்கறப்போ அந்த மனுஷண்ட்டெ பேசினதுகூட கிடையாது. காபி சாப்பிட்றீங்களான்னு கேட்டேன். சரின்னது. போட்டு டேபிள்லெ வச்சேன். வேணாம். சும்மா தமாஷுக்குத்தான் கேட்டேன் அப்படின்னான். என்ட்டெ என்ன தமாஷ்ன்னு நெனெச்சிண்டிருக்கறப்போ வாங்களேன், இளமை சுகம் சினிமாவுக்கு ரெண்டு டிக்கட் வச்சிருக்கேன். சேர்ந்து போகலாம்ன்னது. எனக்கு ஒதறல் எடுத்துப் போச்சு. ஸிந்தியவெத் தூக்கிண்டு, அந்தப் பக்கத்து போர்ஷன் பொண்ணு குமுதினி இல்லெ, அதான் நைன்த் படிக்கறதே, அதைக் கூப்பிட்டேன். நல்லகாலம் வந்தது. கொஞ்ச நேரம் அந்த ஆள் அப்படியே ஒக்காந்திண்டிருந்தான். நான் அப்பொ போயிட்டு இன்னொரு நாளெக்கி வர்றேன். நான் இப்பொ ஏன் போறேன் தெரியுமா? நான் இப்பொ ஓங்களோட தனியா இருக்கேன். ஓங்க வீட்டுக்காரரு இப்போ வந்தா நம்மளை என்னன்னு நெனைச்சிக் கிருவாரு?ன்னு சொல்லிட்டே எழுந்தது.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# மாவீரர் நாள்:

## கூறுபோடும் கும்பல்கள்

"கார்த்திகை" என்றாலே சட்டென நினைவுக்கு வருவது மாவீரர்நாள்தான்.

தமிழ் மக்களின் விடிவுக்காகத் தங்கள் இளமையையும், வாழ்வையும், உயிரையும் துறந்த புனிதர்களை, இந்த ஒரு நாளில் தான் தமிழினம் நினைவு கூருகின்றது. 2009க்கு முன்னர், மாவீரர் துயிலும் இல்லங்கள் தோறும் ஈகைச் சுடர் ஏற்றி, மலர் மாலைகள் சூட்டிக் கண்ணீரைக் காணிக்கையாக்கித் தங்கள் அஞ்சலியை மக்கள் நிகழ்த்தினார்கள். ஆனால் அதன் பின்னர் எல்லாமே தலைகீழாகிற்று.

"புலிகளின் எந்த ஒரு தடமும் இருக்கக் கூடாது" என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்த படைத்தரப்பு, முதலில் அழித்தது மாவீரர் துயிலும் இல்லங்களைத்தான். மண்ணுக்குள் உறங்கிக்கொண்டிருந்த மறவர்களின் கல்லறைகளைக் கனரக வாகனங்கள் மூலம் கிண்டிக்கிளறிப் படைத்தரப்பு உழுதது. மாவீரர் துயிலும் இல்ல மண்ணும், சிதைவுகளும், வீதி அகலிப்பின்போது அங்கு கொட்டப்பட்டுத் தார் பூசி மூடப்பட்டன. பின்னர் மாவீரர் துயிலும் இல்லங்கள் யாவுமே, படையினரின் கோட்டை, கொத்தளங்களாக உருமாற்றம் பெற்றன. அதன் பின்னர் மாவீரர்களைப் பூசிக்கவென இடமில்லாமல் போக, மக்கள் பூசலாரைப்போல, தங்களுடைய மனங்களுக்குள் மாவீரர்களுக்கான அஞ்சலியை, நவம்பர் 27 ஆம் திகதி நிகழ்த்தத் தொடங்கினர்.

ஆனால் புலம்பெயர் தேசத்தில், போர் முடிவடைய முன்னர் எப்படி மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டதோ அதே கட்டமைப்பே போருக்குப் பின்னும் தொடர்ந்தது. ஏனெனில் அங்கு மாவீரர் துயிலும் இல்லங்கள் இல்லையென்பதால், ஒவ்வொரு நாட்டிலும் ஒரு பொது மண்டபத்தை வாடகைக்கு எடுத்து அங்குதான் எல்லோரும் சென்று மாவீரர்களை நினைவு கூருவது வழமை.

ஆனால் கடந்த ஓரிரண்டு வருடங்களாக, புலம்பெயர் தேசங்களில், மாவீரர்களை நினைவு கூருவதில் நீயா? நானா? என்ற போட்டி மனோநிலை ஏற்பட்டு, குழுக்களாகச் சிதறிப்போனார்கள். சிதறிப் போனவர்கள் சும்மா இருக்க வில்லை. ஒவ்வொரு குழுவும், தத்தம் அமைப்பு சார்பில், வெவ்வேறு இடங்களில் மாவீரர் தினத்தை நடத்தினார்கள். தென்னிலங்கையிலோ, இந்தியாவிலோ ஏதேனும் அரசியல் கட்சிகளுக்கிடையே பிளவு ஏற்பட்டால், அப்படி பிரிந்து சென்ற ஒவ்வொரு குழுவும், தாமே உண்மையான கட்சியினர் என்று உரிமை கோருவார்கள். அதைப்போலவே, கோஷ்டிகளாகப் பிரிந்து சென்ற புலம்பெயர் தேசத்தவர்கள், தமது குழு நடத்தும் மாவீரர் நாளே உண்மையான மாவீரர் நாள் என்று உரிமை கோரி அறிக்கைகளும் விடத்தொடங்கினார்கள்.

வெறுமனே உரிமை கோரியிருந்தால் மட்டும் பரவாயில்லை. ஆனால் "அவலை நினைத்து உரலை இடித்த" கதையாகத் தமது எதிர்க்குழுவைச் சாடுவதாக நினைத்து மாவீரர்தினத்துக்கும், மாவீரர்களுக்கும் களங்கத்தை உண்டுபண்ணும் வசை பாடல்களிலும் இவர்கள் ஈடுபட்டார்கள். ஆயினும் பின்னர் பலரின் சமரச முயற்சிகளால், சிதறிக்கிடந்த குழுக்கள் ஒன்றாக் கப்பட்டன. அப்படியிருந்தும் சில பிரதான குழுக்கள் ஒன்றிணைய மறுத்துத் தொடர்ந்தும் தனித்தே மாவீரர் நாளை அனுஷ்டித்து வருகின்றன.



இந்த வருடம் லண்டனில் இரண்டு மாவீரர் தின நிகழ்வுகள் நடக்கவுள்ளன. வழமையாகவே மாவீரர் தினத்தை நடத்தும் அமைப்பு, பொது இடம் ஒன்றை வாடகைக்கு எடுத்து அங்கு நிகழ்வை நடத்த அழைப்பு விடுத்திருந்தது. இந்த நிலையில், இவ்வருட முற்பகுதியில் பிரிட்டனில் மாவீரர் துயிலும் இல்லம் ஒன்றை அமைக்க, இன்னொரு புலம்பெயர் அமைப்பு காணியொன்றைக் கொள்வனவு செய்திருந்தது. எனவே அந்தக் காணியில் இம்முறை மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கும்படி அவர்கள் கேட்டிருந்தனர்.

ஆனால் அப்படி நிகழ்வை நடத்துவதற்கு வாடகையாகப் பணத்தையும் கோரினர். அவர்கள் கேட்ட வாடகைப் பணத்தை விட, லண்டனில் பொதுமக்கள் வருவதற்கு வசதியான இடத்தின் வாடகை மிகக் குறைவாக இருந்தது. எனவே வழக்கமாக மாவீரர் தினத்தை நடத்தும் இடத்திலேயே இம்முறை நடத்தப்போவதாக ஏற்பாட்டுக் குழு கூறியது. இது மாவீரர் துயிலும் இல்லத்துக்கென காணியை வாங்கிய அமைப்புக்கு அதிர்ச்சியை உண்டுபண்ணியது.

ஏனெனில் மாவீரர்தினத்தை நடத்துவதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு காணியைக் கொள்வனவு செய்வதற்கெனப் பெற்ற கடனில் ஒரு தொகையைக் கட்டி முடித்துவிடலாம் என்று கணக்குப் போட்டிருந்தனர். அந்தக் கணக்கில் மண்விழுந்ததை அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. எனவே மாவீரர் துயிலும் இல்லம் அமைக்க வாங்கிய நிலத்தில், அவர்களும் இந்த முறை புதிதாக மாவீரர் நாளை அனுஷ்டிக்கப்போவதாக அறிவித்துள்ளனர். இதனால் எந்த மாவீரர் தினத்தில் கலந்து கொள்வது எனத் தெரியாமல், லண்டனில் உள்ள புலம் பெயர் தமிழ் மக்கள் குழம்பிப் போயுள்ளார்கள்.

கடந்த காலங்களில், கோயில்களின் பெயரைச் சொல்லியும், ஊர்களின் பெயரைச் சொல்லியும், சாதிகளின் பெயரைச் சொல்லியும் புலம் பெயர் தமிழ் மக்கள் தமக்குள் மோதிக் கொண்டார்கள். சிலர் சம்பாதிக்கவும் செய்தார்கள். என்னதான் மோதிக் கொண்டாலும், மாவீரர் தினம் என்று வருகின்றபோது அவர்கள் எல்லோரும் ஒன்றாகி வந்து தமக்காக உயிர் நீத்தவர் களுக்காக அஞ்சலி செய்வதே கடந்த காலங்களில் நடந்தது. இப்போது அந்த வழக்கத்துக்கும் முற்றுப்புள்ளி விழுந்துவிட்டது.

தங்களுடைய சகல இன்ப துன்பங்களையும் துறந்துவிட்டுத் தமிழ் மக்களின் விடுதலைக்காக்வும், ஒற்றுமைக்காகவும் போராடி மடிந்தவர்கள் மாவீரர்கள். ஊரில் என்னதான் கோபதாபம் இருந்தாலும், அதையெல்லாம் தூர எறிந்துவிட்டு, மரணச் சடங்குகளில் ஒன்றாக நின்று இறந்தவருக்குரிய மரியாதையைக் கொடுப்பது தமிழர்களின் பண்பாக இருந்தது. அந்தப் பண்பு மாவீரர்தின விடயத்தில் இன்னும் ஒருபடி மேலோங்கியே இருந்தது. ஆனால் மேய்ப்பர் இல்லாத மந்தைகள், எப்படி தறிகெட்டு திசைக்கொன்றாக ஓடுமோ, அதே போன்றுதான் தாயகத்தில் புலிகளின் கட்டமைப்பு இல்லாத நிலையில் புலம்பெயர் தேச அமைப்புகள், தத்தம் திசையில் தடம் மாறிப் பயணிக்கின்றன. அவர்களின் பயணம் எந்தத் திசையில் இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் அது மாவீரர்களின் தியாகத்தையோ அல்லது அவர்களை நினைவேந்தும் மாவீரர் நாளின் மகத்துவத்தையோ கெடுப்பதாக இருக்கக்கூடாது.

மாவீரர் நாளைப் பங்குபோட்டு அனுஷ்டிக்க அதுவொன்றும் தீபாவளிப் பண்டிகையோ, திருமணவீட்டுக் கொண்டாட்டமோ அல்ல. அது உணர்வுகளால் தமக்காய் உயிர்நீத்த உத்தமர்களை நினைவேந்தும் ஒரு நிகழ்வு. அப்படிப்பட்ட ஓர் உன்னதமான நிகழ்வைத் தங்களுடைய சுயநலத்துக்காகவும் தற்பெருமைக்காகவும் கூறுபோடுதல் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம்.

ஆயிரக்கணக்கான வருடங்களாக, யூதர்கள் 'இஸ்ரேல்' என்ற தங்களது கனவுத் தேசத்தை அருவமாக மனதில் சுமந்து கடைசியில் அதை நிஜமாக்கியும் விட்டார்கள். அதேபோன்றே ஈழத் தமிழர்களும் தங்களின் தேசத்தையும், அந்தத் தேசத்தை உருவாக்க தாயகக் கனவுடன் சாவினைத் தாங்கிய மாவீரர்களையும் மனதில் சுமந்துகொண்டிருப்பதன் மூலமே, என்றோ ஒருநாள் விடுதலையைப் பெறுவதற்கான உந்துதலை அடையலாம். அவற்றின் புனிதங்களைக் கெடாமல் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு தமிழனினதும் கடமையாகும். அதைவிடுத்து நாங்களே நமது மாவீரர்களின் தியாகத்தையும், புனிதத்தையும் கொச்சைப்படுத்தும் செயல்களில் இறங்கக்கூடாது. இன்னும் மாவீரர் தினத்துக்கு ஒருவாரமே இருக்கிறது. அதற்கிடையிலாவது பிளவுபட்டும் நிற்கும் லண்டன் புலம்பெயர் அமைப்புக்கள், ஒருமித்த முடிவுக்கு வந்து, ஒரே இடத்தில் ஒன்று கூடி மாவீரர் நாளை அனுஷ்டிக்கும் நல்லதொரு முடிவை எடுப்பதே நமக்காக ஆகுதியாகிப்போன மாவீரர்களுக்குச் செய்யும் அஞ்சலியாக இருக்கும்.



# வாரப்பலன்

**மேடம்**
தரும சிந்தனை. தீர்த்த யாத்திரை. மக்கள் மேன்மை. மிகுசுகம்.

**ரிஷபம்**
பணப்பற்றாக் குறை. மனச் சஞ்சலம். பொருள் சேதம். மனோ பலம்.

**மிதுனம்**
கனவு பலிதம். தேக மெலிவு. தாகமேன்மை. தாய்வழி வரவு. சிந்தனை.

**கடகம்**
பொருள் வரவு. தனிமை. நடுநிலை. தர்ம சிந்தனை. நடைக் கஷ்டம்

**சிம்மம்**
பூமி பலிதம். தெய்வ அனுக்கிரகம். முயற்சிக் கேற்ற பயனின்மை.

**கன்னி**
எண்ணம் தடைப்படல். காரிய மேன்மை. இடர். தர்ம சிந்தனை. லாபமிகுதி.

**துலாம்**
மனச்சோர்வு. மனித நேயம். முறைகேடு. மக்கள் பெருமை. சோகம்.


**விருச்சிகம்**
சுகச் செலவு. சாப விமோசனம். போகம். கடன் தொல்லை. காரியத்தடை.

**தனுசு**
சௌக்கியச் செலவு, தடுமாற்றம். கலையார்வம். தெய்வ சிந்தனை.

**மகரம்**
மாதர் வழி மகிழ்ச்சி. காரியத்தடை. தானியச் சேர்க்கை. தேக மெலிவு.

**கும்பம்**
பண வரவு. பகைவர் தொல்லை. கல்வி விருத்தி. எதிர்காலம் பற்றிய கவலை.

**மீனம்**
கூடிய முயற்சி. சமூக மேன்மை. வளமற்ற வாழ்வு. மிகு பலம். கவலை.



## ஜப்பானிய தூதுவராலயத்தினால் புங்கா விருது

கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கை நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சி. ஜெயசங்கருக்கு, ஜப்பானிய தூதுவராலயத்தினால் புங்கா விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய தூதுவராலயத்தினால் வழங்கப்படும் 'புங்கா' எனப்படும் இலங்கை கலை வல்லுநர்களுக்கான விருது கடந்த 06.11.2016 ஆம் திகதி 'ரூபவாகினி' கலையகத்தில் கலாசார அமைச்சர் S.B நாவின்ன மற்றும் ஜப்பானிய தூதுவர் ஆகியோரால் வழங்கப்பட்டது.

கலாநிதி ஜெயசங்கர் கிழக்கு பல்கலைக்கழகத்தில் நுண்கலைத்துறைத் தலைவராக இருந்து கலைச்செயற்பாட்டை முன்னெடுத்ததோடு, கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளராகவும் தற்போது பதவி வகிக்கின்றார்.

நம் நாட்டின் பல்வேறு பட்ட இனக் குழுக்களின், தனித்துவமான கலை வடிவங்களை ஒருமிக்கச் செய்ததோடு அதற்கான பல முன்னெடுப்புக்களையும் மேற்கொண்டு உள்ளார். மேலும் மட்டக்களப்பு கூத்துக் கலையின் சமகால தேவை கருதி கூத்துமீளுருவாக்கச் சிந்தனையினை பங்கு கொள் ஆய்வுச் செயற்பாட்டின் ஊடாக உருவாக்கியதோடு சிறந்த நடிகராகவும் செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



கடந்த சனிக்கிழமை (12.11.2016) அன்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் உதயன் குழுமம் நடாத்திய சிறார்களுக்கான மகிழ்களம் நிகழ்விலிருந்து....






"புதியசொல்" இதழ் பற்றிய அரங்கு 13 .11 .2016 அன்று வாழைச்சேனை அகமது வித்தியாலயத்தில் "காகம்" பதிப்பகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.






ஈழத்திலிருந்து சினிமாவுக்கான புதிய இணைய இதழான ''கரவொலி'' 13.11.2016 அன்று வெளியிடப்பட்டது. மூத்த ஊடக வியலாளரான ராதேயன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

தேவகாந்தனின் கதாகாலம் (மஹாபாரதத்தின் மறு வாசிப்பு - நவீனம்)




## விமர்சன அரங்கு

காலம். 19 நவம்பர் 2016 சனிக்கிழமை மாலை 3.30 மணி

இடம் கருவி - மாற்றுத் திறனாளிகள் சமூக வள நிலையம் , 1166 / 15, அருளம்பலம் லேன், கல்வியங்காடு சந்தி, நல்லூர்.

அரவான்



# இதற்காகவா போராடினோம்?

நல்லதோர் வீணை செய்தே அதை நாளும் நலம் கெடப் புழுதியில் எறிவது தமிழர்களின் பிறவிக்குணம். அந்தக் குணம் இன்னும் மாறாமலேயே இருப்பதைச் சொல்லாமல் சொல்லி நிற்கின்றது வவுனியாக் குளத்திற்கு அண்மையில், குடியிருப்புப் பிள்ளையார் கோயிலுக்கு அருகேயுள்ள கலாசாரமண்டபம். ஆமியிடம் இருந்து பல வருடங்களாகப் போராடி மீட்டெடுத்த கலாசார மண்டபம், எந்தவிதத் திருத்தமோ, பராமரிப்போ இன்றி பேய் மண்டபமாக மாறி, இப்போது குடிகாரர்களின் உல்லாசபுரியாக மாறியிருக்கிறது. கலாசாரத்தை வளர்க்கவெனக் கட்டப்பட்ட இந்த மண்டபம் இப்போது கலாசார சீரழிவுகளின் மையமாக மாறிக் கொண்டிருப்பதை பார்க்கும் போது, கலைஞர்களின் வயிறு பற்றியெரிகிறது. ஒருகாலத்தில் கலைகளின் நிலைக்களனாக விளங்க வேண்டிய இந்த மண்டபம், இப்போது, பாழடைந்து, வேலிகள் எதுவுமற்று, பேய் மாளிகை போல இருண்டு கிடக்கிறது. பாதுகாப்பற்று, ஆட்கள் எவரும் செல்லாத, இருளடைந்து கிடக்கும் இதன் நிலை சமூகச் சீரழிவாளர்களுக்கு வாய்ப்பாக மாறிவிட்டது. மாலையிலும், இரவிலும் இளைஞர்கள் சிலர் தங்களின் வழக்கமான 'குடித்துக் கூத்தடிக்கும்' இடமாக இந்தக் கலாசார மண்டபத்தை மாற்றி விட்டார்கள். குடியையும் தாண்டி கஞ்சா, தவறான பாலியல் நடத்தை என்பவையும் இங்கு அரங்கேறுவதாக அங்கு அக்கம் பக்கத்தில் வசிப்பவர்கள் கூறுகிறார்கள்.

வவுனியா மாவட்டக் கலைகளுக்கும், கலைஞர்களுக்கும் களம் அமைக்கவும், முத்தமிழையும் வளர்க்கவுமென, 1990 களில் இந்தக் கலாசாரமண்டபம் கட்டிமுடிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது கட்டி முடிக்கப்படவும், இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கவும் சரியாக இருந்தது. வடக்கை ஏனைய பகுதிகளில் இருந்து துண்டாடும் இராணுவக் கேந்திர மையமாக வவுனியா மாறியபோது, பல புதிய இராணுவ முகாம்கள் உருவாகின. இதன் போது பொதுமக்களின் கட்டடங்களும், பல பொதுக் கட்டடங்களும் எந்தவிதக் கேட்டுக் கேள்வியுமின்றி இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டன. அப்படிப் பறிபோனவற்றில் ஒன்றுதான் இந்தக் கலாசார மண்டபம்.

கிட்டத்தட்ட 25 வருடங்களுக்கு மேலாக இந்த மண்டபம் இராணுவத்தின் வசமே இருந்தது. சோதனைச் சாவடியாகவும், சித்திரவதைக் கூடமாகவும், தடுப்பு முகாமாகவும், புலனாய்வாளர்களின் முகாமாகவும் இந்த மண்டபம் பல வடிவங்களை எடுத்தது. கலாசாரத்தின் அடையாளமாக இருந்த இந்த மண்டபம் அச்சத்தின் அடையாளமாக மாறிப்போனது. துப்பாக்கிகளும், சீருடைகளும், முட்கம்பிகளும், தகர

## வவுனியா கலாசார மண்டபத்தின் கதி

வேலிகளும், இடையிடையே கேட்கும் அவல ஒலிகளும் சேர்ந்து அந்த அச்சத்தை இன்னும் அதிகப்படுத்தின. போர் முடிவுக்கு வந்த பின்னர், படிப்படியாக இராணுவத்தின் வசமிருந்த பலகட்டடங்கள் விடுவிக்கப்பட்டன. ஆயினும் இந்தக் கலாசார மண்டபத்தை விட்டு அவ்வளவு இலேசில் படையினர் அகலவில்லை. எனவே "குறித்த மண்டபத்தில் உள்ள இராணுவ முகாமை அகற்றி, மண்டபத்தை மக்களின் பயன் பாட்டுக்கு தரவேண்டும்" என வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கலைஞர்களும், பல்வேறு சமூக அமைப்புகளும், மக்களோடு போராட்டத்தில் குதித்தனர்.நீண்ட நாட்கள், விடாமல் போராடியதன் பயனாக படைத்தரப்பு மண்டபத்தைக் கையளிக்க முன்வந்தது.

ஆனால் இப்போதுதான் இன்னொரு பிரச்சினை எழும்பியது. யாரிடம்

(20 ஆம் பக்கம் பார்க்க...)



**அகளங்கன் (எழுத்தாளர்)**

"1990களிலைமண்டபத்தை ராஜகுகனேசன் எம்.பி இருக்கேக்கை கட்டியாச்சு. அதுக்குப் பேர் வைக்கிறதிலை பிரச்சினைப்பட்டுக் கொண்டிருந்தவை. அந்த இழுபறி யோடை இருந்து பிறகு ஆமியின்ரை கையுக்கை போட்டுது. இப்ப 3 மாதங்களுக்கு முன்னாலைதான் ஆமி விட்டிருக்கிறான். இப்ப சும்மா திறந்தபடி கிடக்கு. அந்தக் கலாசார மண்டபத்துக்கை, ஆக்கள் வேறை வேறை, 'கலாசாரத்துக்குப்' போய்வாற மாதிரி கதை அடிபடுகிது. அதை எங்களாலை உறுதிப்படுத்தேலாமை இருக்கு. பொலிஸ் பாதுகாப்புப் போட்டதெண்ட கதை எனக்குத் தெரியாது. கிட்டடியிலை நான் போய்ப் பாக்கேல்லை.

பெடியள் போய்ப் படம் எடுத்துக் கொண்டு வந்தவங்கள். அதிலை இன்னும் திறந்தபடிதான் இருக்கு. அது இப்ப பிரதேச செயலகத்தின் பொறுப்பிலைதான் இருக்கு. சில நேரம் நகர சபைக்குக் குடுபடலாம். ஆனல் சனத்துக்கு பிரதேச செயலகப் பொறுப்பிலை இருக்கிறதுதான் விருப்பம். ஏனெண்டால் நகர சபைக்கு ஏற்கனவே 3 மண்டபங்கள் இருக்கு. அவை கலாசாரத்தை வளர்க்கிறதை விட்டுப்போட்டு, திருமண மண்டபமா மாத்தி கலியாண வீடுகளுக்கு குடுத்து வியாபாரம் செய்து கொண்டிருக்கினம். ஒரு என்.ஜீ.ஓ கலாசார மேம்பாட்டுக்காகக் கட்டிக் குடுத்த மண்டபத்தையும் அப்பிடித் தான் செய்யினம். கலாசார விழாக்களுக்கெண்டு காசைக் குறைக்க மாட்டினம். அதால இந்த மண்டபம் பிரதேச செயலகத்தின் பொறுப்பிலை தொடர்ந்தும் இருப்பதே நல்லது. கலைஞர்கள் பிரயோசப்படுவினம்."



**கா.உதயராஜா**
(வவுனியா பிரதேச செயலர்)

"நாங்கள் ஒரு கலாசாரப் பேரவை ஒண்டைத் தொடக்கி அதனூடாக வவுனியா கலை கலாசாரங்களை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கவிருக்கிறோம். அதுக்குரிய மண்டபமா இதை மாற்றியமைக்க, மறுசீரமைப்பு அமைச்சிட்ட 14 மில்லியன் நிதி கேட்டிருக்கிறம். மற்றது கடந்த 4-5 நாளா பொலிஸ் ரோந்து அணி ஒன்று மண்டபத்துக்கு போகுது. பிரதேச செயலகத்தாலும் மண்டபத்தைக் கண்காணிக்கச் சொல்லியிருக்கிறம். என்னைப் பொறுத்தவரை ஆக்கள் கதைக்கிற மாதிரி அங்க சமூகச் சீரழிவு நடவடிக்கைகள் ஒண்டும் நடக்கேல்லை. அப்பிடி நடந்திருந்தா எனக்கு றிப்போட் வந்திருக்கும்..

நீங்கள் இப்படிக் கதைகள் வருவதன் அரசியலை விளங்கிக் கொள்ள வேணும். இதுக்குப் பின்புலத்திலை இந்த மண்டபத்தை எடுத்து வேற ஒரு நிர்வாகத்திட்ட கொடுக்க சில முயற்சிகளும் நடக்கிது. அதுக்கேற்ற மாதிரித்தான் இப்படியான கதை கட்டல்கள் இருக்கு. அவையும் தேவையில்லாமல் பிளான் பண்ணி இப்பிடிச் செய்யிறாங்கள்.

எங்களுக்கு காசு வந்தா நாங்க செய்வம். இன்னும் 2-3 கிழமையளிலை மண்டபத்தைச் சுத்தி வேலிபோடக் காசு வந்திடும். என்ரை திட்டத்தின்படி 2017 இலை, இதை ஒரு லக்சறி மண்டபமா மாத்தி, எல்லாரும் பாவிக்கிற மாதிரி செய்தெடுத்திடுவன். மண்டபத்துக்குப் பக்கத்திலை கோயிலும் இருக்குது. கோயில்காரரும் தங்கடை விழாக்களை இதிலை நடத்தலாம்."



**சந்திரகுமார் கண்ணா**
**(சமூக ஆர்வலர், வவுனியா)**


"மண்டபத்தைத் திருத்திற துக்கு அரசாங்கத்திட்டை இருந்து நிதி கிடைக்கேல்லை. இனி இதுக்கு நிதியை அரசாங்கத்திட்டையிருந்து வாங்கிறது அரசியல்வாதிகளின்ரை பொறுப்பு. ஆமியிட்டையிருந்து மீட்டெடுத்தாச்சு. பிரதேச செயலகத்திட்டை கையளிச்சாச்சு. இனி இந்து கலாசார அமைச்சர் சுவாமிநாதனிட்டையிருந்து தான் இதுக்கு நிதி வரவேணும். மண்டபத்தைக் கட்டி முடிச்ச உடனை ஆமி போய் இருந்திட்டிது.

மறு சீரமைப்புக்குப் பொறுப்பான அமைச்சுதான் புனரமைக்கக் காசு தரவேணும். பாராளுமன்ற உறுப்பினர் ராஜகுகனேசன் இதைக் கட்டின உடனை, திறக்கக் கூட இல்லை. ஆமி இந்த மண்டபத்தில கிட்டத்தட்ட 26 வருஷத்துக்கு மேலை இருந்திட்டுது.

இப்ப ஒரு பிரயோசனமுமில்லை. இதை உருப்படியாக்க வேணுமெண்டால் ஒரு கோடி வேணும். இது, நாங்கள் போராடிப் பெற்றது. ஏனெண்டால், மிகவும் குறைஞ்ச கட்டணத்திலை கலை நிகழ்ச்சி ஒன்றை நடத்த வவுனியாவில இடம் இல்லை. நகர சபையின்ரை கட்டுப்பாட்டிலை உள்ள மண்டபங்கள் எல்லாம் 40 ஆயிரம், 50 ஆயிரம் குடுத்தால் தான் எடுக்கலாம்.

எனவே அதை பிரதேச செயலகத்தின்ர பொறுப்பிலை வைச்சிருந்தால், மிகவும் குறைந்த கட்டணத்திலை ஐயாயிரம், ஆறாயிரம் ரூபாக்கு எடுத்து, ஆர் வேணுமெண்டாலும் நிகழ்ச்சி நடத்தலாம். ஆமி முதல் நகர சபைக்கு குடுக்கத் தான் எழுதிக் கொண்டு வந்தவை. பிறகு நாங்கள்தான் நகர சபையின்ர பொறுப்பிலை ஏற்கனவே 3 மண்டபங்கள் இருக்கு. இவையள் மண்டபத்துக்கு நாள் வாடகையா, நாற்பதாயிரம் கொண்டா, ஐம்பதாயிரம் கொண்டா எண்டால் சாதாரண மக்களாலை ஒரு நிகழ்ச்சியும் நடத்தேலாது எண்டு சொல்லித்தான் பிரதேச சபையின்ரை பொறுப்பிலை விடுவம் எண்டு எழுதி எடுத்தனாங்கள்.

நாங்கள் இஞ்சை இருந்து கதைச்சு, காகிதம் எழுதி, அவங்கள் காசு அனுப்பப் போறதில்லை. எங்கடை எம். பி மார் இந்த விசயத்தைப் பார்லிமெண்டிலை கதைக்கவேணும். இதைத்தான் திரும்பத்திரும்ப அவையளுக்கு சொல்லுறம். எந்த விசயமெண்டாலும் பார்லிமெண்டிலை கதைக்காமை ஒண்டும் நடக்காது. அமைச்சர் சுவ்வாமிநாதனுக்கு கடிதம் எழுதினனாங்கள் தான். எண்டாலும் இதுபற்றி ஆரும் எம்.பி மார் அவரோட கதைச்சாத்தான் அவருக்கும் விசயம் தெரிய வரும். நடக்கும்."




# தூக்கியெறியப்பட்ட ஹிலாரி: ஏற்றிவைக்கப்பட்ட ட்ரம்ப்

காவலூர் ஞானா

பெரும் பணத்தில் புரளும் ஒரு கோடீஸ்வரராகத்தான் அவர் பலராலும் அறியப்பட்டார். பல ஹொலிவுட் நட்சத்திரப் பிரபல்யங்கள், அரசியல் பிரமுகர்கள் என்று மல்லுக்கட்டிக்கொண்டு வந்த ஜாம்பவான்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு, பலரையும் மிரள வைக்கும் விதத்தில், உலகின் அதிசக்தி வாய்ந்த நாடான அமெரிக்காவின் அதிபர் பதவியைத் தனதாக்கி இருக்கின்றார், ஒரு 70 வயதுக் கோடீஸ்வரன். டிரம்பின் ஜனாதிபதித் தெரிவு அசாத்தி யமான ஒன்றாகவே தெரிகின்றது.

இராணுவச் சேவை மற்றும் அரசியலில் பெரிய பதவி என்று எதுவுமே இல்லாமல் அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக வந்தவர்தான் டொனாலட் ட்ரம்ப். இது அமெரிக்க ஜனாதிபதிகள் சரித்திரத்தில் ஒரு சாதனை.

## அனல் பறக்கும் வாக்குறுதிகள்

"அமெரிக்காவை மீண்டும் உன்னத நிலைக்கு கொணர்வோம்" என்று சர்ச் சைக் சைக்குரிய பிரசாரத்தில் குதித்த ட்ரம்ப், "மெக்ஸிக்கோ அமெரிக்க எல்லையில் ஒரு சுவர் எழுப்புவோம்", "முஸ்லிம்கள் அமெரிக்கா வந்து குடியேறுவதை தற்காலிகமாக நிறுத்து வோம்" என்று கொடுத்த வாக்குறுதிகள் தான் இவரது வாக்கு வேட்டையில் வெற்றி வாக்குகளை அள்ளித் தந்தனவோ என்று பலரை நினைக்க வைத்துள்ளது.

குடியிருப்புத் திட்டங்களை நிர்வகிக்கும் வர்த்தகத் துறையில் ஈடுபட்டிருந்த ட்ரம்பின் தந்தையும் பணத்தில் புரண்டவர்தான்.

தன் அப்பாவின் நிறுவனத்தில் இணைய முன்பு, இவருக்கு அப்பாவிட மிருந்து ஒரு மில்லியன் டொலர் கடன் தொகை கிடைத்துள்ளது. நிறுவனத்தை நிர்வகிக்க அப்பாவுக்கு உதவிய மகன் ட்ரம்ப், நியூயோர்க் நகரகெங்கும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தி, 1971 இல் ட்ரம்ப் நிறுவனமாக அப்பாவின் நிறுவனங்களை பெயர் மாற்றமும் செய்து கொண்டார். 1999 இல் இவரின் அப்பா உயிர் நீத்த போது, 'எல்லாம் என் அப்பாவின் ஊக்குவிப்புத் தான்' என்று அப்பாவைச் சொல்லிப் பெருமைப்பட்டார் இந்தத் தனவந்தன். ஊக்குவித்தார் ஊக்குவித்தால், பாக்கு விற்பவனும் தேக்கு விற்பான் என்ற பழமொழி ட்ரம்பிற்கு நன்றாகவே பொருந்துகின்றது.

## மதுவைத் தொட மறுப்பு

விமான ஓட்டியாக இருந்த சகோதரன் குடித்து குடித்து 43 வயதிலேயே மரணித் தவர். இதுவே ட்ரம்ப் வாழ்வின் எச்சரிக்கை மணியாயிற்று. மதுவையோ சிகரெட்டையோ தொடுவதை அறவே வெறுத்தவர் ட்ரம்ப்.

இவருடைய பெயரில் நியூயோர்க் நகரிலுள்ள 68 மாடிக் கட்டடம் போலோ இந்த நகரெங்கும் பல ஹோட்டல்களும், கட்டடங்களும் இருப்பதோடு மும்பாய், இஸ்தான்புல் நகரங்களிலும் பிலிப் பைன்ஸ் நாட்டிலும் ட்ரம்ப் கோபுரங்கள் எழுப்பப்பட்டுள்ளன. 1996 தொடக்கம் 2015 வரைஉலக அழகிப் போட்டிகள், மிஸ் அமெரிக்கா, மிஸ் பதின்ம வயதழகிப் போட்டிகள் எல்லாவற்றையும் நடத்தியவர் இந்த டொனால்ட் ட்ரம்ப்பேதான். நெடுங்காலம் ஒளிபரப்பாகிய ஒரு பிரபல்ய தொலைக்காட்சித் தொடருக்காக 213 மில்லியன் டொலர் தொகை பெற்றவர் இந்த வர்த்தகப் பிரமுகர்.

பல நூல்களையும் எழுதியுள்ள இவர் அமெரிக்க போர்ப்ஸ் சஞ்சி கையின் கணிப்பின்படி 3.7 பில்லியன் டொலர் சொத்து மதிப்புடையவரென்று சொல்லப்பட்டது.. ஆனால் இவரோ தன் சொத்து மதிப்பு 10 பில்லியன் டொலரை எட்டும் என்று சொல்லி வந்தவர்.

## லீலைகளில் அமெரிக்க கிருஷ்ணன்

இவர் மூன்று தடவைகள் திருமணஞ் செய்திருந்தாலும், செக் நாட்டின் விளை யாட்டு வீராங்கனையும் ஒரு விளம்பர மொடலுமாகத் திகழ்ந்த இவானாதான் இவர்களில் பிரபல்யமானவர். 1990 இல் இவரை விவாகரத்து செய்துவிட்டு, 1993 இல் மீண்டும் இவர் திருமணஞ் செய்தது ஒரு நடிகையைத்தான்! 1999 இல் மீண்டும் விவாகரத்து. 2005 இல் இவர் மனைவியாகியவர் மெலானியா என்பவர்.

1987 இலேயே அமெரிக்க அதிபராகும் கனவு இவரிடம் தொற்றிக் கொண்டிருந் துள்ளது. 2000 ஆவது ஆண்டில் ஒரு அபேட்சகராக போட்டியிட்டுள்ளார் இவர். 2008 இன் பின்பு வெளிப்படையாக இவர் எதையும் பேசுவது பலரின் கவனங்களை ஈர்க்கத் தவறவில்லை. பரக் ஒபாமா அமெரிக்காவில் பிறந்தவரா என்ற இவர் எழுப்பிய சர்ச்சைக்குரிய கேள்விக்கு ஹவாய் தீவில் பிறந்தவர் ஒபாமா என்ற தகவல் பதிலாக வந்து இவரை சற்றே அடங்க வைத்தது. தன் கூற்றில் உண்மை யில்லை என்று இவர் ஒப்புக் கொண்டா லும், ஒபாமாவிடம் மன்னிப்பு கேட்க இவர் தயாராக இல்லை.

## வாக்குறுதிகள்: கல்லிலா? காற்றிலா?

தன் பிரசாரத்தில் ட்ரம்ப் வாக்களித்தது போல் போல இனியும் இவர் செயற்படு வாரா என்பது பலரின் கேள்விகளாக இருக்கின்றன.

மெக்ஸிக்கோவிற்கும், அமெரிக்காவிற் கும் இடையில் இவர் ஒரு பெருஞ்சுவரை எழுப்புவாரா? ஹிட்லருக்கு கெட்ட பெயர் வாங்கித் தந்த பேர்லின் பெருஞ்சுவர் போல இவர் எழுப்ப நினைக்கும் மெக்ஸிக்கோ - அமெரிக்க எல்லைச் சுவர் இவருக்கு அபகீர்த்தியை உண்டாக்குமா? இப்படி ஒரு பெயரைச் சம்பாதிக்க முதல், இந்த நீண்ட எல்லைச் சுவரை எழுப்ப தேவையான பணத்தை வழங்க அமெரிக்க காங்கிரஸ் அங்கீகாரம் கொடுக்குமா? ஆனால் ட்ரம்ப்போ இந்தப் பணத்தை மெக்ஸிக்கோ அரசே தரவேண்டுமென நினைக்கிறார். இதற்கு 2.2 பில்லியன் தொடக்கம் 13 பில்லியன் வரை பணம் தேவைப்படலாமென பிபிஸி ஒரு தடவை கூறியிருந்தது. குடியரசின் தலைமையின் கீழ் காங்கிரஸ் இருந்தாலும் இதற்கான அங்கீகாரம் கிடைப்பது மிக மிகச் சிரமம் என்பதே அவதானிகள் கருத்தாக இருக்கின்றது.

## முஸ்லிம்களுக்குத் தடையா?

அமெரிக்காவிற்குள் நுழையும் அனைத்து முஸ்லிம்களையும் தடுக்கும் சட்டம் கொண்டு வருவேன் என்பது ட்ரம்பின் இன்னொரு வாக்குறுதி. இதையே தெளிவுபடுத்துகிறேன் என்று ட்ரம்ப் இன்னொரு கட்டத்தில், பயங்கரவாதிகள் உள்ள நாடுகளிலிருந்து வரும் முஸ்லிம்களுக்குத்தான் இந்தத் தடையென்றார்.



இஸ்லாம் மதத்தைத் தழுவிய அமெரிக் கர்களை முதலில் பார்ப்போம். எந்த ஜனாதிபதியாலும் இவர்கள் நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்க முடியாது.. மதச் சுதந்திரத்தை அனுபவிக்கும் இந்த நாட்டில் தடை என்பது அசாத்தியமான ஒன்று. அமெரிக்கர்கள் அல்லாத முஸ்லிம் களை அமெரிக்காவிற்குள் வருவதை ஒரு ஜனாதிபதியால் எப்படித் தடுக்கமுடியும்? நீதிமன்ற விவகாரமாகி இறுதியில் பெரும் இழுபறிதான் ஏற்படும்.

இதற்காக ட்ரம்ப் கையாலாகதவர் என்று முத்திரை குத்திவிட முடியாது. ஒரு ஜனாதிபதிக்கு ஒரு குறிப்பிட்ட நாட்டின் பிரஜைகளை தன் நாட்டிற்குள் வரமுடியாது தடுக்கும் அதிகாரம் இருக்கின்றது. 1980 இல் ஜனநாயகக் குடியரசின் தலைவராக இருந்த ஜிம்மி கார்ட்டர். பணயக் கைதிகள் விவகாரம் நாட்டில் சூடாக இருந்தபோது, ஈரானி யர்கள் நாட்டிற்குள் வரவிடாது தடுத்தார்.

தன் இன்னொரு பிரசாரமாக இருந்த சிரிய அகதிகள் விடயத்தில் அமெரிக்கா வில் சிரியர்கள் மீள் குடியேறுவதை ட்ரம்ப் தடுத்து நிறுத்த முடியும்.

அடுத்து ட்ரம்ப் எதிர்நோக்குவது ஈரானின் அணுசக்தி ஒப்பந்தம் சம்பந்தப் பட்ட விவகாரம். மிக முட்டாள்தனமான ஒப்பந்தம் என்று இந்த ஒப்பந்தத்தை வர்ணிக்கும் ட்ரம்ப் தற்போதைய ஒப்பந் தத்தை விட சில மாற்றங்களுடன் இன்னொரு ஒப்பந்தத்தை தரும்படி ஈரானிய அரசைக் கோரலாம். ஆனால் ஈரான் சம்மதிக்குமா என்பது கேள்விக் குறிதான். ஜனாதிபதி என்ற அதிகாரத்துடன் இந்த ஒப்பந்தத்தின் போது சமூகமளித்தி ருந்த அனைத்து நாடுகளையும் வர்த்தகத் தடையை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரக் கூறி, ஈரானை பேச்சு வார்த்தைக்கு நிர்ப்பந்திக்கலாம். ஆனால் இதற்கு ஏனைய நாடுகள் ஒப்புதல் தருமா என்பது சந்தேகமே. அமெரிக்காவின் புதிய வர்த்தகத்தடைகளென சிலவற்றை அறிமுகப்படுத்தலாம். ஒரு அமெரிக்க செனட்டர் இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து குரல் கொடுத்தமையால் புதிய தடைகள் என்பது ஒருவேளை சாத்தியப்படலாம். அமெரிக்க நிதி முறையை உபயோகித்து வெளிநாட்டு நிறுவனங்கள் ஈரானுடன் வைத்திருக்கும் உறவுகளில், ட்ரம்ப் அங்கீகரிக்கும் தடைகள் விரிசலை ஏற்படுத்தலாம்.

## சீனாவுடன் மோதுவாரா?

சீனாவுடனான வர்த்தக மோதலையும் ட்ரம்பினால் தொடக்கி வைக்க முடியும். இறக்குமதி செய்யப்படும் சீன உற்பத்தி களுக்கான தீர்வைகளின் அதிகரிப்பு, சந்தை விலைகளை அதிகரிக்க வைத்து, வர்த்தக உலகில் ஒரு தளம்பலை ஏற்படுத்தலாம். இது பலராலும் விரும்பத்தகாத ஒன்றாக இருக்கலாம். ஆனால் ட்ரம்ப்பிடம் இதை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் இருக்கின்றது.

## ஹிலாரி ஏன் தோற்றார்?

வெற்றின் பெற்ற ட்ரம்பை விடவும், இப்போதும் தேர்தலில் தோற்றுப்போன ஹிலாரியைப் பற்றியே அமெரிக்கர்கள் அதிகம் பேசுகிறார்கள். அமெரிக்க மக்கள் பெரும்பாலானோரின் மனதைக் கவர்ந்த ஹிலாரி இந்தத் தேர்தலில் மண் கவ்வியதை பலராலும் இன்னும் ஜீரணிக்க முடியவில்லை.


படித்தவர்கள், அனுபவசாலிகளெல் லாம் வெள்ளைமாளிகையில் இருந்தால் இனி நமக்குதவ மாட்டார்கள். ட்ரம்ப் போன்ற வர்த்தகப் பிரமுகர்கள்தான் இனி நமக்குத் தேவை என்று பொதுமக்கள் நினைக்கத் தலைப்பட்டதால் தான், வாக்குகள் கைமாறின என்கிறார்கள் அவதானிகள்.

ஹிலாரி உள்வீட்டுப் பிள்ளை. அதிக பட்ச தகுதியைக் கொண்ட அபேட்சகர் நான்தான் என்று ஹிலாரி தன் பிரசாரத்தில் சொல்லிக் காட்டினார். தனது பழுத்த அரசியல் அனுபவத்தை அடிக்கடி பிரசாரத்தில் நினைவூட்டி, தான் ராஜாங்க அமைச்சர், நியூயோர்க் நகரின் செனட்டர் என்பதையெல்லாம் பிரச்சார மேடையில் கிளின்ரன் சொல்லிக்காட்டத் தவறவில்லை.

ஆனால் ட்ரம்பிற்கு ஆதரவளித்தவர் கள் இந்தத் தகுதியும், அனுபவமும் அவசியமில்லை. வெள்ளை மாளிகைக் குள் வர்த்தக அனுபவமுள்ளவர்கள்தான் தேவையென குறிப்பாக உருக்கு ஆலைகள் உள்ள பிராந்தியத்தினர் விரும்பியுள்ளார்கள்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

தமிழ் சினிமாவில் 15 ஆண்டுகளுக்கு முன்பு உருவான “சுயம்வரம்” படம் 24 மணி நேரத்தில் எடுக்கப்பட்டு கின்னஸ் சாதனை புரிந்திருக்கிறது. அதை முறியடித்து வெறும் 10 மணி நேரத்தில் ஒரு படம் உருவாகியிருக்கிறது. சிங்கம் புலி நடிக்க, “அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய்” என்ற அந்தப் படத்தை ஒரே இடத்தில் எடுத்து மிரட்டியிருக்கிறார் இயக்குநர் எம். எஸ்.செல்வா. “லிம்கா புத்தகத்தில் இடம் பெறுவதுதான் லட்சியம், அதை சாதித்து விட்டோம்” . என பூரித்து சொல்கிறார் இயக்குநர்.





நடிகர் சங்கத் தேர்தலில் நெருக்கமான விஷாலும், கார்த்தியும்தான் தற்போது நெருங்கிய நண்பர்கள். இரண்டு பேரும் இணைந்து நடிக்க முடிவெடுத்துள்ளார்கள். “கருப்பு ராஜா வெள்ளை ராஜா” என்ற பெயரில் உருவாகும் அந்த இரட்டை கதாநாயகன் கதையை தயாரித்து இயக்குகிறார் பிரபுதேவா. தமன்னாவை நாயகியாக ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்.



விஜய் சேதுபதி “நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்” படத்தில் நடித்தபோதே அதன் ஒளிப்பதிவாளரும், நண்பருமான பிரேம் குமாருக்கு ஒரு படம் நடித்து தருகிறேன் என வாக்குறுதி கொடுத்தார். தற்போது பிரேம் கதையோடு விஜய் சேதுபதியிடம் போக உடனே ஒத்துக் கொண்டதோடு மொத்தமாக கால்ஷீட்டையும் கொடுத்து விட்டாராம். நாயகியாக நடிக்க த்ரிஷாவிடம் கேட்க, “விஜய் சேதுபதியோடு நடிப்பது என் நீண்ட நாள் ஆசை” என சொல்லி அவரும் சம்மதம் சொல்லி விட்டாராம்.

அதி நவீன இசைக்கூடம் கட்டுவதற்கு இசையமைப்பாளர் இமான் திட்ட மிட்டு இருக்கிறார். விருகம்பாக்கத்தில் இவருடைய பாடல் ஒலிப்பதிவுக் கூடம் இருக்கிறது. தற்போது, அதற்கு அருகிலேயே புதிதாக இடம் ஒன்றை வாங்கியிருக்கிறார். அங்கு அதி நவீன இசைக்கூடம் ஒன்றை கட்டுவதற்கு முடிவு செய்திருக்கிறார் இமான். விரைவில் இதற்கான பணிகளைத் தொடங்க இருக்கிறார். முன்னதாக, இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜ் புதிதாக அதிநவீன இசைக்கூடம் ஒன்றை உருவாக்கி முடித்திருக்கிறார் என்பது நினைவுகூரத்தக்கது.




கார்த்திக் சுப்புராஜ், இறைவி தோல்வியை சரி ஈடு கட்ட வேண்டும் என்ற ஒரு முடிவோடு இறங்கி விட்டார் போலிருக்கிறது. அமெரிக்காவில் முகாமிட்டிருக்கும் அவர், கதையை செதுக்குவதோடு, அங்கேயே படப்பிடிப்பு நடத்த இடங்களும் பார்த்து வருகிறாராம். அதோடு விடாமல் தனுஷோடு மோதவைக்க ஹாலிவுட்டில் இருந்து காட்ஃபாதர் அல்பசினோவை பேசி வருகிறாராம். மார்கன் ஃப்ரீமேன் அல்லது அல்பசினோவை தன் படத்தில் நிச்சயம் நடிக்க வைப்பேன் என முடிவாக இருக்கிறாராம்.



சமீபத்தில் மோகன்லால் நடிப்பில் வெளியான ‘புலி முருகன்’ 50 கோடியை கடந்து வசூலாகிக் கொண்டிருக்கிறது. அதனை முக்கிய இந்திய மொழிகளில் ரீமேக் செய்ய போட்டாபோட்டி நடந்து வருகிறது. மலையாள தயாரிப்பாளரே தமிழ் ரீமேக்கையும் தயாரிக்க ஆர்வமாக இருக்கிறாராம். தமிழ் கதாநாயகர்களை அணுகி இதில் நடிக்க வைக்க பேசி வருகிறாராம்.

இயக்குநர் விஜய் இயக்கும் அடுத்த படத்துக்கு “குமரி கண்டம்” என்ற தலைப்பு வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்தப் படத்தில் ஜெயம் ரவியுடன் சாயிஷா சேகல், வருண், தம்பிராமையா உள்ளிட்டோர் நடிக்கவுள்ள நிலையில், வில்லனாக சென்னையை சேர்ந்த பிரபல தொழிலதிபர் சாம் பால் (Sam Paul) நடிக்கவுள்ளார். சென்னையில் பல தொழில்களை வெற்றிகரமாக நடத்தி வாடிக்கையாளர்களின் நாயகனாக திகழும் இவர் முதன்முதலாக திரையில் வில்லனாக மிரட்டவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாலிவுட் பிரபலங்கள் என்றாலே திருமண விழாக்களில் ஆடுவது எல்லாம் சகஜம். ஷாரூக் கான் முதல் நேற்று வந்த சாதா கான் வரை எல்லா நடிகர்களுக்குமே மவுசு உண்டு. அடுத்த மாதம் இந்தியாவின் பணக்காரரான முகேஷ் அம்பானியின் மகள் இஷா அம்பானி திருமணம் நடக்கிறது. மகள் ஷாரூக் கானின் தீவிர ரசிகை என்பதால், தன் திருமணத்தில் ஷாரூக் ஆட வேண்டும் என ஆசைப்பட்டிருக்கிறார். பல கோடி ரூபாயை கொடுத்து ஷாரூக்கை மொத்தமாக குத்தகைக்கு எடுத்து விட்டாராம் அம்பானி.



அல்போன்ஸ் புத்திரன் இயக்கத்தில் சிம்பு நடிக்கவிருக்கும் புதிய படத்தின் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டு இருக்கிறது.இருவருமே கதை விவாதத்தில் ஈடுபட்டு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், விரைவில் இருவரது படத்தின் தயாரிப்பாளர் மற்றும் இதர தொழில்நுடப் கலைஞர்கள் இறுதி செய்யப்பட் இருக்கிறது.சிம்பு நடிக்கும் படத்தை தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் இந்தி என 4 மொழிகளிலும் ஒரே சமயத்தில் உருவாக்க திட்டமிட்டு இருக்கிறார் அல்போன்ஸ் புத்திரன்.

தமிழில் விஜய் சேதுபதி மாதிரி இந்தியில் அக் ஷய் குமார்... என்ன, அவர் கொஞ்சம் சீனியர். மாதம் ஒரு பட அறிவிப்பை வெளியிட்டு வருகிறார். 2019 வரை அவரது கால்ஷீட் கிடையாது. பல படங்களில் நடித்து வரும் அக் ஷய், ஒலிம்பிக் பற்றிய ஒரு படத்தில் நடிக்க இருக்கிறார். "கோல்ட்" என்ற அந்த படம் 1948-ல் இந்தியாவின் முதல் ஒலிம்பிக் பின்னணியில் நடக்கும் ஒரு படமாம். கோல்ட் 2018 இந்திய சுதந்திர தினத்துக்கு வெளியாகிறதாம்.

என்னதான் நயன்தாரா தமிழில் கில்லியாக இருந்தாலும் தெலுங்கில் சமந்தா தான் முன்னணியில் உள்ளார். தெலுங்கு படங்களில் மீண்டும் நடிக்க தொடங்கியிருக்கும் நயன்தாரா இந்த போட்டியைச் சமாளிக்க தன் சம்பளத்தை கொஞ்சம் விட்டுக் கொடுக்க முன் வந்திருக்கிறார். முன்னணி நாயகர்கள் சிலருடன் நடிக்க சமந்தாவை தேடி சென்ற ஒரு சில வாய்ப்புகளை சமந்தா ஏற்காமல் ஓய்வெடுத்து வர, அந்த வாய்ப்புகளை தன் வசப்படுத்தியிருக்கிறார் நயன்தாரா.






மலையாளத்தில் நகைச்சுவை பாத்திரங்களில் நடித்து பிரபலமான சௌபின் சாஹிர் 'பறவா' எனப் பெயரிடப்பட்டுள்ள படத்தை இயக்கி வருகின்றார். இதில் துல்கர் சல்மான் முக்கிய வேடத்தில் நடிக்கின்றார். இதற்காக 20 நாட்கள் கால்ஷீட் வழங்கியுள்ளாராம் துல்கர்.

கேத்ரின் தெரஸா தெரிந்தோ தெரியாமலோ சரைனோடு படத்தில் அரசியல்வாதியாக நடித்துவிட்டார். அதே போன்ற வேடம் ஒன்றில் நடிக்க வைக்க விடாமல் கேட்டார்களாம். கதையைக்கேட்ட கேத்ரின் அவரது ரோல் ரொம்ப பிடித்து போய் நடிக்கிறேன் என சொல்லிவிட்டார். தேஜா இயக்க, ராணா டக்குபதி, காஜல் அகர்வால், நவ்தீப் ஆகியோர் நடிக்கும் படத்தில் கேத்ரின் தெரஸாவுக்குதான் முக்கியத்துவம் வாய்ந்த கதாபாத்திரமாம்.

தமிழ் சினிமாவில் ஓரம் கட்டப்பட்ட ரெஜினா தெலுங்கில் நடித்து நல்ல இடத்தைப் பிடித்து விட்டார். தமிழிலும் பலபடங்களில் நடித்து வருகிறார். விளையாட்டு பயிற்சியாளர் ஆதித்யா மேனனைக் காதலித்து வந்த அவர், திடீரென நிச்சயதார்த்தம் செய்து கொண்டு விட்டார். அதை அவர் அறிவிக்க நினைக்க, "மார்க்கெட் நன்றாக போய்க்கொண்டிருக்கும் போது காதல், திருமண விஷயங்களை அறிவிக்காதே" என நட்பு வட்டாரம் அறிவுரை சொல்ல... உடனே அந்த விஷயத்தை அப்படியே அமுக்கி விட்டாராம்.




சசிகரன் இயக்கத்தில் உருவாகி வருகிறது நக்கனம். நக்கனம் என்றால் நிர்வாணம் என அர்த்தம். இன்றைய காதல் எதை மையமாக வைத்து நகருகின்றது. எவ்வாறான பாதிப்புக்களை உருவாக்குகின்றது? போன்றவற்றை உள்ளடக்கி இருக்கின்றது இந்தப் படம். இம்மாத இறுதியில் இணையத்தில் வெளியாகும். இதில் நரேஷ்,சந்தனேஸ் நடித்துள்ளனர்.

கணபதி சர்வானந்தா

# நான் 'பேன்' டா...!

என்னுடைய பெயர் பேன். இப்போ நான் பரமேஸ்வரியின் தலை முடிக்குள் வாழ்ந்து வருகிறேன். இங்கு குடியேறி ஏறத்தாழ மூன்று கிழமைகளாகின்றன. முன்பு கிளிநொச்சிச் சந்தையில் கீரை வியாபாரம் செய்கின்ற பொன்மணியின் தலை முடிக்குள் ஏறத்தாழ பத்து நாட்கள் வாழ்ந்திருக்கிறேன்.

வாழ்ந்திருக்கிறேன் என்பதை விடப் பொன்மணியின் கைவிரல்களுக்குள்ளும், ஈர்வாரிக்குள்ளும் பிடிபடாமல் தலை வெளியில் ஓடிப்பிடித்து விளையாடி இருக்கிறேன். பொன் மணியின் நடவடிக் கையால் எனது உயிர் அடிக்கடி போய் வரும். அவளது சுத்தம் என்ற நடத்தை என்னைப் பல தடவை பாதித்திருக்கிறது.



மாலை வேளைகளில் புளியடியில் பேன் பார்த்துக் கதைச்சுச் சிரித்து மகிழ ஒன்று கூடும் பொன்மணியின் சிநேகிதிகள் என்னைப் படாதபாடு படுத்தியிருக்கிறார்கள்.

பொன்மணி, குளித்துப் பொட்டு வைத்து, தலைநீவிப் பூச்சூடி வாழ்க்கையைத் தொடங்குவாள். அது எனக்குப் பிடிக்காது. அவளின் அந்த இயல்பு எனக்குப் பலவித சிரமங்களை ஏற்படுத்தியிருந்தது. இருந்தும் வேறு வழியில்லாத நிலையில் அங்குதான் வாழ்ந்தேன். ஏனெனில் நான் பிறந்தது அவளின் தலையிலென்றபடியால், எனக்கு அங்கிருந்து செல்ல மனம் இல்லை.பிறந்த இடத்துப் பாசம் என்னைத்தடுத்தது. என்றாலும் பொன்மணியின் தலையைவிட பரமேஸ்வரியின் தலையில் பொருத்தமான சூழ்நிலையும், தட்ப வெப்ப நிலையும் இருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

நான் குடி வந்த கடந்த மூன்று கிழமைகளில் ஒரு தடவைதன்னும், அவள் தலை, தண்ணியைக் கண்டிருக்கவில்லை. வீட்டு வேலை, தோட்ட வேலை, பிள்ளைகள் படிப்பு என்று அலைவதனால் பரமேஸ்வரி அடிக்கடி தலை முழுகமாட்டாள். அவளுக்குத் தலையில் தண்ணி படுவதென்றால், கொல்லக் கொண்டு போறமாதிரியான உணர்வுச் சூழ்நிலையை ஏற்படுத்தும்.

எனது இடம் பெயர்வென்பது திட்டமிட்டு நடந்ததல்ல. அது ஒரு விபத்து. விபத்தாக இருந்தாலும் எனக்கு ஒரு நிரந்தர சுகத்தைத் தந்த நிகழ்வு. ஒரு நாள் பரமேஸ்வரி குடும்பம் கிளிநொச்சிக்கு வந்து விட்டு யாழ்ப்பாணம் திரும்பிச் செல்கின்றபோது சீ.ரீ.பீ பஸ்ஸில் பொன்மணியின் சீற்றிற்கு அருகில் பய்ணித்தவள் பரமேஸ்வரி. அதே சமயம், பொன்மணி தனது உறவொன்றை வருத்தம் பார்க்க யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தாள். படுவான் வெயில் பஸ்ஸின் கண்ணாடிக் குள்ளால் சனத்தைப் படாத பாடு படுத்திக் கொண்டிருந்தது. நீண்ட பயணக் களைப்பும், யன்னலினூடாக வந்த வெய்யில் வெக்கையும் பரமேஸ்வரியைச் சற்றுக் கண்ணயரச் செய்து விட்டது. மெல்லக் கண்மூடி, தன்னிலை மறந்து கிடந்த பொன் மணியின் தோளில் மெல்லச் சாய்ந்து கொண்டாள் பரமேஸ்வரி. பஸ், பளையை நெருங்கிக் கொண்டிருந்த வேளை, திடீரென்று காற்றில் படர்ந்து வந்த வேர்வை நெடி என்னை ஒரு கணம் திக்கு முக்காடச் செய்துவிட்டது. எனக்குப் பிடித்த மணம். எனக்குப் பிடித்த சூழல். அப்பப்பா. சிறிது நேரம் என்னை மறந்து தூங்கி விட்டேன். கண்விழித்துப் பார்த்த போது பரமேஸ்வரியின் முடிக்குள் நானிருந்தேன். கரடுமுரடான தேசத்திலிருப்பதாக உள் உணர்வு ஏற்ப்பட்டது. அந்த மேடும் பள்ளமும் தலையில் இயல்பாக வரும் சொடுகினாலும், அவ்வப்போது நல்லெண்ணை வைப்பதனால் வந்து சேரும் ஊத்தைகளினாலும் ஏற்பட்டது என்று தெரிந்து கொண்டேன்.



பரமேஸ்வரியின் தலையில் எனக்குப் புதுமையான அனுபவம் கிடைத்தது. அன்று தொட்டுப் பரமேஸ்வரியின் உடன் பிறப்பானேன். பரமேஸ்வரி களைக்கக், களைக்க வேலை செய்கின்றபோது ஏற்படும் தலை வேர்வையில் அவ்வப் போது சூடு காய்வது எனது வழமை. பரமேஸ்வரி குடும்பத்தைப் பொறுத்த வரை அது எனது ஆளுமைக்குட்பட்டதாக எண்ணுகிறேன். இரவு வந்தால் இருட்டில் ஒரே குஷி தான். பரமேஸ்வரியின் தலை தொடக்கம் கணவன், மூத்தவள், இளையவள் என்று எல்லாத் தலைகளிலும் பயணம் செய்வேன். இது வரை ஏறத்தாழ நானூறு முட்டைகளை அதாவது ஈர்களை இட்டுவிட்டேன். சிலது பொரிக்கும். சிலது ஈர்வாரிக்குள் அகப்பட்டுக் கொல்லப்பட்டுவிடும். பொரித்த குஞ்சுகள் இரவுகளில் பரமேஸ்வரியின் பிள்ளைகளின் தலைக்குக் கடத்தப்பட்டு விடும். அதில் சிலவற்றை அவர்கள் தமது பள்ளித் தோழிகளின் தலைக்குள் கொடுத்துவிட்டு வந்துவிடுவார்கள். எம்மை ஒழித்துவிட்டுச் சுத்தமாக வருமாறு பரமேஸ்வரியின் பிள்ளைகளைப் பலமுறை பாடசாலை நிர்வாகம் இடைநிறுத்திக் களைத்துப் போனதால் இப்போது அவர்கள் அது பற்றிக் கதைப்பது இல்லை.

> " எங்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவென்றே சம்பூ வர்க்கம் அதிகம் விற்கப்படுகின்றது. அதுவே எமது வர்க்கத்துக்குரிய சவாலாகும்.

ஏறத்தாழ எனது இனத்தவர்கள் உலக நாடுகள் எல்லாவற்றிலும் இருக்கின்றனர். அண்மையில் பிரான்ஸ் நாட்டில் இருந்து வந்த பரமேஸ்வரியின் சகோதரனின் மனைவி வந்திறங்கியதும் தலைக் கடியால் துவண்டு போனாள். அவள் மிகவும் சுத்தமானவள். அவள் முடியைச் சீப்பால் இழுத்துக் கொட்டிய போது, வெள்ளை நிறத்தினாலான எனது உறவு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டது. அப்போது நான் மிகவும் பயந்து போனேன்.

விமானத்தில் அவளருகில் இருந்த வெள்ளைக் காரியிலிருந்து தொத்திய பேன் என்று அவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள். எனவே அந்தந்த நாட்டிற்குரிய பெண்களின் தலை முடி நிறத்திற்கேற்ப எமது உறவுகளின் நிறமும் மாறுபடுகிறது என்று அறிந்து கொண்டேன். கடித்துத் தொல்லை கொடுக்கக் சுடாது என்று பல தடவை எண்ணியிருக்கிறேன். ஆனால் பாழாய்ப்போன பசி விடாது. தலையைக் கடித்து இரத்தம் குடிப்பதால் தான் மக்களால் அதிகம் வெறுக்கப் படுகிறோம். அப்படி நாங்கள் நடக்காவிட்டால் மக்கள் எங்களை வாழவிடுவார்கள் என்று என் மனம் எண்ணுகிறது. இருந்தும் பரமேஸ்வரியின் தலைபோல இப்போ தலைகள் குறைவு. ஏனெனில் எங்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவென்றே 'சம்பூ' வர்க்கம் அதிகம் விற்கப்படுகின்றது. அதுவே எமது வர்க்கத்துக்குரிய சவாலாகும். பரமேஸ்வரி கைவிரல்களால் தலையைச் சொறிந்து கொள்ளுகிறாள். அவளிடமிருந்து தப்பிக்க வேண்டும். அவளிடமிருந்து தப்பலாம். ஆனால் காலனிடமிருந்து தப்பமுடியா தென்பது எனக்குத் தெரியும். ஏனெனில் எமது இனத்தின் ஆயுள் காலம் ஏறத்தாழ 5 தொடக்கம் 6 கிழமைகள் தானே.

---

புதுவிதி

## மனத்தீ !

எனக்குத் தெரியும்
எல்லா இரவுகளும்
ஏமக்கானவை என்று.

பகலின் உயிர்விழுங்கி
மனங்களில் பிரமையேற்றும்
மாயவலையாய் விரிகின்ற
எல்லா இரவுகளும்
எமக்கானவை என்று
எனக்குத் தெரியும்.

இறந்துபோன அம்மாவை
பிணமென்ற பெயரில்
எரியூட்டிய
பின்னைய பொழுதுகளில்
என்னருகே விரிந்து கிடந்த
பாயின் வெறுமையை
நேசிக்கச் செய்தது
இந்த இரவுதான்.

அனைவரும் செவிதொலைத்த,
அந்தப் பொழுதுகளில்
எம்மோடு என்றும்
கூட நடந்ததும்
இந்த இரவுதான்.


முகம் தொலைந்தும்
முகவரி தொலையாமல்,
சிறையில் விழுந்தும்
சிறகு கிழியாமல்,
அத்தனையும்
அவிழ்த்துக் காட்டிய
அந்தப் பொழுதுகளின்
வெளிச்சம்
அருவருப்பு நிறைந்தது.

மின்குமிழ்களின்
காயமில்லாமல்,
விளக்குகளின்
வேதனையில்லாமல்,
நிலவொளியில்
மிதிபடாமல்,
நெருங்கும் ஒவ்வொரு
இரவுகளும்
மிக.. மிக அழகானவை.

இரவுகளின் சிறகுகளில்
மிதக்கும் எங்கள் பாடல்கள்,
வெளிச்சத்தில் பலருக்கு
புரிவதேயில்லை
புதிர்போல...

இதனால்,
உனக்கும் தெரியும்
எனக்கும் தெரியும்
எல்லா இரவுகளும்..
எமக்கானவை என்று..!

த.நிரஞ்சலன், கிளிநொச்சி



# நாறிக்கிடக்கும் யாழ்.நகரம்









**நோக்கன்**

ஏறத்தாழ ஒருவார காலத்திற்கு மேல், யாழ்ப்பாண மாநகரமே நாறிப் போய்க் கிடந்தது. எல்லா இடங்களும், சுகாதாரச் சீர்கேட்டால் சீரழிய, என்றும் அனுபவித்திராத அசுத்த நெடி நிறைந்த சூழலில், எங்கு பார்த்தாலும் குப்பைகளும், கூழங்களும் வழிமறிக்க, மக்கள் 'தாச்சி' மறித்தபடியே நகரத்திற்குள் நுழைந்தனர். இதற்கெல்லாம் காரணம், சுத்திகரிப்பு தொழிலாளர்கள், தமது நிரந்தர நியமனத்தைக் கோரிக்கையாக முன்வைத்து முழு நிர்வாகப் பணி முடக்கப் போராட்டத்தில் குதித்ததுதான். வட பிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கம் இந்தப் போராட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது.

## ஏனிந்தப் போராட்டம்?

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில், மாநகரநபைக்கு முன்பாக நிர்வாகப் பணி முடக்கப் போராட்டம் நடைபெற்றது. ஆனால் அந்தப் போராட்டத்தின் எதிரொலியாக யாழ். நகரம் முழுதுமே நாறிக்கொண்டிருந்தது. "திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால் முருகா, திருத்தணிமலை மீது எதிரொலிக்கும்" என்ற பாடலுக்கு இதை விட கண்கண்ட விளக்கம் தேவையில்லை. தற்காலிக பணியில் நீண்ட காலமாக இருக்கும் மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்களை, நிரந்தரமாக்கக் கோரி அவர்களோடு நிரந்தரப் பணியிலுள்ளவர்களும் போராட்டத்தில் குதித்திருந்தனர். அவர்கள் தமது நிரந்தரப் பணி தொடர்பான கோரிக்கையை முன்வைத்து, ஏற்கனவே இரண்டு தடவை போராடி இருப்பதாகச் சொன்னார் இருக்கிறார், போராட்டக்காரர்களில் ஒருவர். தற்போதுள்ள ஆணையாளருக்கு முன்னர் அந்தப் பதவியில் இருந்தவரும், "சற்றுப் பொறுங்கள். பார்க்கலாம். அவசரப்படவேண்டாம்" என்ற வார்த்தைகளைச் சொல்லி, இவர்களது போராட்டத்தை முடிவுறச் செய்திருந்தார். எனினும் அன்று தொடக்கம் இன்றுவரை எந்தவித முன்னேற்றத்தையும் கண்டிராத தொழிலாளர்கள், தற்பொழுது மீண்டும் போர்க்கொடி எடுத்திருப்பதாகப் போரட்டத் தரப்பினர் சொன்னார்கள்.

படையினரும் மற்றும் வேறு பலரும் தத்தமது சூழலில் பல நாட்களாகத் தேங்கிக் கிடக்கின்ற கழிவுகள் பற்றிப் ஆணையாளரிடம் புகார் மனுக்களைக் கொடுத்தபடியே இருந்தனர். வாசலில் போரட்டகாரர்கள் நிறைந்தனர். மாநகர சபை நிர்வாகத்தினர் பிற ஊர்களிலிருந்து சுத்திகரிப்புத் தொழிலாளர்களைக் கொண்டுவந்து நகரச் சுத்திதரிப்பைச் செய்ய முற்பட்டிருக்கிறார்கள். நாவாந்துறையில் வெளியூர் தொழிலாளர்களைக் கொண்டு வந்து சுத்திகரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தகவல் கிடைக்க, போராட்டக்காரர்களில் சிலர் அங்குபோய் தடுக்க நினைத்தனர். எனினும் அது கை கூடவில்லை. முடிவில் அதிகாரிகள் களத்தில் இறங்க முற்பட்டவேளை வட மாகாண சபை வழங்கிய உறுதி மொழியினால் போராட்டம் தற்போது கைவிடப்பட்டுள்ளது.

## மக்கள் ஆதரவில்லை

யாழ்ப்பாண நகர வாசிகளினால் செலுத்தப்படும் வரிப்பணத்திலிருந்தே, தமக்குரிய ஊதியமும் தரப்படுகிறதென்ற நடைமுறையைத் தொழிலாளர்கள் அறிவது மிகமிக முக்கியம். சுகாதார ரீதியாக அசௌகரியத்தை எற்படுத்துகின்ற அல்லது உயிராபத்தை ஏற்படுத்துகின்ற எந்தவொரு நடவடிக்கைகளையும் நகரவாசிகள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். எனவே அத்தகைய போராட்டங்களுக்குப் பரிபூரண ஆதரவைத் தருவதற்கும் பின் நிற்பார்கள் என்பதையும் போராட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தெளிவுபட அறிந்து வைத்துக் கொள்ள வேண்டும். அங்ஙனம் மக்கள் மயப்படாத போராட்டங்கள், தோல்வியைத் தழுவிக் கொண்டதே வரலாறு. "போராட்டத்திற்கு முந்திய காலங்களிலும் நகர சுத்திகரிப்பென்பது பூரணமாக நடைபெறுவதில்லை, சுத்திகரிப்புத் தொழிலாளர்களும் சரி அது தொடர்பான உத்தியோகத்தர்களும் சரி, அவர்களது பணியினைச் சரிவரச் செய்வதில்லை" என்ற குற்றச்சாட்டையும் நகரவாசிகள் முன்வைக்கின்றனர். வழமையாகவே சுத்திகரிப்புப் பணியில் அதிருப்தியுற்றிருக்கும் மக்கள், தற்போது ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக மிகவும் நொந்து போயிருக்கிறார்கள்.

## புதிய சுத்திகரிப்பு பொறிமுறைகள் அவசியம்


தற்பொழுது நடைபெற்று முடிந்த மாநகரத் தொழிலாளர்களின் பிரச்சினையை அவர்கள் தனிப்பட்ட பிரச்சினையாகப் பார்க்காது, ஒரு சமூகப் பிரச்சினையாகவே பார்க்கப்படவேண்டும். நகரசபையின் வருமானத்துக்குரிய சூழ்நிலையை உருவாக்கித் தருகின்ற சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் பணியானது மிகவும் முக்கியமானதாகக் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். யாழ். மாநகரசபையானது தனது எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் திண்மக் கழிவுகளையும், திரவக் கழிவுகளையும் அகற்றப்படுவதற்குரிய முகாமைத்துவத்தையும், பொறிமுறைகளையும் பூரணமாகக் கொண்டிருக்காத பட்சத்தில், இத்தகைய தொழிலாளர் பிரச்சினையென்பது நிரந்தரமாக இருக்கப் போவதே உண்மை. இது தொடர்பாக நகரசபையிடம் எந்தவித செயற்திட்டங்களும் இல்லாதவரை, கொழும்பு மாநகர சபை நகர சுத்திகரிப்பில் பின்பற்றும் "தனியார் மயப்படுத்தல்" என்றதொரு நடைமுறையை அமுல்படுத்தலாம். அல்லது அது பற்றி ஆலோசிக்க வேண்டும்.

மக்களிடம் பெறும் வரிப்பணத்தில் மக்களின் நலமேம்பாட்டைக் கருத்தில் கொள்ளாது, அபிவிருத்தி என்ற போர்வையில், வானுயரப் போகின்ற கட்டடங்களும், அதில் வைத்து அழகு படுத்திப்பார்க்கப்போகும் காரியாலய உபகரணங்களும், பணியாளர் தொகையும் எந்தவிதத்திலும் மக்களைத் திருப்திப் படுத்தப் போவதில்லை.

இதை முக்கியமாகக் கொள்ளாத பட்சத்தில், நகர எல்லைக்குள் காணும் திண்ம மற்றும் திரவக் கழிவுகளும், அவற்றால் மக்களுக்கு ஏற்படப்போகின்ற சுகாதாரக் கேடும் நிரந்தரமானவை. வரிப்பணத்துக்கும், வாக்குகளுக்கும் மக்கள் எவ்வளவு முக்கியமானவர்களாக மாநகரசபை கருதுகிறதோ, அவ்வாறே மக்களின் நலனை முன்னிறுத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதும் மாநகரசபைக்குரிய கடமை என்பதுவும் திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட வேண்டியதொன்றே.



புதுவிதி









அடுப்பில் ஒரு வடை சட்டியும்..
குக்கரும் பக்கத்து பக்கத்துல
இருந்துச்சாம்..!!

அப்போ வட சட்டிய பாத்து குக்கர்
சொல்லிச்சு ..!!

நீ இவ்ளோ கறுப்பா இருக்குறியே.. செவப்பா
இருந்தா
எம்பூட்டு அழகா இருப்பேனுசாம் .!!

உடனே வடசட்டி,

" நான் கறுப்பா இருக்கறப்பவே
இப்படி நீ இவ்ளோ விசில் அடிக்கிறே ..!!

செவப்பா இருந்திருந்தா...?

எவ்ளோ சேட்டை பண்ணுவே .!







## சுவரில் கொய்தவை

**Tharani Paramasivam**


மாணவர் படுகொலை மறக்கடிக்கப்பட்டு ஆவாவின் பின்னணி ஆராயப்படுகின்றது.....

**Yogoo Arunakiri**

சிவாஜிலிங்கம் இந்த உலகத்துக்கு ஏதோ சொல்ல வாறார் கேட்டு சொல்லுங்க...

**பார்தீபன் பத்மநாதன்**

சிவாஜிலிங்கத்தின் வேண்டுதலையிட்டு god முருகன் அமெரிக்கா பயணமாகவிருப்பதால் சூரன் போர் இடைநிறுத்தமாம் தொடர்ந்து 2009 மே 18 ஏன் தேங்காய் உடைக்கவில்லை என்று கந்தசட்டி விரதகாரர்கள் சிவாஜிலிங்கத்திற்கு கடும் கண்டனமாம்.






## இந்தவார மீம்ஸ் (Meme)

### கம்பஸ் படிப்பு என்பது யாதெனில்



A/L , O/L ஆல் நீங்கள் விளங்கிப் படித்தவற்றை
ஆங்கிலத்தில் புரியாதபடி படிப்பிப்பதாகும்

### இணையவாசிகளுக்கு

[illegible]

ஸபர் அஹமட்



# தொலைக்காட்சிச் சாபங்கள்

இலங்கையில் சிங்கள, தமிழ் மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டோ அல்லது உபதலைப்புகளோடோ ஒளிபரப்பாகும் தொடர் நாடகங்களுக்கு 90,000 ரூபாய் மட்டுமே இதுவரை வரியாக அறவிடப்பட்டது. இதனால் இலங்கைத் தொலைக்காட்சிகள் பலவும், இப்படிப்பட்ட தொடர்களை குறைந்த செலவில் ஒளிபரப்பி, நோகாமல் நுங்கு குடித்தபடி தம் பெர்க்கற்றுக்களை நிரப்பிக் கொண்டன. பேருக்குத்தான் "இலங்கையின் முதல்தர தொலைக் காட்சிகள்" என்ற விளம்பரப் படுத்தல்கள் இருந்தனவே தவிர, இந்தியத் தொலைக் காட்சிகளின் இறக்குமதியாளர்களாகவே அவை இருந்தன. உள்ளூர் தயாரிப்பிலான நிகழ்ச்சிகளை "இடை வெளி நிரப்பிகளா கவே" பாவித்தனர்.

ஆனால் இப்போது புதிய பட்ஜட்டில், இந்திய இறக்குமதித் தொலைக்காட்சித் தொடர்களுக்கு 30 நிமிடம் கொண்ட பகுதி ஒன்றுக்கு 300 000 ரூபாயாக வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் இலங் கைத் தொலைக்காட்சி நிலையங்கள் பலவும், அமெரிக்க ஜனாதிபதியாக 'ட்ரம்ப்' தெரிவானதால் உண்டான அதிர்ச்சியை விடவும், இன்னும் அதிக மடங்கு அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளன.

உண்மையில் இவ்வாறான டெலிடிராமாக்களில் வெள்ளை மாளிகை போன்ற வீடுகள், கோர்ட் சூட் போட்டுக் கொண்டு வீட்டுக்குள்ளேயே நடமாடும் ஜீவராசிகள், பல நூறு கோடிகளில் விரியும் கொடுக்கல் வாங்கல்கள், பட்டுச்சேலை கட்டிக் கொண்டு படுக்கைக்குச் செல்லும் அம் மணிகள், சமூகத்தின் மேல்மட்ட வாழ் வின் கச முசாக்களை மட்டும் பார்த்துப் பார்த்து தொகுத்த வலிந்த திணிப்புக்களின் வரிசைகளே உலா வந்தன.

இவ்வாறு எமது இயல்பு வாழ்க்கைக்கு சிறிதும் பொருத்தமே இல்லாத ஒரு செயற் கைத் தனத்தை, பரட்டைத் தனத்தை வட இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்து வாரி வழங்கியதில் சிரசவின் பங்கு அளப்பரியது.. சன் டி.வி இன் அத்தனை வாந்திகளையும் ஒளிபரப்பி, அதன் பெரி யம்மா மகள் போல் இருக்கும் சக்தியும் லேசுப்பட்டதல்ல..

இன்று எல்லாத் தொலைக்காட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு இத்தகைய டிராமாக்களை இறக்குமதி செய்கின்றன. விளைவு அநேகமான சிங்கள மொழி பேசும் வீடுகளில் வழவழ 'ஷேவிங்' செய்த கான்களும், கன்னாக்களும் நுழைந்து விட, தமிழ் மொழி பேசும் வீடுகள் சாபங்களையும் கண்ணீரையும் சுமந்தவாறு தான் ஒவ்வொரு நாளும் படுக்கைக்கு செல்கின்றன..

இந்தத் தொலைக்காட்சி தொடர்கள் ஒளி பரப்பும் நேரத்தில், அதற்கு அனுசரணை வழங்கும் பன்னாட்டு கொம்பனிகளின் (இயற்கை உணவுவகைகளைக் கொன்று புதைத்து விட்டு) உடலுக்கு ஒவ்வாத உணவுகளின் விளம்பரங்கள், அத்தியாவசியங்களை 'ஓவர் டேக்' செய்த அநாவசி யங்களின் வர்ணனை அணிவகுப்புக்கள் என்று ஒரே கலர்புல்தான்..

இதற்காகப் பன்னாட்டு கொம்பனிகளும், பெரு முதலாளிகளும் எத்தனை இலட் சங்களை வேண்டுமானாலும் தொலைக் காட்சி முதலாளிகளுக்கு கொட்டிக் கொ டுக்கத் தயாராக இருக்கின்றனர். முதலாளித் துவத்தில் ஊறித்திளைத்த அரசு, அவர்களி டம் இருந்து அறவிடும் இச்சிறு தொகை சங்கங்களில் அறவிடப்படும் மாதாந்த தனிநபர் சந்தா போன்றது..

எனவே எவ்வளவுதான் வரியை உயர்த்தினாலும் எப்படி மதுபானங்களும், புகைப் பொருட்களும்விற்பனையில் தொடர்ந்தும் சாதனை படைத்து, இலங்கைக்கு ஆசிய ரீதியில் முதலிடத்தை பெற்றுக் கொடுக்கின்றனவோ, அவ்வாறே இத்தகைய தொலைக் காட்சி தொடர் களும், பல்கிப் பெருகி இன்னும் வீறு கொண்டு எழும்.. மனித மணித்தியாலங்கள் விரயமாகும்.. முக்கிய பிரச்சினைகளை அரசு திசை திருப்பும்.. அனைத்துக்கும் ஆசைப்படும் தாராளவாத நுகர்வுச் சூழல் உருவாகுவதால், திருவாளர் மிஸ்டர் பொதுஜனத்தின் சேமிப்புக் கரைந்து அவர்களின் 'பேர்ஸ்' மெலிந்து போய்விடும்.. கடைசியில் நோயாளியாகவும் போகக்கூடும். அப்போதும் சவப்பெட்டிக்குள் இருந்தபடி நாங்கள் தொலைக்காட்சித் தொடர்களைக் கண்டு களிக்கத்தான் போகிறோம்.

---




# 'மைனர் மயிலன்'

உமா சந்தோஷ்

உடுப்பை மாத்திக்கொண்டு ஹோலுக்கு வந்தாள் ஸ்ரெல்லா. மைனர் சாப்பாட்டு மேசையிலை, ரவுனிலை வாங்கி வந்த கொத்தை அவிட்டு வைத்து பரிமாறினான். "நித்திரை வரேல்லை முன்னாலையுள்ள மணல்கும்பியிலை கொஞ்சம் இருப்பம்" ஸ்ரெல்லான்ரை விருப்பம் அது.

முன்னாலை கிடந்த மண் கும்பியின்ரை ஒரு பக்கம் ஸ்ரெல்லா இருக்க, அவளுக்கு நேரை அவளைப் பார்த்தபடி இருந்தான் மைனர் "உங்களுக்கு ஒரு பகிடி தெரியுமே?" நீண்ட மௌனத்தைக் கலைத்தாள் ஸ்ரெல்லா. 'என்ன' அவளை ஆச்சரியமாப் பாத்தான் மைனர். "ஆஸ்பத்திரி வாசலிலை" இருக்கிற குறத்தி என்ரை கையைப் பாத்திட்டு, ஏதோ ஒரு அதிஸ்டம் இருக்கெண்டு சொன்னவள். அதுதான் எண்ணெண்டு தெரியாது", தன்ரை கைரேகையளை உத்துப் பாத்தபடி ஸ்ரெல்லா சொல்ல, "எங்கை பாப்பம்" மெல்ல அவளின் கையைப்பிடித்து ரேகைகளைப் பாத்தான் மைனர். ஸ்ரெல்லாவின்ரை இடது கைவிரல்கள் மைனற்றை வலது கைவிரல்களுக்கை கிடந்து திண்டாடிக் கொண்டிருந்தன. "விடுங்கோ. ஆரேன் பாத்தால்" அவள் கையைப் பின்னாலை இழுக்க, "ஆர் நிக்கினம் எங்களைப் பாக்க" மைனர் கையை விடாமல் பிடியை இன்னும் இறுக்கினான். இந்த நேரத்திலை தன்ரை மூளையை மக்ஸிமம் பாவிச்சான் மைனர். நேரம் ஒண்டரை ஆச்சு. "உள்ளுக்கை போய் படுப்பம்" எண்டு ஸ்ரெல்லா சொல்லேக்கை, அவளின்ரை மடிக்குள்ளை தலை வைச்சுக் கிடந்தான் மைனர். "சாதுவா குளிர் காத்து வீசுது. அது தான்..." மெல்ல எழுந்து நடந்த ஸ்ரெல்லா, இரண்டு, மூன்று அடிதான் எடுத்து வைத்திருப்பாள், நின்று விசும்பத் தொடங்கினாள். 'என்ன' மைனர் பதறிப் போனான். பதில் சொல்லாமல் விசும்பிய அவளைத் தேற்றினான் மைனர். "இல்லை, உங்களோடையே இஞ்சையே இருந்திடலாமெண்டு நினைக்கிறன்" மைனரைக் கட்டிப்பிடித்துக் கதறினாள் ஸ்ரெல்லா. விடியக்காலமை வரை மைனற்றை மடியிலையே படுத்துக் கிடந்தாள் அவள்.

சரியா காலமை ஐஞ்சிருக்கும், கோயில் மணிச்சத்தம் கேட்டிது. "பாத்ரூம் போகப் போறன்" உடுப்புகளைக் கொண்டு பின்பக்கம் போனாள் ஸ்ரெல்லா. குசினிக்குள்ளை போய் தேத்தண்ணிக்கு ரெடி பண்ணினான் மைனர். ஹோலிலை இருந்தபடி குளிச்சிட்டு வந்த ஸ்ரெல்லாவுக்கு தேத்தண்ணியைப் பரிமாறினான் மைனர்.

காலமை ஆறிருக்கும். பொலிஸ் ஜீப் ஒண்டு வந்து நிண்ட சத்தத்தைத் தொடர்ந்து, திடீரென படலை திறக்கிற சத்தம் கேட்டிது. வாசலிலை 'நோட் குறொப்' அடிச்ச ஆம்பிளை ஒருத்தன் சில்லுப் போட்ட 'றவலிங் பாக்' ஒண்டைக் கொண்டு இறங்கினான். அவனுக்குப் பின்னாலை சிவப்பும், கறுப்பும் சேந்த சட்டையோடை ஒருத்தியும் இறங்கினாள். தேத்தண்ணி குடிக்கிறதை விட்டிட்டு எட்டிப் பாத்தான் மைனர். ஏங்கிப் போனான். அவன்ரை காது சிவந்து, கணு மயிர் குத்தி நிக்க "இதேன் இஞ்சை வருகுது" தன்னையறியாமல் முணு முணுத்தான் அவன். "ஸ்ரெல்லா உள்ளுக்கை போம்" ஸ்ரெல்லாவின்ரை காதுக்கை மட்டும் கேக்க இரகசியமாச் சொன்னான் அவன். அந்த ஸ்மாட்டான ஆம்பிளை பின்தொடர மிடுக்கா நடந்து வந்தாள் மெனிக்கா. "மெனிக்கா, வாரும்" வாய்விட்டு வரவேற்றான் மைனர். "எப்ப வந்தனீர்?" மைனர் கேட்டான். "இப்ப மெயில் றெயின்ல வாறான், இவர் என்ர கசின் பிறதர். கே.கே.எஸ் பொலிஸிலை ஐ.பி வேலை செய்யிறாங். அங்கிள் எங்க? கொஸ்பிட்டலால வந்திட்டாங்?" மைனர் கூனிக் குறுகி நிண்டான். மெனிக்காவைக் கூட்டிக் கொண்டு வந்தவன் அவளை விட்டுட்டுப் புறப்பட்டான். மைனரைக் கேக்காமலே பெட்டி படுக்கையளோடை ரூமுக்கை போனாள் மெனிக்கா'. மைனர் மௌனமாகப் பாத்துக் கொண்டிருந்தான். திடீரென அறைக்குள்ளை கேளாமல் வந்த மெனிக்காவைப் பாத்து அதிர்ந்து போனாள் ஸ்ரெல்லா.

"இஞ்சை வாரும் மெனிக்கா. மற்ற ரூமுக்க போம்" திடீரென யூ ரேண் எடுத்து வந்த மெனிக்காவைப் பாத்துச் சொன்னான் மைனர். "தார் அதுங்" மெனிக்கா கேட்டாள். "அது என்ர கசின்" பதில் சொன்னான் மைனர். படலேக்க சைக்கிள் பெல் சத்தம் கேட்டுது. "ஆர் அது" மைனர் சத்தம் போட்டான். 'நான் அது' சைக்கிளிலை வந்த லோயர் வீட்டு வேலைக்காரன் மறுமொழி சொன்னான். லோயர் பரலைஸ்ஸாக் கிடக்கிறார் எண்ட கதையையும் சொல்லி, லோயற்றை மனுசி அவசரம் வந்து போகச் சொன்னதா சொல்லி விட்டுப் போனான் அவன். "பழைய தொடுப்பு தொடுக்கப் போறாள் போலை கிடக்கு, சங்கடந்தான்" மைனருக்குத் தலையைச் சுத்த, சைக்கிள் எடுத்துக் கொண்டு கோயிலடிப் பக்கம் போனான். சிதம்பர சக்கரத்தைப் பேய் பாத்த மாதிரி இருந்திது. போய் லங்கயனிட்டை அரையோடை வீட்டை வரச் சொல்லி காசும் குடுத்துப்போட்டு வந்தான். வரேக்கை பரமலிங்கம் கடையிலை, ஆளுக்கொரு இடியப்பப் பார்சலை கட்டிக் கொண்டு வந்தான். மெனிக்கான்ரை ரூமும், ஸ்ரெல்லான்ரை ரூமும் பூட்டிக் கிடந்திது. லங்கயன் வரேக்கை முன் கட்டிலிலை மல்லாந்து கிடந்தான் மைனர். "இதை அடி மச்சான். எல்லா கேள்வியளுக்கும் மறுமொழி தானே வரும். என்னத்தையும் சமாளிக்கலாம்" வாங்கி வந்த அரையைக்குடுத்தான் லங்கையன். கட, கட வெண்டு அடிச்சான் மைனர். 1000 வாட்ஸ் பல்பைப் போட்டுத் திருவிழா பாக்கிற மாதிரி கண் வெளிக்கத் தொடங்க துள்ளிப் பாஞ்சு எழும்பினான் மைனர். 'எட...எட' மைனரை எட்டிப் பிடிச்சான் லங்கையன்.

(சேட்டைகள் தொடரும்...)

புதுவிதி

# வெற்றிலைக்கேணி:

(03 ஆம் பக்க தொடர்ச்சி...)

நெடுமாறனை அனுப்பி விட்டுத் திரும்பிய வழியில், கண்ணாடி ஜீவன் இந்திய இராணுவத்தின் சுற்றி வளைப்பில் கொல்லப்பட்டார். வெற்றிலைக்கேணியின் மூத்த போராளிகளில் ஒருவருடைய சாவு அது. பிறகு வெற்றிலைக்கேணியில் ஏராளம் போராளிகள் வந்தார்கள். பலர் கடற்புலிகள். பின்னாளில் கடற்புலிகளுக்கு ஒரு சிறிய தளமும் இருந்தது.

## கோட்டைகொத்தளங்கள்

இந்த அந்தோனியார் தேவாலயத்துக்கு, வயது இருநூறுக்கு மேலிருக்கும். தேவாலயத்துக்குக் கிழக்கே உள்ளது வெளிச்சவீடு. மிகப்பழையது. ஏறக்குறைய சிதைந்த நிலைக்கு வந்து விட்டது. 'கோரி' என்று இதைச் சனங்கள் சொல்கிறார்கள். 'கோரிக்குப்' பக்கத்திலே கோட்டை. ஆனால், இப்போது அதை முழுமையாக நீங்கள் பார்க்க முடியாது. சிதைந்த அடித்தளம் மட்டுமே மிஞ்சியிருக்கு. எல்லாமே ஒல்லாந்தரால் கட்டப்பட்டவை. முருகைக் கல்லும், சுண்ணாம்பும் கலந்து கட்டப்பட்டது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய ஒல்லாந்தர்கள், அதைப் பாதுகாப்பதற்காக, யாழ்ப்பாணத்தைச் சுற்றிப் பல கோட்டைகளைக் கட்டினார்கள். இதில் மூன்று கோட்டைகள், கிழக்கே கட்டப்பட்டன. ஒன்று ஆனையிறவில். இன்னொன்று இயக்கச்சியில். மூன்றாவது தான் வெற்றிலைக்கேணியில் உள்ள 'கோரியும்', 'பசூற்றா' என்ற இந்தக் கோட்டையும். ஆனால், இவற்றில் ஆனையிறவுக் கோட்டையே பெரியது. மற்றைய இரண்டும் சிறியவை. மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்பானவை. ஒரே பகுதியைக் கண்காணித்துக் கட்டுப்படுத்தக்கூடியவை.

தென்னிலங்கையிலிருந்து, சிங்களப் படையெடுப்பையும், வன்னிப் படையெடுப்பையும் தடுப்பதே இதில் முதல் நோக்கம். பாதுகாப்புக்கு மட்டுமல்லாது, தங்களுடைய வணிக நலன்களைப் பாதுகாப்பதற்கும் இந்தக் கோட்டைகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் ஒல்லாந்தர். வன்னியிலிருந்து இந்த வழியினால் தான் பொருட்களையும், யானைத் தந்தங்களையும் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இந்தத் தகவல்கள் யாழ்ப்பாணத்தின் கட்டளை அதிகாரியாக இருந்த "என்றிக் சுவார்டெக்குரூன்", 1897 ஆம் ஆண்டில் தற்காலிகமாக யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்றபோது எழுதிய நினைவுக் குறிப்பில் உண்டு. அந்த நாட்களில், சனங்களுக்குப் பாஸ் முறையையும் அமுல்படுத்தியிருக்கிறார்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியே போகிறவர்களுக்கு கடவுச் சீட்டு போன்றதொரு முறை.. இதன்மூலமாக அச்சுறுத்தலைத் தடுத்துத் தங்களுடைய முழுமையான கண்காணிப்பிலே சனங்களையும், யாழ்ப்பாணக் குடாநாட்டையும் வைத்திருப்பதே நோக்கம்.

"பசூற்றாவும்", "பைலும்" ஆனையிறவுக் கோட்டையைப் போல் சதுர வடிவத்தில் கட்டப்பட்டவை. அப்போது வரையப்பட்ட, இவற்றின் வரைபடங்களில் இருந்து, இந்தக்கோட்டைகள் எல்லாவகைகளிலும் ஆனையிறவுக் கோட்டையைப் போலவே இருந்ததாகத் தெரிகிறது. இதனுடைய வடக்குத் தெற்கு மூலைகளில் சிறிய கொத்தளங்கள் அமைந்துள்ளன. கிழக்குச் சுவரோடு அண்டி படையினருக்கான தங்குமிடங்கள் இருந்தன. இந்தச்சுவர் தவிர்ந்த, மற்றச் சுவர்ப்பகுதிகளின் உட்புறத்தில் தடித்த மண் சுவர்கள் உள்ளன. கோட்டையின் வாசல் இதன் மேற்குப்புறச் சுவரில் இருந்தது.

## கைவிடலும்கைப்பற்றலும்

இந்தக் கோட்டைகள், பிறகு பிரிட்டிஷ்காரர்களின் கைகளில் வீழ்ந்தன. வன்னியைக் கைப்பற்றிய பிறகு அவர்கள் ஆனையிறவுக் கோட்டையை மட்டும் வைத்துக் கொண்டு, பைல்கோட்டையையும், பசூற்றாவையும் கைவிட்டனர். ஆனால், இந்தப் பகுதிகளில் கட்டப்பட்ட தேவாலயங்கள் மட்டும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருந்தன. இதிலொன்று, வெற்றிலைக்கேணியிலிருந்து தெற்குப் பக்கமாக ஒன்றரை மைல் தொலைவில், புல்லாவெளியில் ஒரு மிகப் பெரிய தேவாலயம். மடுத்திருநாள் முடிய, புல்லாவெளிக்கே அந்தப் பக்தர் கூட்டம் வரும். ஒகஸ்ற் மாதத்தில், ஏழுநாட்கள் நடக்கும் பெருநாள். இதற்கும் நாட்டின் நாலாதிசையிலிருந்தும் பக்தர்கள் வருவார்கள். இதிலும் இன, மத வேறுபாடுகள் எல்லாம் கிடையாது.

வரலாற்றின் ஓட்டம் எப்பொழுதும், ஒரே விதமாக இருப்பதில்லை. பிரிட்டிஷ்காரர் கைவிட்டிருந்த கோட்டைகளில், இலங்கைப்படையினர் நிலைகொண்டனர். இயக்கச்சி பைல் கோட்டையைச் சனங்கள் வாடியடி என்று சொல்வதுண்டு. அங்கே 1970 இல் படையினர் ஒரு சிறிய முகாமை அமைத்தனர். ஆனால், அது ஒரு பத்து ஆண்டுகள் நீடிக்கவில்லை. இயக்கங்கள் தலையெடுக்க, பைல் கோட்டையிலிருந்தவர்கள் ஆனையிறவுக்குப் போய்ச்சேர்ந்தனர்.

இருந்தாலும் 1987 இல் வடமராட்சியில் "ஒப்பிரேஷன் லிபரேஷன்" நடவடிக்கையை மேற்கொண்ட படையினர், அங்கே போராளிகள் குவிவதைத் தடுக்கிற உபாயமாக "கொப்பேகடுவ" தலைமையில் சந்தைப்பாதை வழியாக, வாடியடிக்கு வந்து, வடக்கே நகர்ந்து மண்டலாய்க்கட்டில் ஏறி, வெற்றிலைக்கேணியை நோக்கி நகர்ந்தனர். வெற்றிலைக்கேணிக் கடற்கரை வரை சென்று நிலைகொண்டால், வன்னியிலிருந்தோ, கிழக்கிலிருந்தோ மேலதிக போராளிகள் உள்ளே வருவதைத் தடுப்பது இன்னொரு நோக்கம். ஆனால், அதற்கு முன்பாகவே மாத்தயாவின் வன்னி அணிகள் இயக்கச்சிக்கு வந்து விட்டன. ஈரோஸ் இன்னொரு பக்கத்தால் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தது. அப்பொழுதுதான் முதன் முதலில் போராளிகள் அந்தப் பகுதியில் 81 மி.மீ. மோட்டாரைப் பயன்படுத்தினார்கள். கூடவே உள்ளூர்த் தயாரிப்பான ஆர்.கே குண்டுகளும் ஏவப்பட்டன. இயக்கங்கள் மோட்டார்த் தாக்குதலை நடத்துவது, படைகளுக்குக் கலக்கத்தை உண்டு பண்ணியது. மண்டலாய்க்கட்டோடு படைகள் பின்வாங்கி, ஆனையிறவுக்குத் திரும்பின.

## புலிகளின் பெரும் சமர்

1991 இல் ஆனையிறவு படைமுகாம் மீது புலிகள் ஆகாய கடல் வெளிச் சமர் என்ற பெருந்தாக்குதலைத் தொடுத்த போது, முற்றுகையை உடைக்க வெற்றிலைக் கேணியில் இலங்கை இராணுவம் தரையிறங்கியது. மூண்டது பெரும் சமர். அந்தத் தாக்குதலில் புலிகள் தரப்பிலிருந்து லெப்.கேணல் சூட்டி உள்பட நூற்றுக்கணக்கான போராளிகள் சாவடைந்தனர். 18 நாட்கள் தொடர்ச்சியாக நடந்த பெரிய சமர் இது. புலிகள் தரப்பில் மொத்தமாக 676 போராளிகள் சாவடைந்திருந்தனர். அதுவரையிலுமான சமர்களிலே புலிகளுக்கு பெரிய சமரும், பெரிய இழப்பும் இதுதான்.

அத்தோடு வெற்றிலைக்கேணி படையினரிடம் சிக்கியது. பிறகு, 2000 த்தில் அதைப் புலிகள் மீட்டனர். சுனாமி தாக்கிய போது, வெற்றிலைக்கேணித் தேவாலாயம் அழிந்துபோனது. அதோடு அங்கேயிருந்த பிள்ளையார் கோயில், பாடசாலை, ஊர் மனை எல்லாமே அழிந்தன. இருந்தாலும் அந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியேற்றப்பட்டனர். அதற்குப் பிறகு மண்டலாயில், புலிகளின் பெரியதொரு பயிற்சி முகாம் இருந்தது. புதிய போராளிகளுக்கான பயிற்சி கிடையாது. சிறப்பணிகளுக்கான பயிற்சியே வழங்கப்படுவதுண்டு. பிரபாகரன் அடிக்கடி இந்தப் பயற்சி முகாமுக்கு வருவார்.

## இராமன் அம்பு ஊன்றிய இடம்

மண்டலாய் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதி. இங்கே மேற்குப் பார்த்த பிள்ளையார் கோயில் உண்டு. அருகிலே எந்தப் பருவத்திலும் நீர்வற்றாத சுனை உள்ளது. "வடக்கே மாவலியாறு வருமாக இருந்தால், இந்தச் சுனையின் வழியாகத் தான் வரும்" என்று சொல்வார்கள். இதன் பூர்வீகக் கதை வேறு. இராமன் இலங்கைக்கு வந்தபோது, நீருக்காக அம்பை ஊன்றிய இடமே இந்தச் சுனை என்று சொல்வார்கள். மண்டலாய்க்கும், இயக்கச்சிக்கும் இடையில் வன்னியர்களின் வழிப்போக்கும் தொடர்புமிருந்தாக இன்னொரு பேச்சுண்டு. அப்போது அவர்கள் பயன்படுத்திய முதுகிணறுகள் இரண்டு, இந்தப் பகுதியில் இன்னும் உள்ளன. ஆனால், அவை காட்டுப் பகுதியாகி விட்டன. மண்டலாய்க் கோயிலைச் சுற்றிவரக்காடு. காட்டின் நடுவில் பிள்ளையார். 300 ஆண்டுகளுக்கும் மேலான பழமைச் சரித்திரம் இந்தப் பிள்ளையாருக்குண்டு. தெற்கில் கோவில் வயலும், வடக்கில் வெற்றிலைக் கேணியும் எல்லைகள், சுற்றிவரத் தென்னந்தோப்புகள். ஆர்.வி.ஜி. பீடிக் கொம்பனிக்கும் இதில் ஒரு தோட்டம் உண்டு. எல்லாமே இப்போது அழிந்து விட்டன. புலிகளின் பயிற்சி முகாமிருந்த இடத்தில் இப்பொழுது பெரிய படைத்தளம். வெற்றிலைக் கேணி தேவாலயத்துக்குப் பக்கத்தில் கடற்கரையில் இலங்கைக் கடற்படையின் முகாமொன்றும் உள்ளது.

நீண்ட நாட்களுக்குப்பிறகு, கோரியடிக்குப் போயிருந்தேன். எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு முதியவரைப் போல, நிமிர்ந்து நின்றது அந்தப் பழைய வெளிச்ச வீடு.

---

(11 ஆம் பக்க தொடர்ச்சி...)

# ட்ரம்ப்

## பூதாகரமான மின்னஞ்சல் விவகாரம்

மக்களிடையே ஹிலாரியின் மீதான நம்பகத்தன்மை திருப்தியில்லாத ஒன்றாகவே நீண்டகாலமாக இருந்துள்ளது. இதன் காரணமாகவே மின்னஞ்சல் விவகாரம் பூதாகரமாக உருவெடுத்தது.

வெள்ளை மாளிகையை விட்டு விலகிய காலம் தொடக்கம் இவர் சேர்த்த பாரிய சொத்துக்கள் இவருக்குக் கைகொடுக்கவில்லை. மக்கள் ஒரு பணக்கார வர்த்தகருக்கு மகிழ்வோடு வாக்களித்த அதே நேரம், பெரும் பணத்தில் மிதந்த ஹிலாரியின் பணக்காரத்தனத்தோடு நடுத்தர வர்க்க மக்களால் இயல்பாக பழக முடியவில்லை.

## பெண்களின் ஆதரவில்லை

ஆண்களைவிட அதிகம் பெண் வாக்காளர்களைக் கொண்ட அமெரிக்காவில், பெண்களின் ஆதரவு பெரிதாகக் கிடைக்காதது ஹிலாரியின் தோல்விக்கு இன்னொரு காரணமாக அமைந்தது. ஒரு பெண்ணின் ஆட்சி வேண்டாம் என்று நினைத்த பல ஆண்களின் வாக்குகளும் ஹிலாரிக்கு கிடைக்காது பறிபோயின.

இன்னொரு முக்கிய விடயம் மாற்றத்தை மக்கள் விரும்பியதுதான். வெள்ளை மாளிகையில் எந்தவொரு கட்சியும் மூன்றாவது தடவை ஆட்சியைப் பிடிப்பது என்பது சிரமமான ஒன்று. ஜனநாயகக் கட்சியினர் 1940 இலிருந்து இதைச் செய்ய முடியவில்லை. பல வாக்காளர்கள் கிளின்டன் குடும்பத்தினருக்கு வாக்களித்து வாக்களித்து களைத்துப் போய் விட்டதாகவும் அவதானிகள் கருதுகிறார்கள். சுருக்கமாகச் சொல்வதாயின் மக்கள் ஒரு மாற்றத்தை தேட முற்பட்டதன் விளைவே இந்தத் தோல்வி.

## பிரசாரத்தில் அசமந்தம்

தான் வெல்வதற்கு அவசியமில்லாத வட கரோலினா, ஓஹியோ போன்ற மாவட்டங்களில் தன் கவனத்தைச் செலுத்திய அதே வேளை கடந்த எட்டுத் தேர்தல்களிலும் ஜனநாயக்கட்சிக்கு வாக்களித்த 18 மாவட்டங்களில் காண்பித்த அசமந்தப் போக்கு இவரது தோல்விக்கு இன்னொரு காரணமாகக் கருதப்படுகின்றது. "மேலதிக பலத்துடன் ஒன்றாவோம் என்ற ஹிலாரியின் பிரசாரம், அமெரிக்காவை மீண்டும் உயர்த்துவோம்" என்ற ட்ரம்பின் பிரசாரத்துடன் ஈடுகட்ட முடியவில்லை என்பது இன்னொரு குற்றச்சாட்டு.

1984 தொடக்கம் குடியரசுக் கட்சியினிடம் சிக்காமல் இருந்த பென்சில்வேனியா, விஸ்கொன்ஸின் மாவட்டங்கள் இந்தத் தடவை ட்ரம்பினால் கைப்பற்றப்பட்டிருப்பது தேர்தலில் கண்ட ஒரு அதிரடி மாற்றம். மக்கள் ஹிலாரியை மட்டும் தூக்கி யெறியவில்லை. ஒபாமாவின் பாதி அமெரிக்காவையும் தூர வீசியெறிந்துள்ளார்கள்.

---

# புயல்

(07 ஆம் பக்க தொடர்ச்சி...)

குமுதினிப் பொண்ணு கன்னத்தெத் தட்டிக் கொடுத்துட்டே ஏறக்கட்னது. அந்தப் பொண்ணு சொல்றது, அந்த மனுஷன் நல்லவனாம். குடிச்சுட்டு வந்ததுனாலெ இப்படி நடந்துக்கிட்டதாம்.

ஸோனா இன்னும் முடிக்கவில்லை. "இந்த இழவெல்லாம் முடிஞ்சாவிட்டு கொடெயெ, எடுத்துண்டு ஸிந்தியாவெத் தூக்கி இடுப்பிலெ வச்சிண்டு, அரைக்கக் கொடுத்த மாவெ வாங்கிவரப் போனேன். ஒரு வீட்டுத் திண்ணைலெரெண்டு கேடிப் பசங்க. "குட்டி ஷோக்காயிருக்கில்லெ" அப்படீன்னு கமெண்டு அடிக்குதுங்க.

ஸோனா கொட்டித் தீர்த்தாள். விசும்பிக் கொண்டே ஸிந்தியாவுக்குச் சோறு ஊட்டிப் படுக்க வைத்தாள்.

ஸோனாவுக்கு அமைதியின்மை காரணமாகச் சாப்பிடத் தோன்றவில்லை. ஏக்நாத்துக்குத் துக்கம் மனம் பூராவும் வியாபித்திருந்த நிலையில், சாப்பாட்டுச் சிந்தனைக்கே இடம் இல்லாமல் போயிற்று. படுக்கையில் கிடந்தார்கள். ஸோனா ஏக்நாத்திடமிருந்து ஏதோ ஒரு பதிலை எதிர்பார்த்தாள். "சமூகம் இன்னைக்கி ஒன்கிட்டெ அதனோட விஸ்வரூபத்தைக் காட்டியிருக்கு. அவ்வளவுதான். தூங்கு. எல்லாம் சரியாப் போகும்" என்றான்.

"உலகத்தெத் தெரிஞ்சுக்கணும்ங்க. புரிஞ்சுகிட்டவரைக்கும் சகிக்கல" அவள் கண்களில் கசிந்த நீரைத் துடைக்கக் கூடத் திராணியில்லாமல் கிடந்தான் ஏக்நாத்.

ஏக்நாத் பாவமே செய்யாத புண்ணிய ஆத்மா அல்ல. இருப்பினும், அசிங்கமாகவோ, அநாகரிகமாகவோ, கொச்சையாகவோ, பச்சையாகவோ, விரசமாகவோ நடந்துகொண்டதாக அவனுக்கு நினைவில்லை. "அப்பா பண்ணின பாவம் பிள்ளையின் தலைமேல் விடியும்" என்று சொல்லக் கேட்டிருக்கிறான். கணவன் செய்த பாவம் மனைவி தலைமேல் விடியும், என்று எந்தப் பெரியவரும் சொன்னதாகக் கேள்வி இல்லை. மேலும் சமீபத்தில், ஒரு மாமி மனம் கோணாமலும், ஒரு பெண்மணி உளம் நோகாமலும் அவன் அனுசரணையுடன் நடந்து கொண்டிருந்திருக்கிறான். இதற்குச் சன்மானம் கிடைக்கா விட்டாலும், கேடாவது விளையாமலாவது இருந்திருக்கலாம்.

கடைசியில் ஒன்றும் செய்யத் தோன்றாமல், "சாக்கடையில் உழலும் பன்றிகள்" என்று சற்று உரக்கவே கத்தினான். ஏக்நாத்தால் இயன்றது அவ்வளவே.

# 'பீப்' ஓதும் பிக்கு





## மட்டக்களப்பில் நடந்தது என்ன?

மட்டக்களப்பின் பட்டிப்பளை பகுதி தமிழர்களின் பூர்வீகமாகப் பூமி. ஆனால் அதன் அருகே புதிது புதிதாகச் சிங்களக் குடியேற்றங்கள் உருவாகத் தொடங்கியுள்ளன. இந்தப்பகுதியில் ஆடு, மாடுகள் மேய்வதெற்கென அரசாங்கத்தால் மேய்ச்சல் தரவைப் பகுதி ஒன்று, ஒதுக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் தமிழர்கள் மட்டுமே இந்தப்பகுதியில் வசித்ததால், அவர்கள் இந்த மேய்ச்சல் தரவையில்தான் தங்களுடைய கால்நடைகளை பட்டிகளாக அழைத்து வந்து, புல்மேய விடுவார்கள். ஆனால் காலப் போக்கில் இங்கு தமிழ் மக்களின் எண்ணிக்கையை விடவும் சிங்கள மக்களின் எண்ணிக்கை அதிகரித்ததோடு, அவர்களும் இந்தப்பகுதிக்கே தமது கால்நடைகளையும் மேயக் கொண்டு வந்தார்கள். "எல்லாம் கால்நடைகள் தானே. அவர்களும் வயிற்றுப் பிழைப்புக்காகத்தானே தமது கால்நடைகளை இங்கு கொண்டு வருகின்றனர்" என்ற எண்ணத்திலும், குறித்த பகுதி அரச காணி என்பதாலும் தமிழ் மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால் இடம் கொடுத்தால் மடம் பிடிக்கும் பேரினவாதிகளின் தூண்டுதலில், சிங்கள மக்கள் செய்த காரியம் தான், கால்நடை வளர்ப்பையே தமது ஜீவனோபாயமாகக் கொண்டிருந்த இந்தப் பகுதி மக்களை வெகுண்டெழச் செய்தது. கால்நடைகளின் மேய்ச்சலுக்கென ஒதுக்கப்பட்ட இந்த தரவைப் பகுதியை, அடாத்தாகப்பிடித்து, அதில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள, சிங்கள மக்கள் சிலர் முனைந்தனர். அத்தோடு "எவரும் அங்கு மேய்ச்சலுக்காக மாடுகளை மேய விடக்கூடாது" என்றும் கூறி, மேய்ச்சலுக்கு சென்ற மாடுகளையும் விரட்டியடித்துள்ளனர்.

### வில்லான வந்த பிக்கு

எங்கிருந்தோ வந்து சில வருடங்களுக்கு முன்னர் அத்துமீறிக் குடியேறிவர்கள், வாழ்ந்த பூர்வீக மக்களின் கால்நடைகளுக்கான காணியை அபகரித்துக் கொண்டு, அவர்களின் வாழ் வாதாரத்தையும் சிதைத்தால் யார்தான் பொறுமை காப்பார்கள்? எனவே அந்த மக்கள், தங்களின் கால்நடைகளுக்கான மேய்ச்சல் காணியில் விவசாய நடவடிக்கைகளைக் கைவிடக் கோரியும், மீண்டும் தங்களுடைய கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடக் கோரியும் ஆர்ப்பாட்டம் செய்தனர். அந்தப்பகுதிக்கான கிராம சேவகரான ஜீவிதன் (வயது30) மக்களின் போராட்டம் நடைபெறும் இடத்துக்குச் சென்று அவர்களின் பிரச்சினை தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டிருந்தார்.

அப்போதுதான் அந்தச் சூழலைத் தலை கீழாக்கும் வகையில் புத்தபிக்கு ஒருவரின் பிரசன்னம் நிகழ்ந்தது. அந்தப் பிக்குவேறு யாருமல்ல, மட்டக்களப்பு மங்களாராம விகாரைக்குப் பொறுப்பாக உள்ள சுமனரத்ன தேரர் தான் அவர்.

வந்தவர் மக்களின் பிரதிநிதியாக நின்றிருந்த கிராம சேவகரை, நடு வீதியில் வைத்து தகாத வார்த்தைகளால் திட்டித் தீர்க்கத் தொடங்கினார். அப்படித் திட்டிக் கொண்டே ஆவேசம் கொண்டவராக கிராம சேவகரை அடிப்பது போலவும் நெருங்கினார்.

### "பீப்... பீப்... பீப்!!!"

நட்டநடு வீதியில், காவி உடை போர்த்திய, அன்பை மட்டுமே போதித்த புத்தனின் பிரதிநிதியான அந்தப் பிக்கு ஓதிய 'பீப்' பிரித் இதுதான்:

"வில்பத்துல வெட்டுறாங்கள். அங்க போய் வழக்கு போடுடா..

ஸ்ரீபாதல வெட்டுறாங்கள் அங்க போங்கோடா.. போங்கோ..

(சாதிப் பெயர் சொல்லி திட்டுகிறார்)

நீ புலியடா... நீ புலியே தான்ரா சிங்கள ஆக்களை அண்டைக்கு சுட்டீங்கள். இண்டைக்கு அடிக்கிறாய். நீ அதைத் தான்ரா செய்யிறாய்.

உன்னைப் பாக்கும்போது பத்திக் கொண்டு வருகுது.

(பொலிஸ் அதிகாரியின் பக்கம் திரும்பி கிராம சேவகரைச் சுட்டிக் காட்டியபடி) இந்த நாய்தான் தொடர்ந்து வழக்கு போட்டது.

நீ ஒரு கிராம சேவகர் எண்டத நினைச்சிக்கொள்... நீ ஒரு தமிழன்.. நீ சிங்களவனுக்கு எதிராத் தொடர்ந்து வழக்கு போடுறத நிப்பாட்டு..

உனக்கு இப்ப நல்லபடியா சொல்றன்.. ஒரு சிங்களவனையும் இந்த இடத்திலயிருந்து அசைச்சியோ.... (பல்லை நெருமியபடி அடிப்பதுபோல வருகிறார்)

தம்பிய நீதிமன்றமும் (முஸ்லிம் நீதிமன்றம்) முடிந்துவிட்டது. அப்பிடி தமிழனின் நீதிமன்றமும் அழியும்...

நீ ஒண்டை மட்டும் நல்லா நினைவு வைச்சிக்கொள் உன்ர தாடைய இப்ப அடிச்சி நொறுக்க முடியும்.. ஆனா நான் பொறுமையா இருக்கிறன். ஏனெண்டா இந்தக் காவியுடைக்காக. நான் ஒரு துறவி எண்டதால அடிக்க முடியாம இருக்கு.

அதை நீ நினைவு வச்சிக்கொள்...ப... தமிழா.. (மீண்டும் ஒரு சாதிப் பெயரைச் சுட்டித் திட்டுகிறார்)

(பொலிஸைச் சுட்டிக் காட்டி) இவனுக்கும் சொல்ல வேணும்.

(மீண்டும் கிராம சேவையாளர் பக்கம் திரும்பி ) நீ சிங்களவன் எட்டுப் பேருக்கு எதிராய் வழக்குப் போட்டனீ. ஏன் இது உன்ர அப்பாவின்ர இடமா? அம்மாவின்ர இடமா?....டேய் அப்பாவிகளுக்கு எதிராய் இப்பிடிச் செய்யாதை...நீ புலியாகி சுடேக்க நாங்க பொறுமையா இருந்தோம்....

பு...(பீப்).(தூஷண வார்த்தைகள் தெறித்துப் பறக்கின்றன)

திரும்பியும் கைவைக்க வெளிக்கிட்டால்... எந்தவொரு பு..(பீப்)மகனுக்கும் நான் சொல்றன் நல்லாக் கேள்.. கடைசிக் காலம்தான் அம்மா ஓ( பீப்) (கெட்டவார்த்தை) உங்களுக்கு.அடிப்பனடா இவன் சாகும் வரைக்கும் அடிப்பன்!"

### மௌனத்தை ஆயுதமாக்கிய கிராமசேவகர்

தான் ஒரு பற்றற்ற துறவி என்பதையும் மறந்து அந்தப் பிக்கு, பிரித் ஓதுவதற்குப் பதிலாக 'பீப்' வார்த்தைகளை ஓதிக்கொண்டேயிருந்தார். அந்தச் சமயத்தில் கிராம சேவகர் எந்தவிதச் சலனமும் அடையாமல் "நீ என்ன வேண்டுமானாலும் சொல்வதைச் சொல்லிவிட்டுப் போ" என்னும் பாவனையோடும், துணிச்சலோடும் பிக்குவை பார்த்தபடியே இருந்தார். பிக்கு சொன்ன எந்தக் கெட்டவார்த்தைக்கும் சின்னப் பிரதிபலிப்பைக் கூட அவர் காட்டவில்லை. பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு கிராமசேவகர் தான் உண்மையான துறவி போல தென்பட்டார். பிக்கு அடிப்பது போல கையை ஓங்கிய போது கூட, பின்வாங்கவோ, குனியவோ இல்லை. மௌனத்தையும் ஒரு ஆயுதமாக்க முடியும் என்பதை காவியுடை அணிந்த பிக்குவுக்கு தன் செய்கை ஊடாக அந்தக் கிராமசேவகர் பாடம் புகட்டிக் கொண்டிருந்தார்.

இப்படி, தான் ஒரு துறவி என்பதையும் மறந்து அந்தப் பிக்கு போட்ட ஆட்டத்தை அங்கிருந்த பொலிஸாரோ, பொலிஸ் அதிகாரியோ தடுக்கவில்லை. ஒரு அரச ஊழியரின் கடமையைச் செய்யவிடாமல், வன்முறையை பிரயோகித்த ஒருவரை அந்த இடத்திலேயே கைது செய்திருக்கலாம். ஆனால் அப்படி அவர்கள் செய்யவில்லை. மாறாக பிக்குவைச் சாந்தப்படுத்தவே முனைந்தார்கள். இலங்கையில் பொலிஸ் உயரதிகாரிகளை விடவும், பிக்குகளே அதிகாரம் மிக்கவர்கள் என்பதை, அங்கு தெளிவாக எல்லோரும் காண முடிந்தது. தமிழ்க் கிராம சேவகர் மீது பிக்கு 'பீப்' ஓதிய வீடியோக் காட்சி இணையத்தில் வெளியாகி பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. கடந்த வாரம் சமூக வலைத்தளங்களிலும் இந்த விவகாரமே பிரதான பேசுபொருளாக மாறியது.

### அடாவடியின் மறுபெயர் சுமனரத்னதேரர்

சட்டத்தையோ, கிராம சேவகரையோ, பொலிஸாரையோ, அவ்வளவு ஏன், தான் வணங்கும் புத்தரின் போதனைகளையோ கிஞ்சித்தும் மதிக்காமல் நடுவீதியில் வெறியாட் டம் போட்ட சுமன ரத்ன தேரர் சர்ச்சைகளில் சிக்குவது இதுவொன்றும் முதன் முறை அல்ல.



(20 ஆம் பக்கம் பார்க்க...)

# இதற்காகவா...

(10 ஆம் பக்க தொடர்ச்சி...)



**ஜி.ரி. லிங்கநாதன்**
(மாகாணசபை உறுப்பினர்)

"இவைக்குச் சட்டம் விளங்கேல்லை. ஆமி வந்து அரச அதிபரிட்ட குடுத்திட்டுது. அது இப்ப பிரதேச செயலரின் பொறுப்பிலைதான் இருக்கு.

உண்மையா மண்டபத்தை உள்ளூராட்சிக்குத்தான் குடுக்க வேணும். பிரதேச செயலகத்திட்ட குடுத்தது பிழை. அவையளிட்டை இதுக்குரிய நிதியும் இல்லை. அதுக்குரிய உரிமையும் இல்லை. அது விளங்காமைத்தான் லேட்டாக்கினம். நான் இது சம்பந்தமா அரச அதிபர், பிரதேச செயலர் எல்லாரோடையும் கதைச்சு மண்டபத்தை எடுத்து நகர சபையிட்ட குடுக்கப்போறன்"

இந்த மண்டபத்தைக் கையளிப்பது? என்பதே அந்தப் பிரச்சினை. குறித்த மண்டபம் அமைந்துள்ள இடம் வவுனியா நகரசபையின் ஆளுகைக்குள் வருவதால், தம்மிடம் அதனைக் கையளிக்கும்படி மாநகரசபை நிர்வாகம் வேண்டியது. ஆனால் கலைஞர்களும், மக்களும் அதனை விரும்பவில்லை. ஏனெனில் ஏற்கனவே வவுனியா நகரசபையின் கட்டுப்பாட்டில் உள்ள மூன்று கலாசார மண்டபங்களும் மிகப்பெரிய தொகைக்கே, - உள்ளூர் கலைநிகழ்வுகளுக்கு கூட - கொடுக்கப்படுகின்றன. அந்த மண்டபங்களை, வருமானத்தைக் கூட்டும் நுகர்பண்டமாகவே நகரசபை பார்க்கிறதே தவிர,கலை, "கலாசாரத்தை வளர்க்கும் முயற்சிகளுக்கு அந்த மண்டபங்களை உபயோகப்படுத்த வேண்டும்" என்ற எண்ணம் அதற்குக் கிடையாது. எனவே இந்த நிலையில் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த மண்டபத்தை வவுனியா பிரதேச செயலகம் பொறுப்பெடுத்தால், உள்ளூர் கலைஞர்கள் நியாயமான தொகைக்குக் குறித்த மண்டபத்தை பெற்று, கலை, கலாசார நிகழ்வுகளை நடத்தமுடியும் என நம்பினர். எனவே அந்த மண்டபத்தை பிரதேச செயலகத்திடம் கையளிக்கும்படி மக்களும், கலைஞர்களும் ஒருமித்த குரலில் கோரிக்கை விடுத்ததால், கடைசியில் வவுனியா பிரதேச செயலகத்திடம் இந்த மண்டபம் கையளிக்கப்பட்டது.

விரைவில் இந்த மண்டபம் புனரமைக்கப்பட்டு, மக்கள் பாவனைக்கு விடப்படும் என்று எல்லோரும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் மண்டபத்தைப் பொறுப்பேற்ற பின்னர், செயலகம் இந்த மண்டபத்தை எட்டியும் பார்க்கவில்லை" என் மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். எத்தகைய நிலையில் ஒப்படைக்கப்பட்டதோ அதைவிடவும் உருக்குலைய தொடங்கியது மண்டபம். உடனடியாக மண்டபத்தைப் புனரமைப்பதில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கலாம். ஆனால் ஆகக் குறைந்தபட்சம் மண்டபத்தைச் சுற்றி ஒரு பாதுகாப்பு வேலி கூட அமைக்கப்படவில்லை.அதன் பின்னர் தான் கைவிடப்பட்ட இந்த மண்டபத்தின் மீது, குடிகாரர்கள் சிலரின் 'கடைக்கண் பார்வை' பட்டது. உள்ளே நுழையத் தடை ஏதுமில்லை. என்ன செய்தாலும் ஏன் என்று கேட்க எவருமில்லை. எனவே தாங்கள் நினைத்த நேரமெல்லாம் பலரும் சகாக்களோடு வந்து, குடித்துக் கும்மாளமிடத் தொடங்கினர். இரவு நேரங்களில் வேறும் பல சமூகச் சீரழிவுகளும் இடம்பெறத் தொடங்கியுள்ளன.

இதுபற்றிய முறைப்பாடுகள் கிடைத்ததையடுத்து தற்போது வவுனியா பிரதேச செயலகம், இந்த மண்டபத்தில் வெளியாட்கள் நுழைவதை தடுக்கும் வண்ணம் பொலிஸ் பாதுகாப்பைக் கோரியுள்ளது. அத்துடன் அடுத்த வருடத்துக்குள் இந்த மண்டபத்தை நவீனப்படுத்தி, மிகக் குறைந்த செலவில் மக்கள் பாவனைக்கு விடவுள்ளதாகவும் தெரியவருகிறது. ஆயினும் மண்டபத்தைப் பொறுப்பேற்று இவ்வளவு மாதங்களாகியும் பிரதேச செயலகம் ஏதும் செய்யாமல் இருந்ததால், குறித்த மண்டபத்தை நகரசபையிடம் கைமாற்றும் நடவடிக்கைகளும் இடம் பெறுவதாகத் தெரிகிறது. இவ்வளவு தூரம் போராடிப் பெற்ற மண்டபம் அரச அதிகாரிகளின் பொறுப்பற்ற தனத்தால் சமூக சீரழிவுகளின் மையமாக மாறுவதைக் கண்டு கலைஞர்களும் மக்களும் படும் வேதனை எப்போது தீரும்?

**நித்தியானந்தன்**
**(வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர்)**

"இந்த மண்டபத்தை வவுனியா பிரதேச செயலகத்திடம் தான் அரச அதிபர் பொறுப்புக் கொடுத்தார். அதனால் அது இன்னும் செயலகப் பொறுப்பிலை இருக்கு. அதுக்கு வட மாகாண சபை சுகாதார அமைச்சர் டொக்டர். சத்தியலிங்கம் அரசாங்கத்திலை இருந்து நிதி எடுத்துக் குடுக்கப் போறார். உடனை புனரமைப்பு வேலையை ஆரம்பிக்கப் போயினம்.

ஆமியிட்டை இருந்து எடுத்த பிறகு, மண்டபத்துகுள்ள பெடியள் உள்ளிட்டு தண்ணியடிக்கிறாங்கள் எண்டும் வேறை பல பிரச்சினை நடக்குதெண்டும் கதை வர, பிரதேச செயலகத்தால, டீ.ஐ.ஜிக்கு அறிவிச்சு உடனை பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கினம். அவரும் நடவடிக்கை எடுக்கிறதாச் சொல்லி யிருக்கிறார். பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருக்கு"



# 'பீப்' ஓதும் பிக்கு



(19 ஆம் பக்க தொடர்ச்சி...)

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மங்களாராம விகாரையை, சுமனரத்ன தேரர் பொறுப்பேற்றார். இவர் உண்மையில் காவி உடைக்குள் ஒளிந்திருக்கும் பேரின 'ரௌடி' என்பதை புலிகள் அப்போதே இனம் கண்டு கொண்டனர். சுமரத்ன தேரர் "அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்கின்றார்" என்கிற குற்றச்சாட்டில் விடுதலைப் புலிகளால் வாகரைக்கு அழைக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தார். இன்று இவரால் ஆயிரக்கணக்கான சிங்களக் குடும்பங்கள் மட்டக்களப்பில் மாத்திரம் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். கிழக்கில் நில ஆக்கிரமிப்பை முன்னின்று நடத்துபவர் சுமனரத்ன தேரர்தான்.

போர் முடிந்தபின், 2008 ஆம் ஆண்டு, கிழக்கில் பட்டிப்பளைப் பிரதேசத்தில் பல சிங்கள மக்களை கொண்டு வந்து, பலாத்காரமாக இந்தப் பிக்கு குடியேற்றினார். அவர்களுக்கு அடையாள அட்டைகளையும், வாக்காளர் அட்டைகளையும் வழங்கும்படி அந்த பிரதேசத்து கிராமசேவகரிடம் சண்டையிட்டிருக்கிறார். "சட்ட விரோதமாக குடியேற்றப்பட்டவர்களுக்கு, இந்த ஆவணங்களை வழங்க முடியாது" என்று மறுத்திருக்கிறார் கிராமசேவகர். சுமனரத்ன தேரர் விடாப்பிடியாக பிரதேச சபை, அரசியல் தலைவர்கள் போன்றவர்களையும் அணுகியும் அவரது திட்டம் சாத்தியப்படவில்லை. ஆனாலும் குடியிருப்பை விஸ்தரித்து, பௌத்த விகாரை கட்டத் தொடங்கினார். மத்திய கிழக்கில் இயங்கும் சிங்கள அமைப்பான 'ஹெலபிம' இயக்கத்தின் உதவியுடன் புதிய வீடுகளும், ஏனைய வசதிகளும் கட்டிக்கொடுக்கப்பட்டதாகவும், அது போல, கெவிலியாமடுவ, கொஸ்கொல்ல, போன்ற இடங்களிலும் பல வீடுகள், தடைகளுக்கு மத்தியில் புதிதாக அமைக்கப்பட்டதாகவும், சுமனரதன தேரர் தெரிவித்திருந்தார்.

இந்த இடைவெளியில் தமது குடியேற்றத்துக்கு சட்ட அங்கீகாரம் கோரி சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வந்தார். குடியேற்றப்பட்டவர்கள் அனைவரும் யுத்தத்திற்கு முன்னர் அங்கு வாழ்ந்தவர்கள் என்றும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் என்றும் காரணங்களை அடுக்கியபோதும் அவரால் போதிய ஆதாரங்களை முன்வைக்க முடியவில்லை. போரின் பின்னர் நிகழ்த்தப்படும் சகல திட்டமிட்ட குடியேற்றங்களுக்கும் இதே காரணத்தைத் தான் பேரினவாதிகள் முன்வைத்து வருகிறார்கள் .இந்த பிரதேசங்களுக்கு பாடசாலையும், புதிய வீதிகளையும் அமைத்துத் தரும்படியும் பிக்கு கேட்டிருந்தார்.

இவர் முதலில் தனக்கு ஆதரவு தேடி "ஜாதிக ஹெல உறுமய"வின் தயவை நாடினார். பின்னர் பொதுபல சேனாவின் அமைப்பாளராக ஆனார்.

## பெண் அமைச்சருக்கும் தூஷண அர்ச்சனை

இந்த வீடுகளுக்கு சட்டவிரோதமாக மின்சாரம் களவாடி பொருத்தியதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் பொலிசார் சகிதம் சென்றிருந்த போது சுமனதேரர் அந்த அதிகாரிகளையும் தாக்கி, அப்போதைய மின்வலு சக்தி அமைச்சர் பவித்ரா வன்னி ஆராய்ச்சியையும் மோசமான தூஷண வார்த்தைகளால் அர்ச்சனை செய்த காணொளி பல இணையத்தளங்களிலும் சமூக ஊடகங்களிலும் வெளியாகியிருந்தது.அதைவிட பிரதேச செயலகத்துக்குள் நுழைந்து அடாவடித்தனம் புரிந்தமை, தமிழ்ப் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை பல பொலிஸ் அதிகாரிகள் மத்தியில் திட்டியபடி துரத்தி, துரத்தி அடிக்க முனைந்தமை, தன்னுடைய விகாரையை திறக்க, ஜனாதிபதி மைத்திரிபால வராததால் ஆவேசமடைந்து, ஜனாதிபதியை மோசமாகத் திட்டியபடி திரைநீக்கம் செய்யப்படவிருந்த கல்வெட்டை பெரிய சுத்தியலால் அடித்து நொருக்கியமை என்று, சுமனரத்ன தேரரின் அட்டகாசங்களால், இணையங்களுக்கு பரபரப்பான வீடியோக்களுக்குப் பஞ்சம் ஏற்படுவதில்லை.

குறைந்தபட்சம் ஒரு வாரத்துக்கு ஒருமுறையேனும் ஏதேனும் சர்ச்சையில் சிக்காவிட்டால், இந்த 'பீப்' புகழ் பிக்குவுக்கு நித்திரையே வராது. சாதாரண பிரஜைகள் மோட்டார் சைக்கிளில் நிற்காமல் சென்றாலே சுட்டுக்கொல்லும் அதே பொலிஸார்தான், தங்களை அடிக்க வந்தாலும் பிக்குவைக் கெஞ்சிக் கூத்தாடி 'கூலாக்க' முனைகிறார்கள்.

## இப்போதைய நிலை

குறித்த பிக்கு மீது, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பட்டிப்பளை கிராமசேவகரான ஜீவிதன் கொடுத்திருக்கிறார். ஆயினும் அந்த முறைப்பாடு தொடர்பில் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லை. கண் முன்னே பிக்கு, ஒரு அரச உத்தியோகத்தருக்கு எதிராக அநாகரீகமான வார்த்தைகளைப் பிரயோகித்த போதும், அவரைத் தாக்க வந்தபோதும் ஏதும் செய்யாத பொலிஸ் அதிகாரிகள், வெறும் காகித முறைப்பாட்டுக்கு நடவடிக்கை எடுப்பார்கள் என நினைப்பது அபத்தமான ஒன்று. தற்போது தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதால், பட்டிப்பளைக்கு பணிபுரியச் செல்லமுடியாது என பிரதேச செயலருக்கு எழுத்து மூலம் அறிவித்துவிட்டு, பிரதேச செயலகத்துக் குள்ளேயே பணியைத் தொடர்கிறார் கிராம சேவகர் ஜீவிதன். பிக்குவின் அட்டகாசத்தைக் கண்டித்து, கடந்த செவ்வாய்க்கிழமை பட்டிப்பளையில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றையும் முன்னெடுத்தனர். ஆனாலும் பிக்குவின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்ப்பது கானல்நீரால் தாகம் தீர்ப்பதைப் போலத்தான்.



# இடியப்ப உரல்

இடியப்ப உரல் என்பது இடியப்பம் செய்வதற்குப் பயன்படும் ஒரு கருவி.

முற்காலத்தில் மரத்தினால் மட்டும் செய்யப்பட்ட இது தற்காலத்தில் அலுமினியம் போன்ற உலோகங்களாலும் செய்யப்படுவதுண்டு.

இடியப்ப உரல் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும். கீழ்ப்பகுதி, இரு புறமும் கைபிடியுடன் கூடியதும், நடுவில் ஏறத்தாழ 2 அங்குல விட்டம் கொண்ட துளையுடன் கூடியதுமான உருளைவடிவ அமைப்புக் கொண்டது. இதன் அடிப்பகுதியில், சிறிய பல துளைகளுடன் கூடிய பித்தளைத் தகடு பொருத்தப்பட்டிருக்கும். மேற்பகுதி, இரு பக்கமும் கை பிடிகளுடன் கூடிய உருளை அமைப்பு இருக்கும். இவ்வுருளை சரியாக கீழ்ப்பகுதியின் துளைக்குள் செல்லக் கூடியவாறான அளவு கொண்டதாக இருக்கும். கீழ்ப்பகுதியின் துளைக்குள் பிசையப்பட்ட மாவை இட்டு, கைபிடிகளின் உதவியுடன் மேற்பகுதியின் உருளைப் பகுதியால் அழுத்துவர். உருளை துளைக்குள் இறங்கும் போது பிசைந்த மாவு பித்தளைத் தகட்டின் துளைகள் வழியாகக் கம்பிகள் போல் வெளியேறும். இவற்றை, இடியப்பத் தட்டில் வட்டமாகச் சுற்றிப் பிழிவர்.

இவ்வாறான உரல்களை இடியப்பம் செய்வதற்காக மட்டும் அல்லாமல் முறுக்கு, அச்சுப் பலகாரங்கள் போன்ற பல்வேறு சிற்றுண்டிகளையும் செய்யக் கூடியதாக உருவாக்குவதும் உண்டு. இவ்வாறான உரல்களில் துளைகளைக் கொண்ட அடித்தகடு நிலையாகப் பொருத்தப்படுவதில்லை. சிற்றுண்டிகளின் தன்மையைப் பொறுத்து, வெவ்வேறு அளவுகளைக்கொண்ட துளைகளுடன் கூடிய உலோகத் தகடுகள், உரலின் உருளை வடிவத்துளையுள் தற்காலிகமாகப் பொருத்தும்படி அமைக்கப் பட்டிருக்கும். தேவையைப் பொறுத்து அச்சுக் களை மாற்றிப் பயன்படுத்துவர். இவ்வகையான உரல்களில் பின்வரும் அச்சுக் கள் இருப்பதுண்டு:

**இடியப்ப அச்சு, முறுக்கு அச்சு, மகிழம்பூ அச்சு, ஓமப்பொடி அச்சு, நாடா அச்சு, பல்லுப் பதிந்த அச்சு, சிலேபி அச்சு**

தற்காலத்திலும் இடியப்ப உரல் பரவலாகப் பயன்பாட்டில் உள்ளது. எனினும் இடியப்ப உரலில் இடியப்பம் பிழிவது இலகுவானது அல்ல. இதனால், தற்காலத்தில் இடியப்ப உரலுக்குப் பதிலாக இலகுவாகப் பிழியத்தக்க வகையில் பல வகையான பொறிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

# போத்துக்கேய மொழிச் செல்வாக்கு



யாழ்ப்பாணம், *1591* ஆம் ஆண்டிலிருந்து, *1620* வரை போத்துக்கீசரின் செல்வாக்கின் கீழும், *1620* தொடக்கம் *1658* வரை அவர்களின் நேரடி ஆட்சியிலும் இருந்தது. யாழ்ப்பாணத்துடன் தொடர்பு கொண்ட முதல் மேல் நாட்டவர் இவர்களே ஆனதால், பல மேல் நாட்டுப் பொருட்களும், கருத்துருக்களும் யாழ்ப்பாணத்தில் அறிமுகமானது இவர்கள் மூலமேயாகும். இவற்றுடன் போர்த்துக் கீச மொழிச் சொற்கள் சிலவும் யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் கலந்துள்ளன. யாழ்ப்பாணத் தமிழில் உள்ள போர்த்துக்கேய சொற்களுக்கு சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பேச்சுத் தமிழ் | பொருள் | போத்துக்கீச மூலம் |
|---|---|---|
| அலுமாரி | cupboard | arm@rio |
| அன்னாசி | Pineapple | anan@s |
| ஆசுப்பத்திரி | மருத்துவமனை | hospital |
| கடுதாசி | கடிதம் | carta |
| கதிரை | நாற்காலி) | cadeira |
| குசினி | அடுக்களை | cozinha |
| கோப்பை | கிண்ணம் | copo |
| சப்பாத்து | காலணி | sapato |
| தாச்சி | இரும்புச் சட்டி | tacho |
| துவாய் | துவாலை | toalha |
| நத்தார் | நத்தார் | Natal |
| தோம்பு | நில உரிமைப் பட்டியல் | tombo |
| பாண் | ரொட்டி | po |
| பீங்கான் | செரமிக் தட்டு | palangana |
| பீப்பா | மரத்தாழி | pipa |
| பேனை | பேனா | pena |
| வாங்கு | bench - | banco |
| விசுக்கோத்து | Biscuit | biscoito |
| விறாந்தை | Verandah | varanda |

சிப்பி என்பது தமிழர் சமையலில் இடம்பெறும் ஒருவகை இனிப்புப் பலகாரம் ஆகும். உழுத்தம் மா, அரிசி மா, வெள்ளை மா ஆகிய மூன்றையும் கலந்து இது செய்யப்படும். பல வகை அச்சுக்களைப் பயன்படுத்தி பற்பல வடிவங்களில் இவற்றைச் செய்து பொரிப்பர். பின்னர் சீனிப் பாணி காய்ச்சிப் பிரட்டி எடுப்பர். சிப்பிகளை சிறுவர்கள் விரும்பி உண்பர். சிப்பிகளில் உள்ள கோடுகள் போன்ற அமைப்பு, நிஜச் சிப்பிகளிலும் காணப்படுவதாலேயே இதற்கு சிப்பி என்று பெயர். தமிழர் பண்டிகை நாட்களில், விசேட நிகழ்வுகளில் இன்று முக்கிய இடம் பிடிக்கும் ஒரு உணவு வகையாக இது காணப்படுகின்றது.

# சிப்பி



# தூதுவளை



தூதுவளை (Solanum trilobatum) மூலிகையாகப் பயன்படும் கொடி யாகும். இது ஈரமான இடங்களில் செழித்துப் புதர் போல வளரும். இதன் இலை கரும்பச்சை நிறமானது. பூ ஊதா நிறமானது. சிறிய காய்கள் தோன்றிப் பழுக்கும். இதன் கொடியிலும், இலையிலும் கூரிய முட்கள் காணப்படும்.

தூதுவளை, அனைத்து இடங்களிலும் பயிராகும் கற்ப மூலிகைகளில்இதுவும் ஒன்று. இதற்கு தூதுவளை, சிங்கவல்லி, அளர்க்கம் என்று பல பெயர்கள்உண்டு. இலங்கையில் தோட்ட வேலிகளில் வளரும் ஒருவகை கொடியாகும். சிறு முட்கள் நிறைந்து காணப்படும். இதன் இலை, பூ, காய், வேர் அனைத்தும் மருத்துவப் பயன் கொண்டது. குறிப்பாக ஈழை நோய்க்கு (ஆஸ்துமா) இது மருந்தாகப்பயன்படுகிறது. இதனை அரைத்து சம்பலாக, உணவில் சேர்க்கும் வழக்கம் பரவலாக இருக்கிறது. தூதுவளை போன்ற மூலிகை, உணவுக்கு பயன்படும் செடி கொடிகளை நாம் இன்று பயன்படுத்துவதை குறைத்து வருகின்றோம். எமது முன்னோர்கள் இவ்வாறான மூலிகை உணவுகளை தமது அன்றாட உணவுப் பழக்கத்தில் சேர்த்துக் கொண்டனர். அதனாலேயே அவர்களால் ஆரோக்கியமான நீண்ட ஆயுள்கொண்ட மனிதர்களாய் வாழ முடிந்தது.





# நல்லூரில் கையேந்தும் விவசாயி

**போ**ர், மனிதர்களின் தலை விதியை எப்படியெல்லாம் மாற்றி யெழுதி விடுகின்றது என்பதற்கு நல்ல உதர்ரணம் துரைராஜரத் தினம் என்கிற 73 வயதான மனிதர். கிளிநொச்சியில் தோட்டம் செய்து, குடும்பத்தாரோடு மகிழ்வாக இருந்த இந்த மனிதர், இப்போது நல்லூர் முருகன் கோயிலில், மற்றவர்களிடம் யாசகம் கேட்டுக் கையேந்துப வராக இருக்கிறார். அவரின் குடும்பம், தோட்டம், மகிழ்ச்சி எல்லாமே எங்கே தொலைந்து போயின? எப்படித் தொலைந்தன? முகத்தில் ஏக்கத்தோடும், பசிக்களைப்போடும் இருந்தவர் வற்றிப்போன வார்த்தைகளோடு உரையாடினார்.

**நேர்காணல்: யபர்ணா**
( ஊடகக் கற்கைகள், யாழ்.பல்கலைக்கழகம்)

**கேள்வி:** ஐயா வணக்கம்..! சாப்பிட்டீங்களோ?

**பதில்:** இண்டைக்கு இன்னும் சாப்பாடு வரேல்லை (அப்போது மாலை 3 மணி). வழமையா வெள்ளிக் கிழமையில மட்டும் நல்லூர் கோயில் வாசல்ல ஆக்கள் நேர்த்திக்காக சாப்பாடு கொண்டு வந்து தாறவை. இன்னும் எனக்கு கிடைக்கேல. வரும் எண்டு நினைக்கிறன். காலம்பிறையும் சாப்பிடேல்ல.

**கேள்வி:** மற்ற நாட்களில் எங்க சாப்பிடுறனீங்கள்?

**பதில்:** குழந்தை யேசு கோயிலுக்கு போனால் சாப்பாடு தருவினம். (குழந்தை யேசு கோயிலில் பிரார்த் தனைக்காக வழங்கப்பட்ட ஒரு புத்த கத்தை எடுத்துக்காட்டினார். பிறப்பால் அவர் இந்துவாக இருந்தாலும் வயிற்றை நிரப்புவதற்காக தேவால யங்களையும் நாடிச் செல்கின்றார்)

**கேள்வி:** சாப்பாடு கிடைக்கேல எண்டால் என்ன செய்யிறனீங்கள்?

**பதில்:** உதுல ஒரு பேக்கரி கிடக்குது. இரவில அங்க போய் அரை றாத்தல் பாண் வேண்டிச் சாப்பிடுறனான்.

கேள்வி: என்னத்தோட பாணைச் சாப்பிடுறனீங்கள்?

**பதில்:** கறி ஒண்டும் இல்ல பிள்ளை. வெறுமனையாத் தான் சாப்பிடுறனான். ஒரு நாளைக்கு அரை றாத்தல் பாணுக்கெண்டாலும் காசு கிடைக்கும்.

**கேள்வி:** இப்படி மற்ற ஆக்களிட்ட கையேந்துறதை நினைக்க கவலையா இருக்கிறேலையோ?

**பதில்:** பின்ன என்ன பிள்ளை? இப்பிடிப் பிச்சை எடுக்கிறது, கவுரமான தொழிலோ? எவ்வளவு கஷ்டமா இருக்கு. மதிப்புக் கெட்டு வாழ வேண்டி இருக்கு. துலா மிதிச்சு, சொந்தக்காலில தோட்டம் செய்து செழிப்பா இருந்த நான், இப்ப இப்படி பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறதை நினைக்கச் சரியான மனவருத்தமா இருக்கு. வேற வழியில்லை. உயிர் வாழுறதுக் காக பிச்சை எடுத்து ஒரு நேர வயித்தையாவது கழுவ வேண்டி இருக்கு.

**கேள்வி:** தோட்டம் துரவெல்லாம் செய்தா பிறகேன் இப்பிடி இப்ப ஒண்டுமில்லாமல் ஆக்களிட்ட யாசகம் கேக்கிற நிலை வந்தது?

**பதில்:** கலியாணம் கட்டி மனுசி, பிள்ளைகளோட சந்தோசமா இருந்தன். கடைசிச் சண்டைலே என்ர மனுசி புது மாத்தளனில செத்திட்டா. எனக்கும் அம்பலவன் பொக்கணையில மண்டை யிலையும், காலிலையும் செல் பட்டது. எனக்கு 2 பிள்ளையள். என்ர பொம்பிளப் பிள்ளை, இன்னும் தடுப்பில இருக்கிறா. பெடியன் தன்ரபாட்டில கலியாணம் கட்டிப்போட்டான். மனுசியும் இல்லை. பிள்ளையளும் என்னோட இல்லை. எனக்கும் கால் ஏலாது. வேற என்ன செய்ய முடியும்? அதுதான் இப்பிடிப் பிச்சை எடுக்க வேண்டியதாப் போட்டுது.

**கேள்வி:** உங்களுக்குச் சொந்த பந்தம் எண்டு ஒருத்தரும் இல்லையோ? அவை உங்களுக்கு உதவி செய்யிறேலையா?

**பதில்:** எனக்குச் சகோதரங்கள் ஊர்ல கனக்க பேர் இருக்கினம். ஆனால் ஒருத்தரும் உதவுறேல்ல. என்ர காணியையும் அவைதான் இப்பவும் வச்சிருக்கினம்.

**கேள்வி:** இப்பிடி யாசகம் வாங்கிற தில வாற காசு உங்கட வாழ்க்கைக்கு போதுமானதாக இருக்குதோ?

**பதில்:** முந்தி கோயில் வாசல்ல இருந்து பிச்சை எடுத்தனான். இப்ப இஞ்சால வந்து இருக்கிறன். ஆரும் தேடிக்கொண்டு வந்து தந்தால் தான் கிடைக்கும். என்னால் 3 நேரச் சாப்பாட் டுக்கே பிச்சை எடுக்கேலாம இருக்கு. உங்கால கேற்றுக்கு வெளியால நிண்டு பிச்சை எடுக்கிறவைக்குத் தான் கூடக்காசு கிடைக்குது. வெளிநாட்டுக்காரர் வந்தால் 100 ரூபாயும் குடுப்பினம். எனக்கு ஒருநாளைக்கு மொத்தமா வாற காசை சேத்தா 100 ரூபா தான் வரும். கேற்றுக்கு வெளியில நிக்கிறவைக்கு ஒரு நாளைக்கு சிலவேளை 1000 ரூபாயும் கிடைக்கும். வவுனியாக்கு அங்கால இருந்து, சுற்றுலாவுக்கு வாறவையும் பாத்து பாராமல் தருவினம். இஞ்சத்தயான் ஆக்கள் பெரும்பாலும் 10, 20 ரூபாய் தான் தருவினம்.

**கேள்வி:** உங்களுக்கும், இங்க முதலே யாசகம் எடுக்கிற ஆக்களுக்கும் இடையிலே ஏதாவது பிரச்சினைகள் வராதோ?

**பதில்:** தமிழன் எண்டா பிரச்சினை வராமல் ஏதும் நடக்குமோ? நான் வன்னியாள் எண்டு சொல்லி, என்னைப் பிச்சை எடுக்க விடாமல் இஞ்சை முதலே பிச்சை எடுத்த ரண்டு, மூண்டு பேர் தடங்கல் போடுவினம். ஆரும் எனக்கு காசு போட வந்தால் "உவனுக்கு போடாதீங்கோ" எண்டு கத்துவினம். பிச்சை எடுக்கிறதெண்டாக் கூட யாழ்ப்பாணத்தான் மட்டுந்தான் இந்தக் கோயில்ல பிச்சை எடுக்கலாம் எண்டு நினைக்கிறாங்கள். அதாலதான் நான் பிச்சை எடுக்க சிலவேளை குழந்தை யேசு கோயிலுக்கும் போறனான்.

**கேள்வி:** நீங்கள் யாசகம் கேட்கும் போது யாரும் கடுமையாகப் பேசி இருக்கிறார்களா?

**பதில்:** அப்படி ஒருத்தரும் இதுவரை செய்யேல. அவையள் நேர்த்திக்காக தாங்கள் வச்சிருக்கின்ற அள்ளு காசை துணில கட்டிப் போட்டுத்தாறவை.

**கேள்வி:** யாசகம் கேட்கிற நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில எங்க தங்குவீங்கள்?

**பதில்:** நான் சட்டநாதர் சிவன் கோயில்ல இரவில படுத்திட்டு, அங்க இருந்து காலமை இங்க வருவன். வந்து கோயிலுக்கு பக்கத்தில இருக்கிற இடத்தில காலைக்கடனை முடிச்சிட்டு, பிறகு குழந்தை யேசு கோயிலுக்கு போவன். செவ்வாய்க் கிழமையில மானிப்பாய் அந்தோனியர் கோயிலுக்கும் போறனான். இப்படியே மாறி மாறி திரியிறன்.

**கேள்வி:** என்னத்தில நீங்கள் இந்த இடங்களுக்கெல்லாம் போறனீங்கள்?

**பதில்:** எனக்கு கால் ஏலாது. அதால ஆஸ்பத்திரியால எனக்கு மூண்டு சில்லு வண்டி தந்தவை. அதிலதான் போய் வாறனான். அந்த மூண்டு சில்லு வண்டியும், முந்தநாள் கோயில் வாசல்ல பஸ்ஸோட அடிபட்டு, அது இப்ப கோர்ட்ல தான் இருக்கு. அதால தான் நான் இங்க தொடர்ந்து இருக்கிறன்.



# மக்கட் பெயர் 02

முனைவர்.ஜெ. அரங்கராஜ்

சோழர்களுக்குரிய கிள்ளி எனும் பெயரைப் பாண்டிக்குடியினரோ, பாண்டியருக்குரிய செழியன் எனும் பெயரைச் சோழ, சேரக் குடியினரோ சூட்டிக் கொள்ளமாட்டார்கள். தங்களது குடிக்குரிய மரப்பெயர்களையே, உயர்வாகக் கருதிச் சூட்டுவர். பிற குடிகளின் பெயர்கள், தங்களது தலைமேல் சூட்டப்படுதலை முள் முடியாகக் கருதுவர். அதனையொப்பவே, திணைசார்ந்த குறிஞ்சி, முல்லை, மருதம் நெய்தல், பாலை எனும் நிலவியலையொட்டிய பெயர்களை அந்தந்தத் திணைக்குரிய குடிகள் சூட்டுவர். திணைமாறிய பெயர்களைச் சூட்டுவதில்லை.

தந்தையின் பெயரினைப் பெறும் சிறப்பும், முறையாக வந்த பிள்ளைகளையே சென்றடையும். தந்தையின் பெயர்ப் பெருமை முறையான பிள்ளைகளினைச் சென்றடையும் என்பதினைப் பின்வரும் பாடலடிகளால் அறியலாம்.

*"பகலான் டல்கினை பரத்த வென்றியா*
*னிகலி யிருப்பே னாயிற் றான்றன்*
*முதல்வன் பெரும்பெயர் முறையுளிப் பெற்ற*
*புதல்வற் புல்லிப் பொய்த்துயி றுஞ்சும்"*
கலி.75:22-25

ஒருவர்க்குத் தமது உடலில் ஏற்படும் அடையாளங்களால் பெயர்கள் ஏற்படுவதுண்டு. ஒரு குருக்கள் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். அவரது முகத்தின் வலது பாகம் முழுவதும் மச்சம் இருக்கும். அதனையொட்டி அவரை அக்கால மாணவர்கள் அனைவரும் "மச்ச குருக்கள் ஆசிரியர்" என்றே அழைப்பர். அவரது இயற்பெயர் என்னதென்று ஒருவரும் அறிந்திலர். சங்க காலத்திலும், முகத்தில் ஏற்பட்ட கத்தரிக்காய் போன்ற தழும்பினால், பெரும்புகழ் உடைய ஒருவரின் இயற்பெயர் மறைந்து "தழும்பன்" என அழைக்கப்பட்டமையை

*"தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசைப்*
*பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்"*
அகம்.227:11-12

ஒரு மனிதனின் செல்வாக்கு, ஆட்சிமை, திறன் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களைப் பல பெயர்களால், பலர் புகழ்தலுண்டு. இதனையே, பிற்காலத்தில் மன்னர்கள் வரும்போது கட்டியங் கூறுவோர் ஒரு கலையாகவே கையாண்டனர். இவ்வாறு பல பெயர்கள் வழங்கியதை

*"அகலிடங் குயின்ற பல்பெயர் மண்ணி"*
அகம்.269:8

எனும் அடிகளால் அறியலாம்.

குடிச்சிறப்பும், மரபுச்சிறப்பும் உடைய பெயர்களைத் தம் மக்களுக்குச் சூட்டும் நாளினைத் தமிழர்கள் விழாவாகக் கொண்டாடியதற்கான சான்றினை, நாம் சிலப்பதிகாரத்தில் காணலாம். கோவலனுக்கும், மாதவிக்கும் பெண்மகவு பிறந்தவேளை, அம்மகவிற்குப் பெயர் சூட்டுதற் பொருட்டு, ஆயிரக்கணக்கான கணிகையர்கள் கோவலனை அழைத்து, அம்மகவிற்குப் பெயர்சூட்ட வேண்டினர். கோவலன், தமது குடித்தெய்வமான மணிமேகலையின் பெயரினைச் சூட்டி, அக்குழந்தையை வாழ்த்திய கணிகையருக்குப் பொன்னைப் பரிசில்களாக வாரி இறைத்தமையைப் பின்வரும் சிலப்பதிகார அடிகளால் அறியலாம்.

*"மாந்தளிர் மேனி மாதவி மடந்தை*
*பால்வாய்க் குழவி பயந்தன ளெடுத்து*
*வாலா மைந்நா ணீங்கிய பின்னர்*
*மாமுது கணிகையர் மாதவி மகட்கு*
*நாம நல்லுரை நாட்டுது மென்று*
*தாமின் புறூஉந் தகைமொழி கேட்டாங்*
*கிடையிருள் யாமத் தெறிதிரைப் பெருங்கடல்*
*உடைகலப் பட்ட வெங்கோன் முன்னாள்*
*புண்ணிய தானம் புரிந்தோ னாகலின்*
*நண்ணுவழி யின்றி நாள்சில நீந்த*
*இந்திர னேவலி னீங்கு வாழ்வேன்*
*வந்தே னஞ்சன் மணிமே கலையான்*
*உன்பெருந் தானக் துறுதி யொழியாது*
*துன்ப நீங்கித் துயர்க்கட லொழிகென*
*விஞ்சையிற் பெயர்ந்து விழுமந் தீர்த்த*
*எங்குல தெய்வப் பெயரீங் கிடுகென*
*அணிமே கலையா ராயிரங் கணிகையர்*
*மணிமே கலையென வாழ்த்திய ஞான்று*
*மங்கல மடந்தை மாதவி தன்னொடு*
*செம்பொன் மாரி செய்கையிற் பொழிய"*
சிலம்பு.15:22-41

பெயர்சூட்டுதலை "நாமநல்லுரை" எனச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. ஆனால், பெருங்கதை 'பெயர்நிலை பெறீஇய' எனக் குறிப்பிடுகின்றது. 'நாம' எனும் வடசொல்லினைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. ஆனால் வடமொழித் தழுவல் எனக் குறிப்பிடப்படும் பெருங்கதை, பெயர்சூட்டலைத் தமிழிலேயே குறிப்பிடுகின்றது. சிலம்பில் மேற்கண்ட அடிகள், மாடலமறையோன் எனும் வடபுலத்தான் கூற்றானபடியால் வடசொல்லான நாமம் பயன்படுத்தப்பட்டதோ! என் எண்ணலாம். ஆனால், கொங்குவேளிர் தமிழிலேயே குறிப்பிட்டுள்ளமை சிறப்பு. மன்னர்கள் எவ்வாறு பிறந்தநாள் விழாவினைக் கொண்டாடினார்கள் என்பதைப் பெருங்கதையின் வழி அறியலாம். உதயனன் மனைவி, வாசவதத்தைக்கு ஆண் மகவு பிறந்தவேளை அரண்மனைப் பெருங்கணியர்கள் சாதகப்பட்டியலைப் பார்த்துப் பெயர்சூட்டு விழாவிற்கான நாளைக் குறித்தனர். தமிழ் இலக்கியப் பரப்பில் சாதகப் பட்டியல் எனும் சொல் பெருங்கதையிலேயே முதலில் இடம் பெருகின்றது.

*"வழியோ ரறிய வழுவத லின்றிச்*
*சாதகப் பட்டிகை சாலவை நாப்பண்*
*அரும்பொறி நெயிய னாற்ற வமைத்த*
*பெருங்கணிக் குழுவக்குப் பெறுதற் கொத்த"*
பெருங்.5-6/81-84

சாதகப் பட்டியலை நோக்கி, நன்நாள் கணித்துச் சுற்றத்தார்க்கும் நட்புசால் மன்னர்களுக்கும் ஓலை அனுப்பி அழைக்கப்பட்டு, பெயர்சூட்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. உதயனின் மகனோடு, அவனது தளபதியின் மகன்கள் மூவருக்கும் அவ்விழாவிலேயே பெயர் சூட்டப்பட்டது. இதனைப் பின்வரும் பெருங்கதையடிகளால் அறியலாம்.

உதயனன் வாசவ தந்தையின் மகனுக்கு "நரவானதத்தனென்று" பெயர்சூட்டப்பட்ட மையை

*"பெயர்நிலை பெறீஇய பெற்றிநாடி*
*உயர்நிலை யுலகி னுலோக பாலன்*
*நயமிகு சிறப்பொடு நகர்மிசைப் பொலிந்த*
*பலர்புகழ் செல்வன் றந்தன னாதலின்*
*உருவாண மாகிய வோங்கு புகழ்ச் செல்வன்*
*நரவாண தத்த னென்று பெயர் போக்கி"*
பெருங்கதை.105-110

எனும் அடிகளால் அறியலாம்.

"உருமண்ணுவா" முதலானவரின் புதல்வர்களுக்கு பூதி, அரிசிகன், தவந்தகன், கோமுகன் என்பனவான பெயர்கள் இவ்விழாவிலேயே சூட்டப்பட்டமையை

*"உறுவிறற் றானை யுருமண் ணுவாவும்*
*அறிநரை வழிபட் டன்றே பெயர்தலின்*
*.....................*
*பொருவின் மாக்கள் பூதியென் றுரைஇ*
*ஒழிந்த மூவ ருருவார் குமரருட்*
*கழிந்தோ ரீமத்துக் கட்டழல் சேர்ந்த*
*கரியக லேந்திக் காவயிற் பெற்றோன்*
*அரிசிக னாகப் பெயர்முதல் கொளீஇப்*
*பயந்தலை நிற்கும் பல்கதிர்ச் செல்வன்*
*நயந்துதரப் பட்டோன் றவந்தக னாமெனத்*
*தாயர் போலத் தக்கது நாடிய*
*ஆவழிப் படுதலி னாகிய விவனே*
*கோமுக னென்று குணங்குறி யாக*
*மற்றவர் மகிழ்ந்து"*
பெருங்-5:111-123

எனும் மேற்கண்ட பாடலடிகளின் வழி அறியலாம்.

சிலம்பில், மணிமேகலையின் பெயர் சூட்டுவிழா, தமிழ் மரபுப்படி, குல தெய்வத்தின் முழுமையான பெயரைச்சூட்டிக் கொடை வழங்கலோடு நடைபெற்றது. மணிமேகலை தெய்வத்தால் தரப்பட்ட குழந்தை எனவே மணிமேகலைத் தெய்வத்திற்கு உரிய குழந்தை என்பனவாகவோ, பொருள்படும் பெயர்களைச் சூட்டாமல், அத்தெய்வத்தின் பெயரையே சூட்டியது, தமிழ்மரபு. உதயனன் கதையில் உதயனன் தன் மகனுக்குக் "குபேரனால் தரப்பட்டவன்" எனும் பொருள்படும் "நரவாண தத்தன்" (நரவாணன் குபேரன், தத்தன் கொடுக்கப்பட்டவன்) எனும் பெயரைச் சூட்டினான். இது வடவர் வழமை. தமிழ்மக்கள் வழமையில் தந்தை தம் பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டல், பெருவழக்காகயில்லை. தாய்மாமன் மூலமே பெயர் சூட்டல் நிகழும். இன்றளவும் காதுகுத்தலும், பெயர்சூட்டலும் அம்மான் வழியதாகவே கொங்கு நாட்டில் நிகழ்கின்றது. பொதுவாகவே, பிள்ளைப் பேறு, பெண்ணின் தாய் வீட்டிலேயே நிகழும், பிள்ளை பிறப்பின் பிறகு, தாயும் சேயும் கணவன் இல்லம் செல்லக் கிட்டத்தட்ட ஓர் ஆண்டு வரைக் கூட ஆகலாம். அதுவரை, பிள்ளைக்குப் பெயர் சூட்டாமலிருக்கவியலாது. ஆதலால் இந்நிகழ்வு, பெண்ணின் தாய் வீட்டில் தாய்மாமனால் நிகழ்த்தப்பட்டிருக்கலாம். கோவலன், மாதவியின் வீட்டிலேயே வாழ்ந்தான். மாதவிக்கும் உடன்பிறந்தோர் இருந்ததாக அறியவில்லை. ஆதலால் கோவலனையே மணிமேகலைக்குப் பெயர்சூட்ட அழைக்கப்பட்டிருக்கலாம்.

துணைக்கண்டம் முழுவதும், காரணம் பற்றிய பெயர்களே பெரும்பாலும் சூட்டப்பட்டன. வெற்று ஒலிகளுக்காகப் பெயர் வைக்கும் மரபு இருந்ததாக அறிவதற்கில்லை. மன்னர்களைப்போல், செல்வமுடைய வாணிகக் குடியில் பிறந்தமையால் மாசாத்துவன் தன் மகனுக்குக் "கோவலன்" எனப் பெயரிட்டான் என்பர். கதிரவன் உதயமாகும் காலத்தில் பிறந்தமையால் பெருங்கதையின் தலைவன் உதயணன் எனப் பெயர் சூட்டப் பெற்றான். இதனை,

*"புதையிரு ளகற்றும் பொங்கொளி மண்டிலம்*
*உதய மிவர்தர வுதித்தோன் மற்றிவன்*
*உதயண னாகெனப் பெயர்முதற் கொளீஇ"*
பெருங்.2:81-83

எனும் பாடலின் வழியாக அறியலாம்.

இலங்கையைப் பொறுத்தவரை, பல தமிழ் மன்னர்களின் பெயர்கள் சிங்களப் பெயர்போல் மாற்றப்பட்டு, வரலாற்றில் அவர்களைச் சிங்கள மன்னர்கள் ஆக்கிய போக்குகளும் உண்டு. சான்றாக, மூத்த சிவம், கயபாகு, விக்ரமசிங்கன் முதலியோரைக் குறிப்பிடலாம். சிங்கள மொழியில் மக்கட்பெயர்கள், பால்காட்டும் விகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதில்லை. விளியேற்கும் அமைப்பிலேயே அவை இருக்கும். "சேகரன்" என்பது தமிழ்மரபு "சேகரா" என விளி அமைவில் இருத்தல் சிங்கள மரபு. அதனைப் பின்பற்றி அவர்கள் தமிழ்ப் பெயர்களைச் சிங்கள அமைப்பில் மாற்றிக்கொள்வர். "மூத்தசிவம்" எனும் பெயர் "முட்டசிவா" என அமையும். இதற்கான இணைப்பெயர்களைச் சிங்களத்தில் காணல் அரிது. நல்லசிவம், பரமசிவம், மூத்தசிவம், இளையசிவம் முதலான இணைப் பெயர்களின் மரபை, இன்னும் தமிழில் காணவியலும்.

கந்த சாமி என்ற இயற்பெயர் கொண்ட விரமசிங்கன், மதுரை நாயக்க மரபைச் சேர்ந்தவன். இவனது மனைவி பெயர் வெங்கட்ரமா. இம்மன்னனின் பெயரை "விக்ரம சிங்கா" எனத் திருத்தம் செய்து, கண்டி நாயக்க அரசமரபை, சிங்கள அரச மரபாகப் புனைந்து கொண்டனர்.

கயம் எனும் சொல் ஆழமான குளத்தினைக் குறிக்கக்கூடியது. இதனை

*"கயங்கண் டன்ன வயங்குடை நகரத்துச்"*
மதுரைக்.484

*"இனமீ னிருங்கழி யோத மல்கு தொறும்*
*கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்"*
குறுந்.9:5-6

எனும் அடிகளால் அறியலாம்.

"வளவன், பெருவளத்தான்" என்பது போல, ஈழத்தில் காடுகளை அழித்து பெருங்குளங்களை உருவாக்கிய மன்னன் கயவாகு என அழைக்கப்பட்டான். வாகு வலயம் என்பது கைகளில் அணியும் அணிகலன்களைக் குறிக்கக்கூடியது.

(தொடர்ச்சி அடுத்த வாரமும்...)



# என்ன தான் நடக்கும்?

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், குடியரசுக் கட்சி வேட்பாளரான டொனால்ட் டிரம்ப், ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப் பட்டமை, எதிர்காலத்தில், "அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் பலத்த தாக்கத்தைச் செலுத்தலாம்" என்று கருதப்படுகின்றது. இத்தகைய தாக்கம் சர்வதேச விளையாட்டுலகிலும் பாதிப்பை ஏற்படுத்துவதற்கு வாய்ப்புள்ளதாக விளையாட்டுலக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். குறிப்பாக, 2024 ஒலிம்பிக் போட்டிகள், 2026 உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள், சர்வதேச உதைபந்தாட்டச் சங்கங்களின் சம்மேளன (FIFA) உறுப்பினர்கள் தொடர்பான விசாரணை என்பன அவற்றில் முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமைகின்றன.

அந்த வகையில், 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான போட்டியில், அமெரிக்கா, ஹங்கேரி, பிரான்ஸ் ஆகிய மூன்று நாடுகள் தற்போது களத்தில் உள்ளன. அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரம் அதற்குத் தயாராகவே இருக்கின்றது. இந் நிலையில், லொஸ்ஏஞ்சல்ஸ் நகர மேயரான எரிக் கர்செற்றி, 2024 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளுக்கான நகரம், சில வேளைகளில் மாற்றப்படலாம் என்றதொரு கருத்தை சில தினங்களுக்கு முன்னதாக வெளிப்படுத்தி உள்ளார். எரிக்கர்செற்றி, இம்முறை தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஹிலாரிக்கே தனது ஆதரவைத் தெரிவித்திருந்தார். அவர் மட்டுமல்ல, சர்வதேச ஒலிம்பிக் குழுவில் உள்ள பெரும்பாலான உறுப்பினர்களும் "ஹிலாரி வெற்றி பெறுவார்" என்ற நம்பிக்கையி லேயே இருந்துள்ளனர். ஆனாலும் தற்போது டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்றுள்ளதனால், என்ன வேண்டுமானாலும் நிகழலாம் என்ற தொரு ஐயத்தையே மேயரின் கருத்து வெளிப்படுத்தி நிற்கின்றது.

அதேசமயம், சர்வதேச உதைபந்தாட்டச் சங்கங்களின் சம்மேளனம், 2026 ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில், 48 நாடுகளை உள்வாங்கிப் போட்டிகளை நடத்த உத்தேசித்துள்ளது. அவ்வாறானதொரு நிலையில், போட்டிகளைத் தனியொரு நாடாக அல்லாமல், அயல் நாடுகளுடன் இணைந்து நடத்துவதற்கும் சிந்தித்து வருகின்றது. குறிப்பாக அமெரிக்கா, மெக்சிக்கோ நாடுகள் இணைந்து நடத்துவதற்கான வாய்ப்பு அமைந்தால் அதற்கு முன்னுரிமை கொடுப்பதற்கும் எண்ணியிருந்துள்ளது. ஆனால்டொனால்ட் டிரம்ப் தனது தேர்தல் பிரசாரத்தின் போது, அமெரிக்காவின் அயல் நாடான மெக்சிக்கோவுடனான எல்லையைப் பிரித்து சுவர் எழுப்பப் போவதாக அறிவித்துள்ளமை, (FIFA) விற்குச் சற்று சங்கடத்தை ஏற்படுத்தி உள்ளது. அவ்வாறு ஏதும் நடந்தால், போட்டிகளை அமெரிக்காவும், மெக்சிக்கோவும் இணைந்து நடத்துவதில் சிக்கல் ஏற்பட வாய்ப்புள்ளது.

அத்தோடு 2015 ஆம் ஆண்டு சர்வதேச உதைபந்தாட்டச் சங்கங்களின் சம்மேளன உறுப்பினர்கள் சிலர் ஊழல் புகாரில் சூரிச் நகரில் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த வழக்கு அமெரிக்காவிலேயே நடைபெற்று வருகின்றது. தற்போது ஆட்சிமாறி டொனால்ட் டிரம்ப் ஜனாதிபதி ஆகவுள்ள நிலையில் நீதித்துறைசார் பதவிநிலைக் கட்டமைப்புக்களில் ஏற்படும் மாற்றம் இந்த வழக்கிலும் தாக்கத்தைச் செலுத்தும் என்றே நம்பப்படுகின்றது.

# மறுதலிக்கப்படும் மரபுகள்

அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் தலைவர் மார்க் ரெய்லர், டெஸ்ட் போட்டிகளின் மீதான ஈர்ப்பு, ரசிகர்களிடையே இன்று குறைந்து வருவதனால், அதனைச் சுவாரஸ்யப்படுத்துவதற்காக போட்டி நாட்களின் எண்ணிக்கையை, நான்காகக் குறைக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கையை சில தினங்களுக்கு முன்னர் விடுத்துள்ளார். இதன் மூலம் அடித்தாடும் எண்ணத்தை அது வளர்க்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கோரிக்கையை அவர் மாத்திரமல்லாமல், அவுஸ்ரேலியாவின் முன்னாள் வீரர்களான கிறேக் செப்பல், ஷேன் வோர்ண், நியூசிலாந்து கிரிக்கெட் சபைத் தலைவர் டேவிட் வைட் போன்றவர்களும் ஏற்கனவே முன் வைத்திருந்தாலும், ஐ.சி.சி அதனை நிராகரித்தே வந்துள்ளது. அதற்கு மாற்றாக, பகலிரவு டெஸ்ட் போட்டிகளை நடத்தி, அதன் மூலம் ரசிகர்களின் வரவேற்பைப் பெற்று டெஸ்ட் போட்டிகளின் ஆயுளை அதிகரிக்க முடியும் என அது நம்புகின்றது. ஆனாலும் பகலிரவு டெஸ்ட் போட்டியில், பனியின் தாக்கம் போட்டி முடிவுகளை ஒரு பக்கச் சார்பானதாக்கிவிடுமென பல வீரர்கள் கூறியும், அதனை ஐ.சி.சி இதுவரை செவி மடுக்கவில்லை.

இன்று பெரும்பாலான டெஸ்ட் போட்டிகளின் போது மழையின் குறுக்கீடு இல்லாவிட்டால் போட்டி நான்கு நாட்களிலேயே முடிவுக்கு வந்து விடுவதுதான் யதார்த்தமாக உள்ளது. இருபதுக்கிருபது போட்டிகளின் வருகைக்குப் பிறகு நிலைத்து நின்று ஆடுகின்ற வீரர்கள் உருவாவது ஒப்பீட்டளவில், முன்னரைவிடக் குறைந்தே உள்ளது என்பது கசப்பான உண்மை. ஒரு வீரரின் முழுமையான திறமை டெஸ்ட் போட்டிகளிலேயே வெளிப்படும் என்பார்கள்.

ஆனாலும் கிரிக்கெட்டை பணம் சம்பாதிக்கும் தொழிலாக இன்றைய வீரர்கள் அணுகத் தொடங்கியதன் விளைவாலேயே சிறந்த டெஸ்ட் வீரர்களுக்கு இன்று கையறுநிலை ஏற்பட்டுள்ளது.



இன்றைய காலகட்டத்தில் டெஸ்ட் போட்டிகள் 5 நாட்கள் நடப்பது, மழையால் ஒருநாள் ஆட்டம் முற்றாக ஆடப் படாது விட்டாலும் பெரும்பாலும் முடிவைப் பாதிக்காது என்ற வகையில் வரப்பிரசாதமாக இருக்கிறது எனலாம். அதே சமயம் ஒரு காலத்தில் எட்டு, பத்து நாட்கள் வரை ஆடப்பட்டு வந்த டெஸ்ட் போட்டிகளை 5 நாட்களாகக் குறைத்தது, காலத்தின் தேவை என்றால், 5 நாள் டெஸ்ட் போட்டிகளை மட்டும் இன்றைய சூழலில் மரபார்ந்த விடயமாகத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமா? என்றதொரு கேள்வி எழுவதையும் தவிர்க்க முடியவில்லை.







தொகுப்பு: சி. விமலன்

# சேழியன் குமிழி

தற்போது நடைபெற்று வரும் இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்டத் தொடரில் 11 போட்டிகளில் விளையாடிய மன்செஸ்ரர் யுனைற்றட் கழகம் புள்ளிப் பட்டியலில் 6 ஆவது இடத்தில் இருக்கின்றது. பிரான்ஸ் வீரர் போல் போக்பா, சுவீடன் வீரர் இப்ராகிமோவிக் உட்பட சில நட்சத்திர வீரர்கள் இருந்தும் எதிர்பார்த்தளவு வெற்றியை அதனால் இன்னும் பெற முடியவில்லை. அதன் பயிற்சியாளர் மௌரின்கோ முக்கிய அணிகளுடன் தாக்குதல் ஆட்டத்தை விடுத்து தற்காப்பு ஆட்டத்தையே தொடர்ந்து வருகின்றார். அதிலும் புள்ளிப் பட்டியலில் முன்னணி வகிக்கும் அணிகளுடனான போட்டியில் அவர்களிடம் தோற்று மூன்று புள்ளிகள்ளை இழப்பதை விடப் போட்டியைச் சமநிலையாக்கி ஒரு புள்ளியைப் பெற்று ஆட்டத்தை முடிப்பதே புத்திசாலித்தனம் என்பது அவரது கருத்தாக இருக்கின்றது. அவ்வாறிருந்தும் செல்சி அணியுடனான போட்டியில் மன்செஸ்ரர் யுனைற்றட் தோல்வியே அடைந்திருந்தது.

ஸ்ரோக் சிற்றி உடனான போட்டி 1 : 1 என்று சமநிலையில் முடிந்தாலும், சில புள்ளி விபரங்கள் "மன்செஸ்ரர் யுனைற்றட் அண்மைய ஆண்டுகளில் இந்தளவுக்கு தற்காப்பு ஆட்டத்தை மேற்கொண்டதில்லை" என்று கூறும் அளவுக்கு இருந்துள்ளது. அத்தோடு இங்கி லாந்து வீரர் வெய்ன் ரூனியையும் ஆடும் 11 பேரில் இப்போதெல்லாம் மௌரின்கோ உள்ளடக்குவதில்லை. இத்தகைய அணுகுமுறைகளால் அவர் மீது சில விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையிலேயே ஒலிம்பிக் போட்டியில் 9 தங்கப்பதக்கங்களை வென்ற மின்னல் வேக ஓட்ட வீரரான உசைன் போல்ட் மௌரின்கோவின் தெரிவு மிகச்சரியானதென்றும் மன்செஸ்ரர் யுனைற்றட் சரியான பாதையிலேயே சென்று கொண்டிருப்பதாகவும் சிலதினங்களுக்கு முன்னர் கூறியுள்ளார். அத்தோடு மௌரின்கோ கடினமாக உழைக்கக் கூடியவர் என்றும் அவர் தற்போது மிகச் சிறந்த ஓர் அணியை கட்டமைத்து வருகின்றார் என்றும் கூறியுள்ளார்.

அடுத்த வருடத்துடன் மெய்வல்லுனர் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப்போவதாக உசைன் போல்ட் சில மாதங்களுக்கு முன்னதாகவே அறிவித்திருந்தார். தற்போது ஓய்விற்குப் பின்னர் உதைபந்தாட்டத்தில் கவனஞ்செலுத்தப் போவதாகவும் அதிலும் மன்செஸ்ரர் யுனைற்றட்டில் விளையாடுவதற்கு இடம் கிடைத்தால் எனது வாழ்நாள் கனவு நிறைவேறி விடும் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 19.11.2016 அன்று
107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.